LEMENT TO KUMUDAM

ட்டாக் கல்யாணம்

கோமதி சுவாமிநாதன்

கலாட்டாக் கல்யாணம்

கோமதி சுவாமிநாதன்

குமுதம் அனுபந்தம்—1—6—51

குமுதம் காரியாலயம்,

சென்னை—2.

எல்லா உரிமைகளும்
பதிப்பாளர்களுக்கே.

விலை அணா 8

கலாட்டாக் கல்யாணம்

கதா பாத்திரங்கள்

சந்திரன் : அப்பாவி. எதையும் நம்பிவிடும் சுபாவமுள்ளவன்.

விஸ்வம் : புல்லடியில் ஒளிந்திருக்கும் பச்சை விஷப்பாம்பு; வஞ்சகன். முகபாவத்திற்கும் இதயத்திற்கும் அவன் விஷயத்தில் சம்பந்தமில்லை. பசையில்லாமற்போனாலும் ஷோக்காக இருக்க விரும்பும் பேர்வழி.

அப்பு : சினிமாவில் நடிக்க வேண்டும், ரேடியோவில் பாட வேண்டும், பெரிய மனிதனாகவேண்டும் என்ற லட்சியங்களுள்ள அரைக்கிறுக்குப் பரிசாரகப் பையன்.

நரசிம்மையர் : போட்டிப் பந்தயக் கிறுக்கு. கொஞ்சம் பத்தாம்பசலி. பிள்ளை தான் சொல்வதைக் கேட்க வேண்டுமென்ற அபிப்பிராயமுள்ளவர்.

வனஜா : கதாநாயகி, அழகி. ரசிகை.

கோபாலய்யர் : பிள்ளைக்குப் பயப்படும் ஏழைத் தகப்பனார். பணக்காரப் பெண்ணிற்கு மாமனாராக வேண்டும் என்று விரும்புபவர். வெகுளி.

நடராஜய்யர் : மாஜி நாடக மேடை நடிகர். தற்கால சமையல்காரர். செவிட்டுப் பெண்ணின் தந்தை.

மற்றும் பலர்

தேவி பிரஸ் லிமிடெட், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை—2

காட்சி 1.

கல்யாணம் என்றால் கசக்கிறதோ?

இடம்: கலைவாணி கல்லூரி ஹாஸ்டலில் சந்திரனின் அறை.

சூழ்நிலை: சந்திரன், அவன் சகமாணவர்களான சேகரன், நடராஜன், மூர்த்தி, கோபாலன் முதலியோர் ‘முன்னூற்றிநாலு’ ஆட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். சேகருக்கு இடம் இல்லாததால் வெறும் பார்வையாளனாக இருக்கிறான்.]

மூர்த்தி: (தன் கையிலிருந்த சீட்டுக்களில் ஒன்றை உருவிக் கீழே போட்டுக்கொண்டே) ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே பகவானானவர் என்ன சொல்கிறாரென்றால்...

கோபாலன்: பகவான் என்னப்பா சொன்னார்?

மூர்த்தி: ஹே பக்தா! பரந்த ‘பிளேயிங் கார்ட்ஸ்’ யுத்த களத்திலே துருப்பு பத்தாம் பந்தைத் தூக்கிப் போடு! பக்கத்துக் கையிலே இருக்கும் ஜாக்கி பதறிக்கொண்டு...

கோபாலன்:...முப்பத்தி எட்டாவது அக்ஷரேகையை முதலில் வேகமாய்த் தாண்டி வடக்கே போன அமெரிக்கப் படைகள் திரும்பிவந்த அவசரத்தில் கீழே வந்து விழும் என்று சொன்னாராக்கும்? திருட்டுப் பயல், கழுத்தை வளைச்சு என் கைச்சீட்டைப் பார்த்துவிட்டாய்! அவ்வளவுதானே? இந்தா, தொலைத்துக்கொள்.

[ஜாக்கியைக் கீழே போடுகிறான்.]

மூர்த்தி : கழுத்தையும் வளைக்கவில்லை, கண்ணையும் வைக்கவில்லை! எல்லாம் கணக்குத்தான்! ஒரு இறக்கம் ஆகிவிட்டதுன்னு அப்புறம் யார் கையிலே இன்ன சீட்டு இருக்குன்னு நிகாப்பட்டுப் போகும்!...மேலும் உன் கைதான், கல்யாணப் பந்தலிலே பிள்ளையாண்டான் மணப் பெண்ணின் கையை அழுத்துவதுபோல ஒரு சீட்டைத் தொட்டுக்கொண்டே இருக்கே! அதிலேயிருந்தே உன்னிடம் பெரிய சீட்டு இருக்குன்னு தெரிய வில்லையா?

நடராஜன் : முதல் பிடியிலே போட்டிருந்தான்னு பிடியை மடக்கி யிருக்கலாமல்லவா?...அமுக்கி வச்சு, கொள்ளை லாபம் அடிக்கலாம்னு பார்த்தான்! அந்த ஜாக்கி கொள்ளையிலே போய்விட்டது!

சந்திரன் : நம்ப மூர்த்தி என்னவோ, இந்த மூன்னூற்றிநாலு ஆட்டத்திலே புலியாகத்தானிருக்கிறான். பொதுவாகவே மனித சிருஷ்டி யிலே ஒரு துறையில் குறையிருந்தால் மற்றோர் துறையில் சாமர்த்தியம் பிரகாசிக்கிறது என்பது வாஸ்தவம்தான்.

மூர்த்தி : என்னடா! தரையையும் நவாபையும் கூப்பிடுகிறாய்? சீட்டைப் பார்த்து இறங்கு! என்னத்தையாவது உருவிப் போட்டுவிட்டு, அப்புறம் ஆற்றங்கரையிலே குளித்துக்கொண்டிருக்கிற ஆரணங்கு சோப் பைக் கை நழுவவிட்டுவிட்டு விழிக்கிறாப்போல லபோ லபோன்னு அடித்துக் கொள்ளாதே!

சந்திரன் : லபோ லபோன்னு அடித்துக்கொள்ள என்னிடம் பிரமாத சீட்டு இல்லை. இந்தா, ஒரு எட்டாம் பந்தைக் கழித்துத் தொலைக் கிறேன்.

மூர்த்தி : இல்லாதபோனால் உன்னிடம் துருப்பா இருக்கிறது, மேல் வெட்டுவெட்ட? என்னவோ சுப்ரமணியசுவாமி கோவிலில் அர்ச்சனை பண்ணுகிற பூசாரிமாதிரி, சீட்டை உருவி உருவிப் போட்டுக்கொண்டிருக் கிறாய்! சும்மா பாடத்தைப் பொட்டை உருப்போட்டுப் பரீட்சைப் பேப்பரிலே வாந்தி எடுக்கறாப்போலே சீட்ட ாட்டத்தை நினைத்துவிட்டாயாக்கும்?

சேகர் : சபாஷ்! சபாஷ்! மூர்த்தி. சரியாய்ப் பழி வாங்கிவிட்டாய்!

மூர்த்தி : இல்லாதபோனால் நான் சந்திரன் சொன்னதைக் கவனிக்க வில்லை என்று நினைத்தாய்? மனித சிருஷ்டியைக் கண்ட பிரும்மா வோல்லியோ? பெரிய புரொபசர்! எனக்கு "படிப்பு வரவில்லை! சீட்டாட்டம் வருகிறது!" என்கிறான்.

குருவில்லா வித்தையும்
துருப்பில்லா ஆட்டமும்

ஒரு பைசாக்கூடப் பெறாது என்று ஒரு மகானுபாவன் சும்மாவா திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்?

சந்திரன் : அது யாரப்பா அந்தப் பெரியார்? கீர்த்திவாய்ந்த மூர்த்திப் பெரியாரா?

சேகர் : அது பெரியாறோ! வைகையோ! தாமிரபரணியோ? நீ சீட்டைப் பார்த்துப் போடு! அடுத்த இறக்கம்! ஆடுதன்!

சந்திரன்: இந்தப் பெரியார் என்ன தெரியுமா சொல்லுகிறார்? கேள்:

ஜாக்கியில்லா ஆட்டத்திலோ சத்துமில்லை
ஜாலியில்லா வாழ்க்கையிலோ சத்துமில்லை

இதோ ஜாக்கி! கோபாலா, சீட்டை மடக்கு!

நடராஜன்: மூர்த்தி! நம்ம சந்திரனும் கொஞ்சம் படிச்சிருக்கான். அவன் குரு விஸ்வம் இந்தக் கலையையும் கொஞ்சம் சொல்லிக் கொடுக்காமலா இருந்திருக்கப்போகிறான்?

சேகர்: இங்கே இல்லாதவன் மண்டையை ஏன் உருட்டுகிறாய்? மேலும் விஸ்வம் சந்திரனுக்குக் குரு இல்லை...

சந்திரன்: சேகர்! ரொம்பத் தாங்க்ஸ் அப்பா! எனக்குச் சாதகமாகப் பேச நீ ஒருவனாவது இருக்கிறாயே!...

மூர்த்தி: ...முட்டாள்! அவசரப்படாதே! 'விஸ்வம் உனக்குக் குரு இல்லை; ஆனால் தெய்வம்.' என்று சொல்லவர்தான் அவன்!...அப்படித் தானே சேகர்?

சேகர்: நீ ஒருத்தன்! சும்மா இரு! என்னத்தையாவது வம்பு இழுத்துவிடாதே! ஏற்கனவே விஸ்வம் ஒரு தினுசான பேர்வழி. அப்புறம் அவன் கோபம் விஸ்வரூபம் எடுத்துவிடும்! சந்திரா, நான் சொல்றேன்னு கோபித்துக் கொள்ளாதே! அந்த விஸ்வம் உன்னை ரொம்ப 'டாமினேட்' பண்ணுகிறான்! அவனைப்பற்றிப் புரொபசர்களுக்குக்கூட நல்ல அபிப்பிராயம் இல்லை.

மூர்த்தி: புரொபசர்களுக்கு மாத்திரமென்ன? எனக்குக்கூடத்தான்! சந்திர கிரகணத்தின்போதுதான் வானத்துச் சந்திரனை, ராகு, கேது என்ற பாம்புகள் விழுங்குகின்றனவாம்; ஆனால் இந்த ஹாஸ்டல் சந்திரனை விஸ்வம் என்கிற விஷப்பாம்பு எப்போதும் விழுங்கிக்கொண்டே இருக்கு!

சந்திரன்: நான்சென்ஸ்! இரண்டுபேர் அந்நியோந்யமாக இருந்தால் அதைக் காணவே உங்களுக்குச் சகிக்காதோ? விஸ்வம் ஒரு லட்சிய சிநேகிதன்! ஐடியல் நண்பன்! அவன் மனோதிடத்திலும் உறுதியிலும் கோடியில் ஒரு பங்குகூட உங்களுக்கு வராதே!

நடராஜன்: (சீட்டுக்களைப் பொறுக்கிப் பெட்டியில் வைத்துக் கொண்டே) அவன் ஏதோ சொக்குப்பொடி போட்டிருக்கான்; இல்லாத போனால், விஸ்வத்திடம் நமக்கெல்லாம் புரியாத மகோன்னதத் திறமையும் சக்தியும் சந்திரனுக்கு மாத்திரம் தெரிவானேன்?

மூர்த்தி: வாஸ்தவம்தான்! நாம் எல்லோருமே கண்களை 'டெஸ்ட்' பண்ணிக்கொள்ளவேண்டியதுதான்!

சேகர்: ஏய், நடராஜா! என்ன, ஆட்டத்திற்கு மூடுவிழாக் கொண்டாடுகிறாய்? நான் அப்போதே முதல் காத்துக்கொண்டிருக்கிறேன், ஐந்துபேரிலே அமெரிக்கன் ஆஸ் ஆடுவோமே!

[விஸ்வம் வருகிறான்]

விஸ்வம் : மடப்பசங்களா! கழுதையில் கூடவா அயல்நாட்டு மோகம்! இந்தியக் கழுதைக்கு என்ன குறைச்சலாப் போச்சு? இரண்டு உதை லேசா விட்டாலே இருபது பல் கீழே விழுமேடா?

நடராஜன் : ஓ! ஸ்ராட் ஆனரபிள் விஸ்வமா? வா அப்பா! வா! ஆங்கிலத்திலே ஒரு வசனம் உண்டு. 'சாத்தானை நினை! அது உடனே தொப் என்று உன் முன்னால் குதிக்கும்!' என்று சொல்லுவார்கள்! இப்போதுதான் உன்னைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நீயே வந்து விட்டாய்!

விஸ்வம் : வாஸ்தவம்டா நம்பி குட்டிச்சாத்தான்! இனம் இனத்தைத் தானே சேரும்?... இங்கே என்ன கான்பெரன்ஸ் நடக்கிறது?

சேகர் : ...நடந்தது! நாலு ஜாதி மன்னர்கள் படைகளுடன் எங்களிடம் சரணாகதி அடைந்தார்கள். அவர்களையெல்லாம் ஐக்கியப்படுத்தி முன்னூற்றி நாலு ஆடினோம்!

சந்திரன் : விஸ்வம்! நீயும் உட்காரேன்! ஒருகை குறைந்ததால் சேகர் காத்துக் கொண்டேயிருக்கிறான்!

விஸ்வம் : ஆடினால் பிரிட்ஜ் ஆடணும்! இதெல்லாம் என்னடா ஆட்டம்?

மூர்த்தி : அவர் பிறவி இஞ்சினீயர்டா! அவர் சீட்டாட்டத்திலே பாலம் கட்டுவார்! வாழ்க்கை ஆட்டத்திலே ஆகாசக் கோட்டை கட்டுவார்!

விஸ்வம் : ஆமாம்! நீதானே அந்த வேலைகளுக்குச் செங்கல், சுண்ணாம்பு எடுத்துத் தரும் கூலி வேலை பார்க்கிறாய்? பிறர் சந்தோஷமாக இருக்கிறதைக் காணச் சகிக்காத பெஸிமிஸ்ட்!...சந்திரா, மறந்தே போய் விட்டேன்! இந்தா, ஒரு கடிதம் இப்போதுதான் போஸ்ட்மேன் கொடுத்து விட்டுப் போனான்.

(ஒரு கவரைக் கொடுக்கிறான்)

சந்திரன் : ஓஹோ! அப்பாதான் எழுதியிருக்கிறார்! விலாசத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா?

விஸ்வம் : சரிதான்! அப்படியானால் பிரித்துப் படிக்க வேண்டிய அவசியமே இல்லை. அவர்தான் ஒரு குட்டி லெக்சரை ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பாணியில் அமைத்து வாரம் தவறாமல் எழுதுகிறாரே! 'காலையில் எழுந்திரு' 'அரட்டை அடிக்காதே' 'புஸ்தகத்தைக் கட்டிக் கொண்டு அழு' 'சிரிக்காதே' 'பேசாதே' 'தூங்காதே' 'நண்பர்களைக் கண்டால் நாணி ஒளிந்து கொள்' என்று எழுதியிருப்பார்! பேசாமல் ஒரு ஆயிரம் பிரதி மலிவாக அச்சடித்துத் தருகிறேன். உங்க அப்பாவிற்கு அனுப்பி வையேன்.

[சந்திரன் கடிதத்தைப் படிக்கிறான்]

சந்திரன் : அடடா! இது அந்த ஆத்திசூடியில்லை! இது ஒரு புது ஆபத்துச்சுவடி! நீயே படி!

[கடிதத்தைக் கொடுக்கிறான்.]

விஸ்வம் : சபாஷ்! சபாஷ்! இந்த ஜீவனில்லாத ஹாஸ்டல் மெஸ் சாப்பாட்டிலிருந்து நாலு நாள் லீவு கிடைக்கும்! கல்யாணம் என்றால் கசக்கிறதோ? மூர்த்தி! இப்போதே வயிற்றைத் தயார் செய்து கொள். நம்ப சந்திரனுக்குக் கல்யாணம் வரப்போகிறது! இந்த வாரமே பெண் பார்க்கப் போகிறான்! அதுதான் இந்தக் கடிதம்!

சேகர் : சந்திரனுக்குக் கல்யாணமா! அட எழவே! இப்பவே அவன் இரைஞ்சு பேசமாட்டேனென்கிறான்! இனிமேல் தொண்டையிலிருந்து சப்தமே வராது!

சந்திரன் : இந்த அப்பாவுக்குப் பைத்தியம் போலிருக்கு !

நடராஜன் : என்? நீ கேட்டதைவிட கூடவே ரூபாய் அனுப்பி விட்டாரோ?

சந்திரன் : போடா போ! திடீர்னு ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறாரே? இதைத்தான் சொல்கிறேன். கல்யாணத்தையும், குறுக்கெழுத்துப் போட்டிப் பந்தயத்திற்கு அனுப்பும் கூப்பன்போல் எண்ணி வெகு சகஜமாக எழுதியிருக்கிறார்! யாரோ ஒரு ஜனக மகாராஜா எனக்காகப் பெண்ணைப் பெற்று நிறுத்தி வைத்திருக்கிறாராம்! நான் இந்த வாரமே போய் அவர் வீட்டு டிபனுக்கு வைத்திருக்கும் பஜ்ஜியை முறித்து, பாணிக்கிரகணத்துக்கு சம்மதம் சொல்லணுமாம்! எப்படிப்பட்ட ஆபத்து பார்த்தாயா ?

சேகர் : 'கார் உலாவும் ஜீப் உலாவும் மயிலையில் கம்பி ஜன்னல் வழியாய்க் கண்ட வனிதையை' என்று கூடப் பாடலாம் போலிருக்கிறது! ஆனால் பெண்தான் ஏதோ அயல் ஊரில் இருக்கிறதாகத் தெரிகிறது!

சந்திரன் : உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது!

மூர்த்தி : உனக்கு ஒரே இன்ப வேதனையாக இருக்கிறதோ ?

விஸ்வம் : சந்திரா! பெண்ணின் பேரைக் கவனித்தாயா ?...வனஜா! நன்றாக இல்லை?...ஜோரான பெயரல்லவா ?

சந்திரன் : பெயரில் என்னப்பா இருக்கிறது ? குணம் எப்படி இருக்கோ? கல்யாணம் பண்ணிக் கொண்டபிறகு 'வனம், ஜா' என்று காட்டுக்கு சந்நியாசியாகப் போகச் செய்யக் கூடியவளாக இருந்தால் ?

சேகர் : எங்கள் ஊரில் சந்நியாசிக் கிராமம் என்று ஒரு தெரு இருக்கிறது. அந்தத் தெருவிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஒரு டஜன் குழந்தைகளுக்குக் குறைவில்லை! நீயும் சந்நியாசியாக குடும்பத்துடன் அந்தத் தெருவில் போய்க் குடியிரு! சரியாய்ப் போய்விடும்!

சந்திரன் : விஸ்வம்!...வா! சற்று நிம்மதியாக யோசிக்க வேண்டும். நாளைக்குப் பெண்ணின் தகப்பனார் என்னைக் கூட்டிக்கொண்டு போக வருவதற்குள் ஒரு முடிவு செய்ய வேண்டும் !

மூர்த்தி : முகூர்த்தத்தை உடனே வைத்துக் கொள்ள வேண்டுமென்ற முடிவா ?

சேகர் : என்னப்பா! ராஜா ராணிக்குக் கல்யாணம் பண்ணி இரண்டு ஆட்டம் ஆடலாம் என்றால், நிஜக் கல்யாணம் குறுக்கே வந்து நிற்கிறது !

காட்சி 2.

விஸ்வத்தின் உபதேசம்

[மறுநாள் இரவு. சுமார் எட்டுமணி. சந்திரனின் அறை. சந்திரனும் விஸ்வமும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்]

விஸ்வம் : சந்திரா! எதுக்கடா இப்படி அழுது வடிந்தாற்போல் உட்கார்ந்துகொண்டிருக்கிறாய்? ஆயிரம் ரூபாயுடன் ரேஸுக்குப்போய்விட்டு, திரும்பி வர பஸ்ஸிற்குச் சில்லறை இல்லாதவன்கூட உன்னைப்போல் உற்சாகமிழந்து இருக்கமாட்டான்!

சந்திரன் : ரேஸுக்குப்போய் வேடிக்கையும் பார்த்துவிட்டு, துட்டையும் தொலைத்துவிட்டு வருபவன் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் ரேஸிலே ஓடும் குதிரைகளுக்கல்லவா களைப்பும் அலுப்பும் தெரியும்? வாழ்க்கை ரேஸில் எங்க அப்பா என்னைக் குதிரையாகத்தான் நினைத்து ஓட்ட முயற்சிக்கிறார். அவர் விருப்பப்படி நான் ஓடினால் வரதக்ஷிணை ரூபாயை ஒரு தட்டுத் தட்டிக்கொண்டு போவார்!

விஸ்வம் : சபாஷ்! சபாஷ்! என் அப்பனே, ரேஸ் குதிரைக்கும் உனக்கும் எள்ளுத்தாண்டா வித்தியாசம்! என்னத்தையோ புஸ்தகத்திலே இருப்பதை உருப்போட்டுவிட்டு உளறுகிறான்! வாழ்க்கையிலே கல்யாணம் வறண்ட பாலைவனத்திலே ஓயஸிஸ் போலேடா!

சந்திரன் : பாலைவனமும் ஓயஸிஸும் ஜாகராபி புஸ்தகத்திலேயே இருக்கட்டும் பிரதர்! 'கல்யாணம் என்பது ஒரு முற்றுகையிடப்பட்ட கோட்டைபோல. வெளியே இருக்கிறவர்கள் உள்ளேபோக முயற்சிக்கிறார்கள். உள்ளேயிருக்கிறவர்கள் வெளியே வரத் தவிக்கிறார்கள்!'

விஸ்வம் : நீ சொல்வதை உண்மை என்று எடுத்துக்கொண்டால், ஜவுளிக் கடைகளிலெல்லாம், பாதிச் சரக்குக்கு மேல் காஷாய வஸ்திரங்களாகத்தான் இருக்கவேண்டும். ஆனால் நடைமுறையில் அப்படியில்லையே?

சந்திரன் : இந்த விதண்டாவாதமும் குதர்க்கப் பேச்சும் எதற்கு? எனக்கு இப்போது கல்யாணம் வேண்டாம்! அவ்வளவுதான். இந்த அப்பா எதற்கு அவசரக் குடுக்கையாக அலைகிறாரோ தெரியவில்லை! இன்னும் பரீட்சை மூன்று மாதம்தானே இருக்கிறது? நிம்மதியாகப் படிக்க வேண்டாமா? நம்ப நாட்டு ஜனப் பெருக்கத்தையும், உணவுப் பஞ்சத்தையும் அவுன்ஸுக் கணக்கிலே சாப்பிட்டு அரை வயிற்றை நிரப்புவதையும் பார்க்கும்போது, கல்யாணம் என்று நினைப்பது பெரிய தேசத் துரோகமான காரியம்!

விஸ்வம் : பிரமாதம்! பிரமாதம்! இது மாத்திரம் ஒரு பிரசங்க மேடையாக இருந்தால், உன் பேச்சிற்கு விழும் 'அப்ளாஸ்' அமெரிக்கா வரைகூடக் கேட்டிருக்கும்!...பிருஹஸ்பதி! பரீட்சை இந்த மார்ச்சிலே 'கோட்'டானால் செப்டம்பரிலே ஒரு கை பார்க்கலாம்! அதிலும் மூக்கு உடைபட்டால் அடுத்த மார்ச்சு இருக்கவே இருக்கு! ஆனால் ஒரு நல்ல இடமா, அப்ஸரஸ் போல ஒரு பெண் நீ நினைக்கும் போது கிடைத்து விடுவாளோ?: உனக்கே கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று தோன்றும் போது யாராவது முப்பத்தி ஐந்து வயதுக் குமாரி முகமெல்லாம் சுருங்கி வந்து சேருவாள், வாடல் கத்திரிக்காய் போல!

சந்திரன் : எங்க அப்பா உனக்கு ரகசியமாக எழுதி ஏதும் கான்வாஸ் பண்ணச் சொல்லியிருக்கிறாரா? இல்லாதபோனால் அந்த ராமசாமி அய்யர் தான் உனக்கு ஏதும் லஞ்சம் கொடுத்திருக்கிறாரா? உன் பிரசாரம் என்னவோ வெகு பலமாகத்தானிருக்கிறது. 'மினிஸ்டர் பார் மாட்ரிமோனி' யாகக்கூட உன்னை நியமித்துவிடலாம் போலிருக்கிறது!

விஸ்வம் : இந்த விஸ்வம் எந்தச் சந்தர்ப்பத்திலும், பிறத்தியார் பேச்சைக் கேட்டுக் கொண்டு ஆடமாட்டான். எனக்கு உன் அப்பா கறுப்போ சிவப்போ என்று கூடத் தெரியாது. நான் பொதுவாகப் பேசுகிறேன். கல்யாணம் என்றதும் ஏன் காலைக் கையை உதறுகிறாய் என்றுதான் புரியவில்லை. பெரியவர்கள் நாலும் யோசித்துத்தான் செய்வார்கள். பெண்ணைப் போய்ப் பார்த்துவிட்டு அபிப்பிராயம் எழுது என்றுதானே உன் அப்பா சொல்லியிருக்கிறார்? உடனே போய்க் கல்யாணம் பண்ணிக்கொண்டு தம்பதி சகிதமாய் என்னை வந்து நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள் என்று எழுதவில்லையே?...பயந்தாங்குள்ளி!

சந்திரன் : உன்னைப்போல எல்லாவற்றையும் நிதானமாய் யோசித்து முடிவு கட்ட எனக்குத் தெரிகிறதா?...நான் என்னவோ கல்யாணப் பேச்சு என்று காதில் விழுந்ததுமே, ஹோமப் புகை, தனிக் குடித்தனம், புடவை யுத்தம், பிறந்த வீட்டுப் பெருமை எல்லாவற்றையும் பற்றிக் கற்பனை செய்து கொண்டு அவஸ்தைப் படுகிறேன்!...நீ சொல்வது போல், தீர்மானமெல்லாம் பெண்ணைப் போய்ப் பார்த்தபிறகு தானே?...அப்புறம் ஜட்ஜ்மெண்டு நம் கையில் இருக்கிறது. பெண் பிடிக்கவில்லை என்றால் தீர்ந்தது!

விஸ்வம் : அதைத்தான் நானும் சொல்ல வந்தேன்!...இந்த விஸ்வம் சாதாரண ஆசாமியில்லே. ஒரு ஜீனியஸ்! கொஞ்ச நாளிலே தன்னாலே தெரிந்து கொள்வாய்! என்னோட ஜீனியஸுக்குக் காரணம், ஸ்திரபுத்தி, ஸ்டெடி மைண்டு! இன்றைக்குப் புலிப் பால் சாப்பிட வேண்டுமென்றால் சாப்பிட்டுத்தான் தீருவேன்! 'ஐயையோ! புலி உறுமுமே, அதைப் பார்த்தால் பயமாயிருக்குமே' என்று யோசிக்கமாட்டேன்! திடீர்னு ஒரு நாள் என் புகழ் உலகெல்லாம் பரவி நிற்கும் பார்.



சந்திரன் : உன் காற்று கம்ப மேலும் வீசட்டும்!... சரி!

அந்த ராமசாமி இன்று என்னைச் சந்திப்பார் என்று அப்பா எழுதியிருந்தார். ஆனால் அந்த ஆசாமியைக் காணுேமே?

விஸ்வம் : அது எப்படிப்பட்ட பழைய பஞ்சாங்கமோ? எழு மணி ரயிலுக்கு வந்து, எங்காவது கோவில் குளத்தில் ஜபம் பண்ணிவிட்டு வந்து சேரும்... எதற்கும், மேஜைமேலிருக்கும் சிகரெட் பெட்டிகளை எடுத்து மறைவாய் வை. ஒருவேளை அதனல் பெண் கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டால்?

சந்திரன் : அப்படிச் சொன்னல் அவர் பெரிய மகானுபாவன்! ஆனல் அதோடு நிற்கவேண்டும்! அப்பா காதில் எதும் ஊதிவைத்தாரோ, அப்புறம் பிராயம்தான்! அப்பா என்னை உயிரோடு கொளுத்திவிடுவார்!

விஸ்வம் : நரசிம்மையர் ஹிரண்யாவதாரம் எடுத்து, "ஹே பிரஹலாதா! நீ சதா புகைக்கும் அயல் நாட்டு சிகரெட் எங்கிருக்கிறது?" என்று கேட்டுக் கொண்டே திடீரென்று இங்கு வந்து விட்டார் என்று வைத்துக் கொள். அப்போது என்ன செய்வாய்?

சந்திரன் : "இதோ அலமாரியில் இருக்கிறது! அடுத்தாற்போல் கோட் ஸ்டாண்டில் தொங்கும் ஜிப்பாப் பையில் இருக்கிறது! பெட்டிக்குள் இருக்கிறது! புஸ்தக மேஜைமேலிருக்கிறது! ஆயாச விநாச ஆனந்த ஊற்ருகி என்னை ஆட்கொண்டு அமர்ந்திருக்கும் கோல்டுபிளேக் சிகரெட்டை உங்கள் கோபம் என்ன பண்ணும்?" என்பேன்!... அவ்வளவுதான்! எங்க அப்பா இந்த ஹாஸ்டலையே 'லங்காதகனம்' ஆக்கிவிடுவார்!

விஸ்வம் : அப்புறம் அந்த ஹனுமார் கிரிமினல் கோர்ட்டிலே போய் நிற்கவேண்டியதுதான்!... உங்க அப்பா சுபாவத்திலேயே ரொம்பக் கோபக்காரரோ?

சந்திரன் : அவருக்கென்னவோ குணத்திற்குத் தகுந்த பெயர் பொருத்தமாக அமைந்து விட்டது! ஒருநாள் ரசத்தில் அம்மா கொஞ்சம் உப்பை அதிகமாகப்போட்டு விட்டாள் என்பதற்காக, பாதிச் சாப்பாட்டில் எழுந்திருந்து எச்சில் கையால் வீட்டிலிருந்த காலுபடி உப்பையும் அப்படியே அம்மா தலையில் அபிஷேகம் பண்ணி விட்டார்!

விஸ்வம் : பேஷ்! பேஷ்! ரொம்ப ரசமான விஷயமாக இருக்கிறதே.

[ராமசாமி திடீரென வருகிருர்.]

ராமசாமி : நான் வரும் சமயம் நல்ல சமயம்தான் போலிருக்கிறது. உங்கள் பேச்சும் ரசமான விஷயத்தைப் பற்றித்தான் இருக்கிறது. வாழ்க்கையிலே சாப்பாட்டை ரசிக்காத மனுஷன் மரம் மட்டைக்குத்தான் சார் சமானம்! யார் ஒருவன் போஜனத்தை அனுபவித்துச் சாப்பிடுகிருனே அவன் சர்வ கலைகளையும் ரசிக்கக்கூடியவன். என்னுடைய பிரின்ஸிபிளே அதுதான்!

[ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டு உட்காருகிருர்]

சந்திரன் : நீங்க யாரு தெரியலியே...?

விஸ்வம் : நீங்க நம்ப சாரங்கபாணியோட பிரதரோ?

ராமசாமி : ஆமாம்! சாரங்கபாணியை உங்களுக்குத் தெரியுமா?

விஸ்வம் : சாரங்கபாணியைத் தெரிந்து கொள்ளாதபோனால் எங்களுக்குத் தினசரி சாப்பாடு நடக்குமா? எங்க ஹாஸ்டல் மெஸ் ஹெட் குக் சாரங்கபாணியோட சமையல்னுதான் ஜகப்பிரசித்தமாச்சே! நேற்று ராத்திரி முள்ளங்கி சாம்பார் வைத்திருந்தார்! அதை ஒரு கை பார்த்துவிட்டு நாங்க மூர்ச்சித்தே விழுந்து விட்டோம்!

ராமசாமி : அடடா! நீங்கள் சரியாக...

சந்திரன் : சாரங்கபாணியின் சமையலைச் சரியாக ரசித்துச் சாப்பிட வேண்டும் என்பதற்காகவே இதோ என் நண்பர் ஜூனியர் வகுப்பிலேயே இரண்டு தடவை கோட் அடித்தார். நான்கூட இந்தத் தடவை பாஸ் பண்ணி, கலாசாலையை விட்டுப் போய்விட்டால் அவர் தயாரிப்பை ரசிக்க முடியாதே என்று கவலைப்படுகிறேன்!

விஸ்வம் : அவரோட சகோதரராக இருக்கிறீர்களே, நீங்களும் எங்காவது ஹாஸ்டலில் இருக்கிறீர்களா? இல்லாதபோனால் சொந்த பிஸினஸ் ஏதும்...

ராமசாமி : மிஸ்டர்! என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள்! நீங்க சொல்ற சாரங்கபாணி வேறு! என் தம்பி சாரங்கபாணி ஐ. ஸி. எஸ். உணவு இலாகாவிலே உதவிக் காரியதரிசியாக இருக்கான். என் பேரு ராமசாமி. நரசிம்மையர் பையன் சந்திரன் என்பவரைச் சந்திக்க வந்தேன். இதுதான் அவர் ரூமா? இல்லாதபோனால் வேறு நம்பரா? இன்னும் கொஞ்ச நேரம் நான் வாயை மூடிக்கொண்டிருந்தால் என்னையே கூடக் கொஞ்சம் வெங்காய சாம்பாரோ தக்காளி ரசமோ வைத்துக் கொடுக்கச் சொல்லி விடுவீர்கள் போலிருக்கிறது!

சந்திரன் : சார் மன்னிக்கணும், மன்னிக்கணும். நான்தான் சந்திரன். அப்பா எழுதிய கடிதம் வந்தது. நீங்கள் வருவீர்களென்று தெரியும். உங்களை முன்னால் பார்த்திராததாலும், சாரங்கபாணி என்ற பெயர்க் குழப்பம் ஏற்பட்டுவிட்டதாலும், பேச்சு வேறு பாதையில் திரும்பி விட்டது! எங்கள் ஹாஸ்டல் சாரங்கபாணி ஜாடையாகவே நீங்கள் இருக்கிறீர்கள்!...

ராமசாமி : பரவாயில்லை! நானும் மன்னிப்புக் கேட்கவேண்டிய நிலையில்தான் இருக்கிறேன். நான் வந்தவுடனேயே யாரென்று சொல்லியிருந்தால் இந்தக் குழப்பம் ஏற்பட்டிருக்காதல்லவா? உங்கள் பேச்சில் நானொன்று கலந்துகொண்டுவிட்டேன். பரவாயில்லை. அப்படிப் பேசியிராவிட்டாலும் உங்கள் ரசிகத் தன்மையைத் தெரிந்துகொண்டிருக்க முடியாதல்லவா? நம்ப பரம விரோதியாக இருந்தால்கூட அவனிடம் போஜன ரசிப்பு இருந்தால் அவனை அப்பிரிஷியேட் பண்றதுதான் என்னுடைய பிரின்ஸிபிள்!

விஸ்வம் : நீங்க என்ன, மாப்பிள்ளையை அதற்குள்ளே விரோதியாகக் கருதிவிட்டீர்கள்? தலை தீபாவளிக்குத் தங்கக் கூஜாவும், சாந்தி முகூர்த்தத்திற்குத் தங்கக் கட்டிலும் கேட்கும்போதல்லவா அப்படி நினைக்க வேண்டும்?... சந்திரா! நீ சாருடன் பேசவேண்டியது எவ்வளவோ இருக்கும்?... நான் என் இடைஞ்சலாக இங்கு இருக்கிறேன், வரட்டுமா?

சந்திரன் : (ராமசாமியைப் பார்த்து) இவர்தான் என் ஆப்த நண்பர் விஸ்வம். என் உயிருக்குயிரான சிநேகிதர். ஏய் விஸ்வம்! எங்கே நழுவப் பார்க்கிறாய்? உட்கார்!

ராமசாமி : ஓஹோ! அப்படியா? அப்படியானால் அவரிடம்தான் அதிக விஷயம் பேசவேண்டும்! என்ன மிஸ்டர் விஸ்வம், நீங்கள்தானே பிரின்சிபல் மாப்பிள்ளைத் தோழன்! நாளைக்கு உங்கள் நண்பரை அழைத்துக் கொண்டு எங்கள் ஊருக்கு விஜயம் செய்யவேண்டும்!

விஸ்வம் : விஸ்வாமித்திரர் ராமச்சந்திரமூர்த்தியை அழைத்துக் கொண்டு மிதிலைக்கு வந்தமாதிரியா?

ராமசாமி : ஆமாம்! ஆமாம்! அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்களேன்!

சந்திரன் : பெயர்கூடத்தான் பொருத்தமாக இருக்கிறது பாருங்களேன்! விஸ்வத்திற்கும் விஸ்வாமித்திரருக்கும் அதிக வித்தியாசமில்லையே!

ராமசாமி : மிஸ்டர் சந்திரன்! உங்க தகப்பனாருடன் சமீபத்தில் தான் எனக்கு அறிமுகம் ஏற்பட்டாலும் நாங்கள் நெடுநாளைய அன்பர்கள் போல் ஆய்விட்டோம். கடவுள் கிருபையால் இந்தச் சம்பந்தமும் பூர்த்தியாகி விட்டால்...

விஸ்வம் : ...சம்பந்தி ஸ்வாமிகள் அன்பைக் குறைத்து அதிகாரத்தை உயர்த்துவாரோ என்று பயப்படாதீர்கள்! எங்கள் சந்திரனின் குணத்தையும் நீங்கள் போகப்போகத் தெரிந்து கொள்வீர்கள். அவனும் அவன் தகப்பனாரும் தங்கமான குணம் வாய்ந்தவர்கள்.

சந்திரன் : ஏய்! உன் பிரசார இலாகாவைக் கொஞ்சம் மூடு!

ராமசாமி : அவர் சொல்றதிலே என்ன தப்பிதம்?...என் பெண் வனஜாவும் இந்தக் காலத்துப் பெண்களைப்போல் சடபுடக் குச்சிமாதிரியோ சீனி வெடிமாதிரியோ படபடக்கமாட்டாள். ரொம்பப் பதவிசான பெண். எஸ். எஸ். எல். ஸி பாஸ் பண்ணியிருக்கிறாள். சங்கீதத்திலே நல்ல ஞானம். ஹிந்தியிலே பரீட்சைகள் பாஸ் பண்ணியிருக்கிறாள். இதெல்லாம் நான் சொன்னால் நன்றாக இருக்காது...பிரசாரம் என்று கூடச் சந்திரன் சொல்லிவிடலாம்...நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்களேன். பிரசாரம் என்றால் எனக்கும் பிடிக்காது. என் பிரின்ஸிபிளே அதுதான்!

விஸ்வம் : சந்திரன்பாடு தேவலைதான்! ஹிந்தி சினிமாப் படங்களை இனி நன்றாக ரசிக்கலாம்! தெரியாத புரியாத டயலாகுகளையெல்லாம் ஸ்ரீமதியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்!

ராமசாமி : (சிரித்துக்கொண்டே) இது சுத்தப் பிரம்மச்சாரிப் பேச்சுன்னு! கல்யாணமான புதிதிலே சினிமாவிற்குப்போனால் விளக்கை அணைத்தவுடன் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு ரகசியம் பேசுவார்கள். சினிமா முடிந்து வெளியே வந்தபிறகு தியேட்டரில் ஓடின படத்தின் பெயர்கூடத் தெரியாமல் விழிப்பார்கள். கல்யாணம் கழிந்து ஒரிரண்டு வருஷங்கள் கழிந்தது என்று வைத்துக்கொள்வோம்! அப்புறம் சினிமாவிற்குப்போனால் கணவன், கண்ணை மூடிக்கொண்டு அந்த

மாதச் செலவை வரவிற்கு எப்படி ஈடுகட்டுவதென்று விழித்துக்கொண்டிருப்பான். மனைவியோ, பக்கத்திலமர்ந்திருக்கும் பெண் உடுத்தியிருக்கும் புடவைபோல் வாங்க, புருஷனுடன் எப்படி யுத்தம் துவக்கலாம் என்ற சிந்தனையில் ஈடுபட்டிருப்பாள். இப்போதும் அவர்களுக்குக் கொட்டகையில் ஓடிய படம் என்ன என்று தெரியாது!

விஸ்வம்: பிரமாதம்! பிரமாதம்! நடுத்தர வகுப்புத் தம்பதிகளின் மனோபாவத்தை அப்படியே படம் பிடித்து வைத்திருக்கிறீர்களே!... ஆனால் நம்ப சந்திரனின் ஹோம் கவர்ன்மெண்டிலே அவன் 'மினிஸ்டர் வித்அவுட் போர்ட் போலியோ'வாகத்தான் இருப்பான். ஆகையால் உங்கள் பெண் எத்தகைய ஆலோசனையையும் எதிர்பார்த்து அஞ்சவேண்டாம்!

ராமசாமி: அடடா! நேரமாய்விட்டது. நான் இன்று இரவு ஒரு நண்பரின் ஜாகையில் தங்கியிருக்கிறேன். நாளைக் காலை எட்டு மணிக்கு ரயில் இருக்கிறது. இரவு ஏழு மணி ரயிலில் நீங்கள் திரும்பலாம். தயாராக இருங்கள்! காலை ஏழரைமணிக்கு டாக்ஸியுடன் வருகிறேன்... மிஸ்டர் விஸ்வம்! நீங்கள் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லக் கூடாது!

விஸ்வம்: பார்த்தனுக்குக் கீதோபதேசம் பண்ணப் பரந்தாமன் ரதசாரதியாகப் போனமாதிரி, சந்திரனுக்கு சம்சார சாகர உபதேசம் பண்ண நான் வராமலிருப்பேனா?... அது இருக்கட்டும். நீங்கள் இன்று இரவு எங்கள் அதிதியாக இங்கிருந்து, சாரங்கபாணியின் சமையலை ரசித்தால்தான் எங்களுக்குத் திருப்தியாக இருக்கும்! சந்திரா, நீயும் சொல்லேண்டா!

சந்திரன்: ஆமாம்! ஆமாம்! இன்று சனிக்கிழமைதானே? சுண்டை வத்தல் குழம்பு வெகு சுகமாக இருக்கும்.

ராமசாமி: மன்னிக்கணும்! மன்னிக்கணும்! நல்லவேளை ஞாபகம் வந்தது! சனிக்கிழமை இரவுகளில் நான் ஒன்றும் சாப்பிடுவதில்லை. உபவாசம்!... இனிமேல் இந்த ஹாஸ்டல் சாப்பாட்டுக்குத்தானா பஞ்சம்? கல்யாணம் மாத்திரம் முடியட்டும். வரட்டுமா?

[அப்பு அவசரமாக உள்ளே நுழைகிறான்]

அப்பு: (சந்திரனைப் பார்த்து) சார்! நம்ப வெத்திலை பாக்குக் கடை நாயர்...

விஸ்வம்: (கண்களினால் அப்புவிற்குச் சமிக்ஞை செய்துகொண்டே) மைசூர் சந்தனசோப்பு வந்துவிட்டதா என்று சொல்லச் சொன்னானா? சந்திரா! சாப்பிட்டுவிட்டு வரும்போது வாங்கிக்கொண்டு வரலாம்!

அப்பு : இல்லே சார்! சில்லரை...

விஸ்வம் : ஆமாம்! ஆமாம்! ஐந்து ரூபாயைக் கொடுத்துவிட்டு காலணாமாத்திரம் வாங்கிவந்தேன். மீதி சில்லரையை வாங்கவேண்டும்!... அப்பு, நீ போயிட்டு அப்புறம் வா!

[அப்பு போகாமல் நிற்கிறான்]

ராமசாமி : (எழுந்துகொண்டே) உங்களைச் சந்தித்ததில் வெகு திருப்தி! நான் நாளைக் காலே வருகிறேன். குட்நைட்!

சந்திரன்
விஸ்வம் } சரி, சந்தோஷம்!

[ராமசாமி போகிறார்]

அப்பு : சார்! நாயர் சிகரெட் வாங்கின சில்லரை கேட்டான் சார்! அவன் சரக்கு வாங்கப் போகவேண்டுமாம் சார்!

சந்திரன் : அது தெரியும்டா அபத்தப் பஞ்சாங்கம்! ஒரு அயல் மனிதர் இருக்கும்போது...

விஸ்வம் :...அவசரக் குடுக்கையாக அலறிப் புடைத்துக்கொண்டு அவர் முன்னாலே எங்களைக் கடன்காரன் என்று சொல்ல வந்துட்டியே, மண்டு! உனக்கு ஊதி ஊதி மூளையெல்லாம் புகையடைந்து போச்சுடா!

அப்பு : தெரியாமல் உளறிட்டேன் சார்! அதற்குப் பதிலாக இன்று ராத்திரி உங்களுக்கு நெய் கூடுதலாக ஊற்றிவிடுகிறேன்!...அது யாரு சார்? எங்கோ பார்த்தமாதிரி இருக்கே!

விஸ்வம் : அவர்தாண்டா சந்திரனுக்கு மாமனாராக வரப்போகிறவர்.

அப்பு : (சரியாகக் காதில் போட்டுக்கொள்ளாமல்) நான் நினைத்தது சரியாய்ப் போச்சு! இவர்தான் 'சம்பகத்தின் மாமனார்,' என்கிற படத்திலே வில்லனாக நடித்தவரா?...அண்ணா, இவரை உங்களுக்குத் தெரியுமா? என்னைப் பற்றியும் ஒரு வார்த்தை அவரிடம் சொல்லிவையுங்களேன்! இந்தத் தூக்குச் சட்டிக்கும் தடைப்பைக் கட்டைக்கும் ஒருமுழுக்குப்போட்டுவிட்டுத் தப்புரவாய் இரண்டு படத்திலே ஆக்ட் பண்ணிடுவேனே!

விஸ்வம் : அப்புறம் அந்தப் படத்தைப் பிடிச்சவன், தன் முதலுக்கு முழுக்குப்போட்டுட்டு முழக்கயிறு மூலம் மோக்ஷத்துக்குப் போகவேண்டியதுதான்!...மண்டு! நம்ப சந்திரனுக்குப் பெண்கொடுக்கச் சம்மதித்திருக்கும் பிரமுகர்டா! அவரைப்போய் வில்லன், கொல்லன், என்று வருணிக்கிறாயே!

அப்பு : (சந்திரனைப் பார்த்து) க்ஷமிக்கணும்! க்ஷமிக்கணும்! உளறிவிட்டேன்!

சந்திரன் : மற்ற சமயத்திலே சரியாகப் பேசுவதாக எண்ணமோ? போடா! ஹெட்குக் உன்னைத் தேடிக்கொண்டு நிற்பார்!

விஸ்வம் : ஹெட்லே இரண்டு குட்டும் போடுவார்!

அப்பு : அவருக்குத்தான் அண்ணா பொடி வாங்கப்போனேன்!

[மட்டையைத் திறந்து ஒரு சிமிட்டா எடுக்கிறான்]

சந்திரன் : சரிதான் ! சாரங்கபாணிக்கு மட்டைதான் போய்ச் சேரும் !

விஸ்வம் : சரியா மொட்டையடிச்ச மட்டை! இந்தத் தடியனை நம்பி அவரும் பொடி வாங்கிக்கொண்டு வரச்சொல்லுகிறாரே ?

அப்பு : (பொடியை உறிஞ்சிக்கொண்டே) இப்படித்தான் சார் அந்த கரிக்குடி நாராயணய்யர் ஸ்டைலா பொடிபோட்டுக்கிறார்! அவர்மாதிரி பொடிபோடக் கற்றுக்கொண்டுவிட்டேன். ஆனால் ஒரு அடிகூட அவர் மாதிரி பாட வரவில்லே ! இருந்தாலும் ஒருநாள் இந்த சங்கடமான சமையலே விட்டுச் சங்கீதம் பாடத்தான் போகிறேன்.

காட்சி 3.

அலங்கரிப்பும் அரட்டையும்

[ராமசாமியின் வீடு. பிற்பகல் மூன்று மணி. ராமசாமியின் மனைவி காமாட்சி ஓடி ஆடி ஜரூராய்க் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறாள். அவள் பெண் வனஜாவை, அவள் சினேகிதி கோமளா அலங்கரித்துக்கொண்டிருக்கிறாள்.]

வனஜா : என்னடி கோமளா, உன் கையிலே நான் இன்று அகப் பட்டுக்கொண்டு விழிக்கிறேன் ! நீ எனக்குச் சிங்காரம் பண்ணலே, என்னைச் சித்திரவதை பண்ணுகிறாய் ! 'க்ளோஸ்அப்' ஷாட்டிற்கு நிற்கும் சினிமா நக்ஷத்திரங்களுக்குக்கூட இவ்வளவு சிரத்தையாக மேக்அப் பண்ணமாட்டார் கள் போலிருக்கே ?

கோமளா : இது வாழ்க்கை சினிமா இல்லையா? வெறும் சினிமா விற்கும் இதற்கும் வித்தியாசம் இல்லாதபோனால் சுவாரஸ்யப்படாது. அதில் குறிப்பிட்ட கதாநாயகி ஒரு படமுதலாளியின் கண்களுக்குக் குப்பைத் தொட்டியாகத் தென்பட்டால் மற்றொரு முதலாளிக்கு, குதூகல சுந்தரி யாகக் காட்சியளிக்கலாம். அதேபோல் ஒரு சினிமாவில் மேக்அப் இல்லாமல் புகழ் மங்கினால் மற்றொரு படம் அதை மேக்அப் செய்துவிடும்.

வனஜா : 'ஆனால் நம்மைப் போன்ற யுவதிகளைப் பெண் பார்க்க வரும் பிள்ளையாண்டான்களின் கண்களுக்குச் சரியான சிங்காரத்துடன் காட்சி யளித்து, பிள்ளையாண்டான் சம்மதத்தைப் பெறவேண்டும்' என்று சொல்ல வருகிறாயாக்கும் ! அவ்வளவுதானே ?...அப் டியானால், பெண் பார்க்க வரும் பிள்ளையாண்டான் ஒவ்வொருவனும், பெண்ணைப் பார்த்தவுடன் 'சம்மதம், முகூர்த்தம் வைக்கலாம் என்றல்லவா சொல்லவேண்டும்?...அப்படி ஆயிரத்தில் அரைப் பேர்வழிகூடச் சொல்லமாட்டேனென்கிறானே ?

கோமளா : ஐயையோ ! மண்டையாலே ஒரு கேள்விக்குறி போட்டு அசைத்துவிட்டாயே! வகிடு மறுபடியும் கலைந்துவிட்டது. கொஞ் சம் அசையாமலிரேன்.

வனஜா : பெண்ணைப் பார்க்க வருகிறேன் என்று சர்க்கஸ் கோஷ்டி போல் வருகிறார்கள். முதலில் எல்லோரும் பஜ்ஜி சொஜ்ஜி காப்பியை ஒரு கை வஞ்சகமில்லாமல் பார்ப்பார்கள்.

கோமளா : இந்தமாதிரி சம்பிரதாயத்தை உடைக்கத்தானே என்னவோ, உங்க அம்மா, தித்திப்பு சொஜ்ஜியே பண்ணாமல், முந்திரிப் பருப்பு கட்லெட், பாதாம் பருப்பு வடை என்று தயார் பண்ணி இருக்கிறாள்! தித்திப்பிற்கு சேமை பிஸ்கத் !

வனஜா : அதற்குக் காரணம் வேறு ! ஊரிலேயோ வீட்டிலேயோ, ஒரு அச்சு வெல்லமோ ஒரு ஸ்பூன் ஜீனியோ கிடையாது !...நான் ஏதோ சொல்லிக்கொண்டு வந்தேனே ! . ஆமாம் ! ஆமாம் !.. டிபன் சம்ஹாரம் ஆனவுடனே புருஷர்கள் கேள்விப் படலத்தை ஆரம்பிப்பார்கள். ஸ்திரீகள், கல்யாணம் ஒருவேளை நிச்சயம் ஆனால் இந்த வீட்டிலிருந்து என்னவெல்லாம் சுருட்டலாம் என்று இன்வெஸ்டிகேட் பண்ணுவார்கள் !

கோமளா : நீ சொல்றது வாஸ்தவம்தான் ! நம்ப சரசு மாமியகத்திலே நடந்த வேடிக்கை தெரியுமோ? சரசு மாமியின் பெண் பங்கஜத்தைப் பார்க்க ஒரு கிரிக்கட் ஆட்டக்காரப் பிள்ளையாண்டான் வந்தானும். 'பெண்ணுக்குக் கிரிக்கெட் ஆட்டத்தைப் பற்றித் தெரியுமா ? அதிலே விருப்பம் உண்டா ? வொரல் பௌல் பண்றது கூக்ளியா இன்ஸ்விங்கரா? ஹஸாரேயுடைய டெஸ்ட் ஆவரேஜ் என்ன ?' என்று சரமாரியாகக் கேள்விகளைப் போட்டானும்!

வனஜா : சரியான ஆசாமியைப் பார்த்துக் கேட்டான் ! பங்கஜத்திற்குக் கிரிக்கெட் என்றால் ஒருவகைப் பூச்சின்னு தெரியும். மாவு இடிக்கற உரல் அவர்கள் வீட்டிலே இருக்கு. அவள் மாமா கல்கத்தா அருகிலுள்ள ஹூக்ளியில் வேலை பார்க்கிறார்......

கோமளா : 'கிரிக்கெட்டைப் பற்றிய ஞானம் இல்லாத பெண் எனக்கு வேண்டாம்' என்று முகத்திலடித்தாற்போல் சொல்லிவிட்டு எழுந்தானும் அந்தப் பிள்ளை. அப்போ மின்னல் வேகத்திலே பங்கஜம் அவன் முன்னாலே போய் நின்று, "உங்களுக்குப் புள்ளி வைத்துக் கோலம் போட வருமா? மாக் கோலம் போடுவீர்களா ?" என்று கேட்டாளாம் !

வனஜா : பிள்ளையாண்டான் விழித்திருப்பான், முதல் ஓவரில் முதல் பந்தில் அவுட் ஆனவன்மாதிரி !

கோமளா : ஆமாம். பங்கஜமும், "கோலம்போடத் தெரியாதவரை மணந்து கொள்ள நான் தயாரில்லை!" என்று ஜம் என்று சொல்லி விட்டாள் !

வனஜா : பேஷ் ! பேஷ் ! . ஊருக்குப் போனவுடன் கார்டு போடுகிறேன் என்று தட்டிக் கழிக்கும் ரகத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளைக்கு, என் சிநேகிதி சரோஜா சரியான சூடு கொடுத்தாள், தெரியுமா ?

கோமளா : டக் என்று ஒரு கார்டு எடுத்துக் கையில் கொடுத்து விட்டாளோ?

வனஜா : இல்லை ! இல்லை ! "ஊருக்குப் போய்க் கார்டு போட்டால் முக்காலணா; போவதற்கு முன் இந்த ஊரிலேயே எழுதிப்போட்டால் லோக்கல் கார்டுக்கு அரையணாத்தான் ! அந்த அரையணாக்கூட உங்களுக்கு செலவாகவேண்டாம். பெண் கறுப்பு. பிடிக்கவில்லை என்று இப்போதே சொல்லிவிட்டால் ரொம்ப நலம்!" என்று சொல்லிவிட்டானாம்.

காமாட்சி : என்னடி! அரட்டை யடித்துக்கொண்டே உட்கார்ந்திருக்கிறீர்கள். ரயில் வரும் நேரமாகிவிட்டதே!

கோமளா : எல்லாம் ஆச்சு மாமி!...வனஜாதான் சின்னக்குழந்தை மாதிரி படுத்திவிட்டாள் மாமி!...பிள்ளையாண்டான் எப்படி இருப்பானாம்? போட்டோ கீட்டோ வந்ததா?

காமாட்சி : ஆளேதான் இப்போ நேரிலே வரப்போறானே?...என் தம்பி பிள்ளை அந்தப் பிள்ளையாண்டானைப் பார்த்திருக்கிறானாம். மூக்கும் முழியுமாக நன்றாயிருப்பதாகச் சொன்னான்.

வனஜா : அம்மாஞ்சியின் கண்களுக்கு மூக்கும் முழியுமாயிருக்கிறவன், என் கண்களுக்கு சப்பை மூக்கும் திருட்டு விழியுமாகக் காட்சியளிக்கலாம்!

காமாட்சி : இந்த வாயாடிப் பெண்ணைக் கட்டிக்கொண்டு திண்டாட...

வனஜா : எந்தக் காலாடிப் பிள்ளை வரப்போகிறதோ என்று தானே சொல்கிறாய்?...

கோமளா : நேரமாகிவிட்டது! உன் மேக்அப்பும் முடிந்து போச்சு! எழுந்திரு.

வனஜா : (கண்ணாடியைப் பார்த்துக்கொண்டே) பிரமாதம்! கண்ணாடியிலே பார்த்தால் உள்ளே யிருப்பது நான்தானா என்று சந்தேகமல்லவா ஏற்படுகிறது!

காமாட்சி : அந்தக் காலத்திலே பெண்களுக்குத் தலை மயிர் கணுக்கால் வரை வளர்ந்து தொங்கும் என்று வருணித்துக் கேட்டிருக்கிறேன். இந்தக் காலத்திலே தலை மயிரைப் பாதிப்பேர் கழுத்தோடு வெட்டிவிடுகிறார்கள். இன்னும் பாதிப் பேருக்கு வளர்ச்சி பாதி முதுகுடன் நின்றுவிடுகிறது. அதற்கு ஈடு செய்யத்தானோ என்னவோ குதிகாலைத் தொடும்படி லோலக்குகளைப் போட்டுக் கொள்ளுகிறார்கள்!...அது லோலக்கா? இல்லாதபோனால் சேலம் ஜில்லா கிணறுகளிலேயிருந்து ஜலம் எடுக்க உபயோகிக்கும் தாம்புக் கயிறா என்று தெரியவில்லை!

வனஜா : சரி! அடுத்தபடியாக ஸ்ரீமதி காமாட்சி அம்மாள் 'பெண்களும் பேஸ் பவுடரும்' என்பதைப் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

காமாட்சி : எனக்கு இன்னும் வேலையிருக்கு!...கோமளம்! உன் சினேகிதிக்குக் கொஞ்சம் நல்ல புத்தி சொல்லிக்கொடு. என்னைக் கிண்டல் பண்ணுகிறமாதிரி அந்தப் பிள்ளையாண்டான் முன்னாலும் பேசிவைக்கப் போகிறாள்!

[போகிறாள்]

கோமளா : ஏண்டி வனஜா! எந்தச் செவிடனாக இருந்தபோதிலும் பெண்ணைப் பாடச் சொல்லிப் பிராணனை வாங்காமலிருக்கமாட்டான். நீ என்ன பாட்டுப் பாடப் போகிறாய்?

வனஜா : 'ஸ்ரீமான் கணபதே' என்கிற பாட்டைப் பாடட்டுமா?

கோமளா : ஐயையோ! பிள்ளை யாண்டான் கொஞ்சம் கனத்த சரீரமுடையவனாக இருந்தால், தன்னைத்தான் குறிப்பிடுகிறாய் என்று நினைத்துக் கோபப்படப் போகிறான்!

வனஜா : 'மாரா மனோகர ரூபா மாதென்னைப் பாராய்' என்று பாடட்டுமா?

கோமளா : அதுவும் வேண்டாம்! ஒருவேளை அவன் கறுப்பாய் இருந்து தொலைத்தால், தன்னைத்தான் கேலி பண்ணுகிறாயோ என்று நினைத்துக்கொண்டுவிடுவான்!

வனஜா : நாசமாப் போச்சு! வேறு என்னத்தைத்தான் பாடுவது? பேசாமல் 'ட்விங்கில், ட்விங்கில்,லிட்டில் ஸ்டார்! ஹவ் ஐ வொண்டர் வாட் யூ ஆர்' என்ற இங்கிலீஷ் பாட்டை ஹிந்தோள ராகத்திலே பல்லவியாகப் பாடிவிடட்டுமா? அப்போ ஒருவரும் சண்டைக்கு வரமாட்டார்களே?

கோமளா : அசடு! அசடு! பேசாமல் 'யாரோ, இவர் யாரோ' என்னும் பாட்டைப் பாடிவிடு! அந்தப் பிள்ளையாண்டான் யாரா இருந்தாலும் எப்படியிருந்தாலும் பிறகு கவலையில்லை!

வனஜா : அடேடே! வாசலில் வண்டி சப்தம் கேட்கிறது; அப்பா குரலும் கேட்கிறது! வந்துவிட்டார்கள் போலிருக்கிறது! வா! நாம் பின் கட்டுக்குப் போவோம்.

காட்சி 4.

வாய்ப்பாட்டும் வயிற்றுப்பாட்டும்

[சிறிது நேரத்திற்குப் பிறகு. ராமசாமியின் வீட்டுக் கூடம். ரத்தினக் கம்பளத்தில், விஸ்வம், சந்திரன், ராமசாமி, ராமசாமியின் அடுத்த வீட்டு அன்பர் ராஜாராமன் முதலியோர் உட்கார்ந்திருக்கிறார்கள்.]

ராஜாராமன் : என்ன ராமசாமி, டிரெயின் மூன்றரை மணிக்கே வந்துவிடுகிறதல்லவா? ஸ்டேஷனிலிருந்து வீட்டிற்கு வர ஒருமணி நேரமாகிவிட்டது போலிருக்கே? ஏன்?

விஸ்வம் : அதை ஏன் கேட்கிறீர்கள்? ராமச்சந்திர மூர்த்தி சீதா பிராட்டியை மணப்பதற்கு முன் வில்லை ஒடித்தாராம்! அதை நினைத்துக் கொண்டுதானோ என்னவோ நாங்கள் ஏறின ஜட்கா வண்டிக்காரன், சந்திரன் சார்பில் தன் வண்டியின் வில்லை ஒடித்துவிட்டான். உடனே வேறு வண்டியும் அகப்படவில்லை. அதுதான் தாமதத்திற்குக் காரணம்.

சந்திரன் : இந்த உலகத்திலே ஜட்கா ஓட்டி ஒருவனுக்குத்தான் பிறர் முன்னேற்றத்திலே அக்கறை ஜாஸ்தி. அடுத்தவன் முன்னேறு

கிறனே என்று வயிற்றெரிச்சல்படும் மனித வர்க்கத்திலே அவன் தனிப் பிறவி. வண்டியிலே ஏறி உட்கார்ந்ததும், 'சாமி, முன்னுக்கு வாங்க! முன்னுக்கு வாங்க' என்று அழைத்தான்! பாரம் தாங்காமல் முறிஞ்சு போச்சு வில்!

ராமசாமி : சபாஷ்! சபாஷ்! நல்ல போடு போட்டீர்கள்! (உள்ளே பார்த்து) ஏய்! காப்பி டிபனை அனுப்பு! வடை வாசனை மாத்திரம் அப்போதே முதல் அடித்துக்கொண்டிருக்கிறது! ஆனல் அது வரும் வழியைக் காணோம்! ...வனஜா, கொண்டாம்மா டிபனை!

ராஜாராமன் : நம்ப ராமசாமியைப் பற்றி நீங்கள் போகப் போகத்தான் தெரிந்துகொள்வீர்கள். தங்கமான ஆசாமி...

விஸ்வம் : (சிரித்துக்கொண்டே) நேற்று விலைக்கா? இன்றைய விலைக்கா...இன்றைக்கு ஏதோ தங்க விலை கொஞ்சம் இறக்கமென்று பேப்பரில் போட்டிருந்தது!

ராஜாராமன் : நீர் ஒரு பெரிய ஹாஸ்யப் பேர்வழியாக இருப்பீர் போலிருக்கே!...மார்க்கெட்டுத் தங்கத்துக்கு மதிப்பு ஏறலாம், குறையலாம்; ஆனல் ராமசாமியின் மதிப்பு ஒரே நிலை!...அவர் கடவுளுக்குக்கூட வஞ்சகம் பண்ணுவார்! ஆனல் வயிற்றுக்கு வஞ்சகம் பண்ணமாட்டார்!

விஸ்வம் : அவர் பிரின்சிபிளே அதுதான்!

[வனஜா டிபன் கொண்டுவந்து வைக்கிருள்]

ராமசாமி : ஏனம்மா வனஜா, இந்த வடையை யாரம்மா பண்ணினு? நன்ருக இருக்கே!

[வனஜா நாணத்துடன் நிற்கிருள்]

ராஜாராமன் : இதென்ன கேள்வி! குழந்தைதான் பண்ணியிருப்பா! இரண்டு பதத்திற்கு அபிநயம் பிடிச்சு, இரண்டு சினிமாப் பாட்டை இரைந்து பாடிவிட்டால் மாத்திரம் தன் சாமார்த்தியத்தை, தன்னை மணக்கப்போகும் பிள்ளைக்குக் காண்பிக்க முடியுமா? திறமையை இதிலல்லவா காண்பிக்க வேண்டும்?

ராமசாமி: ஏனம்மா? அப்படித்தானு?...இரைஞ்சு பதில் சொல்லு அப்புறம் உன்னை ஊமைன்னு நினைத்துக்கொண்டுவிடப்போரு?

வனஜா : (தலையை நிமிராமல்) நான் இல்லேப்பா! அம்மாதான் செய்தாள்.

ராமசாமி : நல்ல வேளை! இந்தமாதிரி மிளகாயைத் தாராளமாகப் போட்டு வாய்க்கு வழங்காமல் பண்ணியிருப்பது உங்க அம்மாதான் என்று எனக்குத் தெரியும்! எங்கே பெருமைக்காக நான்தான் என்று சொல்லி விடுவாயோ என்று பயந்துபோய்விட்டேன்!

விஸ்வம் : சபாஷ்! நீங்கள் ஏதும் பரீட்சாதிகாரியாக இருந்தீர்களோ? இண்டர்வியூவிற்கு வரும் பிள்ளைகளைத்தான் சிக்கலான கேள்விகள்போட்டுத் திணற அடிப்பார்கள்.

ராஜாராமன் : இப்போ நடப்பதும் இண்டர்வியூதானே! வனஜா தான் அப்ளிகண்ட்.

சந்திரன் : பரீட்சாதிகாரி நான் இருப்பதை நீங்கள் மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறது !

ராமசாமி : மறக்கவில்லை ! மறக்கவில்லை !...வனஜா ! டிபன் எல்லாம் மட மடவென்று நடக்கட்டும். அதற்கு அடுத்த ஐயிட்டம் உன் சங்கீதக் கச்சேரிதான்.

ராஜாராமன் : வாய்ப்பாட்டிற்காக வயிற்றுப் பாட்டைக் குறைத்து விடாதே!

[டிபன் சாப்பிட்டுக் கை அலம்புகிருர்கள். வனஜா ஸ்ருதிப் பெட்டியுடன் ஒரு பக்கமாக வந்து உட்காருகிருள்.]

ராமசாமி : வனம்மா! என்ன பாட்டு பாடப்போகிருய்? தென்னிந்திய சங்கீதமா? வட இந்திய சங்கீதமா?

விஸ்வம் : எதுவாயிருந்தாலும் பார்த்துப் பாடச்சொல்லுங்கோ! நம்ப சந்திரன் சங்கீதத்திலே எக்ஸ்பெர்ட்! ஸ்ருதிபேதம் மித்ரபேதம் எல்லாவற்றையும் பற்றி இன்புறப் பேசுவான். சலமேலராகிருதி மார்க்க ஹிந்தோளமா, மார்க்கமில்லாத ஹிந்தோளமா என்று ஆராய்ச்சி செய்திருக்கிருன்!

ராஜாராமன் : (சந்திரனைப் பார்த்து) சரிதான்! நீங்களும் நன்ருகப் பாடுவீர்கள் போலிருக்கிறது!

சந்திரன் : நான் சங்கீதம் பாடமாட்டேன்! சங்கீதம் பேசுவேன்!

ராமசாமி : அது போதுமே! பேச்சு நடுவிலே, அந்தர காந்தாரம், தைவத நிஷாதம், என்று இரண்டு மூணு வார்த்தைகளைத் தூவி வைத்தால் அப்புறம் யாரும் அண்டமாட்டார்களே!

வனஜா : (பாட ஆரம்பிக்கிருள்)
யாரோ இவர் யாரோ
என்ன பேரோ-அறியேனே (யாரோ)

விஸ்வம் : (இடைமறித்து) இவர்தான் ஸ்ரீமான் நரசிம்மய்யர் பிள்ளையாண்டான்! கலைவாணி கல்லூரியிலே சீனியர் பீ. ஏ. வாசிக்கிருன். சங்கீதம் பேசுவான்! கிரிக்கெட்கூடப் பேசுவான்! வாயாலே 'இன்ஸ் விங்கர்' 'பம்பர்' எல்லாம் பௌல் பண்ணுவான். 'பாட்' இல்லாமலேயே அபிநயத்தில் ஸிக்ஸர் அடிப்பான், படிப்பில் கெட்டிக்காரன். பாடங்களை நன்ருகக் கவனிப்பான்! இதிலிருந்தே பிற்காலத்தில் அவன் சகதர்மிணியின் பேச்சைக் கவனமாகக் கேட்பான் என்று உறுதி கூறலாம்.

ராமசாமி : சரியான விளம்பர இலாகா!

விஸ்வம் : அவன் பெயர்கூட அந்தப் பாட்டின் அடுத்த அடியிலேயே இருக்கிறது......

வனஜா : (தொடர்ந்து பாடுகிருள்) சந்திர பிம்ப முகமலரா......

விஸ்வம் : அவன் பேர் சந்திரன்தான்.

சந்திரன் : (ராமசாமியைப் பார்த்து) போதும் சார்! ஜாஸ்தி தொந்திரவு பண்ணிக்கொள்ள வேண்டும். பாட்டு வெகு நன்ருக இருக்கிறது.

ராமசாமி: அருணாசலக் கவிராயரின் பாட்டைச் சிலாகிக்கிறீர்களா? அவள் சாரீரத்தைக் குறிப்பிடுகிறீர்களா?

விஸ்வம்: உங்கள் குமாரியின் சாரீரம், சாகித்தியத்திற்கே பெருமையளிக்கிறது என்றுதான் சொல்கிறான். அப்படித்தானே சந்திரா?

சந்திரன்: என் மனத்திலே இருக்கிறதை அப்படியே சொல்லிட்டாயே!

ராஜாராமன்: ஆப்த நண்பர்கள் என்றால் அடையாளம் அதுதான்!

ராமசாமி: அப்படியானால் மிஸ்டர் சந்திரனுடைய அபிப்பிராயத்தை மிஸ்டர் விஸ்வத்தினிடமிருந்தே தெரிந்து கொள்ளலாம்! என்ன மிஸ்டர் விஸ்வம், உங்கள் நண்பர் என்ன சொல்கிறார்?

[வனஜா உள்ளே போகிறாள். காமாட்சியும் கோமளமும் பின் கட்டு வாசற்படியருகில் நிற்கிறார்கள்]

விஸ்வம்: அவனுடைய அபிப்பிராயத்தை இந்த விஷயங்களில் நான் எப்படிச் சொல்ல முடியும்? அவன் ஸ்தானத்தில் நான் இருந்தால், ராகுகாலமாக இருந்தாலும் பரவாயில்லை, முகூர்த்தத்தை மேளதாளமில்லாமல் இப்போதே வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிடுவேன்!

சந்திரன்: என் நண்பன் விஸ்வம் போன ஜன்மத்திலே ஒரு லவுட்ஸ்பீக்கர்!...அப்பா சொன்னபடி இப்போ நான் வந்தாய்விட்டது. நான் அவருக்குக் கடிதம் எழுதுகிறேன். நீங்களும் அவரும் கலந்து பேசுங்கள். அதுதான் சரி என்று படுகிறது!...அடுத்தவாரமே அப்பா உங்களுக்குக் கடிதம் எழுதுவார்.

ராஜாராமன்: ராமசாமி! நீ இனிமேல் தாமதமில்லாமல், மேளக்காரன் சமையல்காரன் இவர்களுக்கு ஏற்பாடு பண்ணலாம்!...மிஸ்டர் சந்திரனின் குரலிலிருந்தே அவர் நோக்கம் தெரியவில்லையா?

காமாட்சி: ஏதோ ஆண்டவன் கிருபையிலே வனஜாவிற்கு இந்த இடம் கிடைத்தால் ஆலமரத்தடி ஹனுமாருக்கு வடை மாலை சாத்திடலாம்!

விஸ்வம்: குளத்தங்கரைப் பிள்ளையாருக்குக்கூட நிறையச் செய்யுங்கள். இந்தப் பிரம்மச்சாரி தெய்வங்கள் கிருபை பண்ணினால்தான் உண்டு! மற்ற தெய்வங்கள் குடும்பத்தில் அடிபட்டவர்கள்! பக்த கோடிகளையும் அவ்வாறு கஷ்டப்படச் செய்யத் தயங்குவார்கள்!

ராமசாமி: ஏய் காமாட்சி! ஆயிரக்கணக்கிலே பணம் செலவழித்துக் கல்யாணம் பண்ணும் எனக்கு வடை மாலை சாத்தினால் அனுபவித்துத் தின்பேனே! அதை விட்டுவிட்டு அனுமாருக்குச் சாத்தப் போகிறேனென்கிறாயே?

விஸ்வம்: பயப்படாதீர்கள்! அனுமார் வடைகளைச் சாப்பிட்டுவிட மாட்டார். உங்களுக்குத்தான் வைத்திருப்பார்!

சந்திரன்: சரி! இந்த ஊரையும் ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்துவிட்டு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனால் சரியாக இருக்கும்!

ராஜாராமன்: ராமசாமி! நான் வேண்டுமானால் இவர்கள்கூடப் போய் விட்டு ஸ்டேஷனுக்கு வருகிறேன்! நீ நேராக அங்கே வந்துவிடு.

விஸ்வம்: சரி! நாங்கள் வருகிறோம்!

[எழுந்திருக்கிறார்கள்]

காட்சி 5

பசுத்தோல் போர்த்த புலி!

[இரண்டு நாட்களுக்குப் பிறகு. காலை சுமார் 8 மணி. சந்திரன் தன் அறையில் ஏதோ புத்தகத்தைப் பார்த்தவாறு உட்கார்ந்திருக்கிறான். விஸ்வம் வருகிறான்]

விஸ்வம்: என்ன பிரதர்! அப்புறம் என்ன முடிவிற்கு வந்தீர்கள்?

சந்திரன்: (ஏதோ ஞாபகமாக) தெரிஞ்ச முடிவுதான்! கையிலே இருக்கிற பத்து ரூபாயை நாயர் மூஞ்சியிலே விட்டெறிஞ்சுட்டுக் காப்பி ஹோட்டல் ஐயருக்கு இந்த மாதம் நாமம் போட வேண்டியதுதான்! என்ன அவசரத் தந்தியடிச்தாலும் அப்பா பணம் இப்போ அனுப்பமாட்டார்!



விஸ்வம்: ஏன்! பண்டிட் பூரிநாத் சோமாஸ் எழுதிய பஜ்ஜிகா பஞ்ஞு என்கிற பாட்டனி புஸ்தகம் பதினைந்து ரூபாய்க்கு உடனே வாங்க வேண்டும் என்று எழுது! அந்த ரூபாயை பஜ்ஜியும் பூரியும் விழுங்கின கடனுக்கு ஹோட்டல் பூமிநாதய்யருக்குக் கொடு!

சந்திரன்: நல்ல யோசனைதான்! ஆனால் உனக்கு அப்பா விஷயம் தெரியாது போலிருக்கு! அந்தப் புஸ்தகத்தை வாங்கியனுப்பிப்பாரே ஒழிய, பணம் பெயராது!

விஸ்வம்: பஞ்ஜிகா பஞ்ஜ என்கிற புஸ்தகத்தை நம்ப பூமிநாதய்யர் தான் இனிமேல் எழுதணும்!...நான் இந்த முடிவைப் பற்றிக் கேட்க வில்லை!...உன் கல்யாண விஷயத்தைப் பற்றிக் கேட்டேன்!

சந்திரன்: அதுதான் ஒரே குழப்பமாய் இருக்கப்பா! மனது நிதானப்படவில்லை. நீதான் சொல்லேன்! அவள் அழகாக இல்லை?

விஸ்வம்: நீ பிற்காலத்திலே உத்தியோகம் பார்த்து வாங்கப்போற சம்பளப் பணமெல்லாம் பவுடர், ஸ்னோ, சோப், என்று பைசா பாக்கி யில்லாமல் மாறவேண்டும் என்று தலையிலெழுதியிருக்கிறது! நான் சொன்னால் நீ கேட்பாயா? பிள்ளையாண்டான் பெண் பார்க்க வரப்போறான் வரப் போறான் என்றுதான் ஒரு வாரமாக அவள் மேக்கப் செய்துகொண்டி ருப்பாளே! அது நிஜ அழகா?

சந்திரன்: அதுசரி! அவள் பாட்டு எவ்வளவு இனிமையாக இருந் தது! மனம் நிம்மதியற்று இருக்கும்போது அவள் கானம் அமிர்தமா யிருக்குமா இருக்காதா?

விஸ்வம்: (பெருமூச்சுடன்) ஆஹா! பிரமாதமாயிருக்கும்! அதை விட அவள் எங்காவது சங்கீதக் கச்சேரி செய்யப்போகும்போது நீ பின் னால் வெற்றிலைப் பெட்டி கூஜா கொண்டுபோவது அதைவிடப் பிரமாதமாக இருக்கும்! உனக்கு இத்தகைய கியாதி கிடைக்கவேண்டும் என்று இருக்கும் போது என் வார்த்தை காதில் ஏறுமா?...சந்திரா! நீ என் ஆப்த நண்பன் என்பதற்காக மனம்விட்டுச் சொல்கிறேன்! அந்த இடத்து சம்பந்தம் வேண்டாம்!

சந்திரன்: என் மனக் குழப்பத்திற்கு நீதான் காரணம்! முதலில் நான்தான் கல்யாணம் என்ற பேச்சையே காதில் போட்டுக்கொள்ள மறுத்தேன். நீதான் வற்புறுத்திப் பெண் பார்க்கப் போகலாம் என்று சொன்னாய்!

விஸ்வம்: அதற்கென்ன? பெண் பார்த்ததில் தப்பிதம் ஒன்றும் இல்லை. அதற்கப்புறம்தான் நீ உன் சிந்தனா சக்தியைச் சரியாக உபயோகப் படுத்தவில்லை! வெளியழகைப் பார்த்து மயங்கிவிட்டாய்!

சந்திரன்: உள்ளழகைப் பார்க்க என் கண்கள் என்ன எக்ஸ்ரே கண்களா?

விஸ்வம்: சரி! உன்னுடன் பேசிப் பயனில்லை!... அப்புறம் ஒரு நாள் 'அன்றைக்கு விஸ்வம் சொன்னதைக் கேட்காமல் போனேனே' என்று பச்சாத்தாபப்படுவாய்!... நான் வருகிறேன்!

[கிளம்புகிறான்]

சந்திரன்: கோபித்துக் கொள்ளாதே விஸ்வம்! கொஞ்சம் நிதான மாகச் சொல்! ராமசாமியின் சம்பந்தம் ஏன் வேண்டாமென்கிறாய்?

விஸ்வம் : அப்படிக் கேள் ராஜா ! அந்த ராமசாமி ஓர் அடாதுடிப் பேர்வழி ! அகம்பாவம் பிடித்தவர் ! அது அவர் பேச்சிலிருந்தே தெரிந்து கொள்ளும்படியாக இருக்கிறது ! இரண்டாவதாக, அந்தப் பெண் அவருக்கு ஒரே பெண். செல்லப் பெண்ணும்கூட. பணிவு, மரியாதை எல்லாம் மருந்துக்கும் கிடையாது ! மூன்றாவதாக, அந்தப் பெண் ஏற்கெனவே ராமசாமியின் ஒன்று விட்ட சகோதரியின் பிள்ளையைத்தான் மணந்து கொள்வேன் என்று பிடிவாதம் செய்தவளாம் !... நான்காவதாக, ராமசாமி மாப்பிள்ளையை விலை கொடுத்து வாங்கி வீட்டோடு அடிமை போல் வைத்துக் கொள்ளும் நோக்கத் தோடுதான் இருக்கிறாராம் ! இதையெல்லாம் நான் கொஞ்ச நேரம் ராஜா ராமனுடன் பேசிக் கொண்டிருக்கும்போது தெரிந்து கொண்டேன் ! எனக்கே அவர்கள் வீட்டிற்குப் போனவுடன், அவ்வளவாக ரசிக்கவில்லை.

சந்திரன் : சரி ! இடம் கான்ஸல்டு, பெண் பிடிக்கவில்லை, என்று அப்பாவிற்கு எழுதிவிடுகிறேன் ! உன் அபிப்பிராயமும் அதுதானே ?

விஸ்வம் : எழுதிவிடுகிறேனென்று ஒத்திப்போடுவானேன் ? உடனே இப்பொழுதே எழுதிவிடு ! இல்லாத போனல் அந்த மனுஷன் ராமசாமி மறுபடியும் மாடிப்படியேறி வந்துவிடப் போகிறார்.

சந்திரன் : தபால் கவரே கைவசம் இல்லை ! வகுப்பிற்குப் போகும் போது நாயர் கடையிலிருந்து ஒன்று எடுத்து வரலாம் !

விஸ்வம் : போ ! மூர்த்தி நிறைய வாங்கி வைத்திருக்கிறான். ஒன்று எடுத்து வா.

சந்திரன் : சரி !

[சந்திரன் போகிறான். விஸ்வம் மேஜை மீதிருந்த நோட் புத்தகத்தைப் பிரிக்கிறான்.]

விஸ்வம் : [ஆச்சரியத்துடன் தனக்குள்] அடேடே ! பயலுக்கு வனஜா பைத்தியம் வகையாகத்தான் பிடித்திருக்கிறது ! வனஜா, வனஜா என்று ஒரு பக்கம் பூராவும் ராமஜயம் எழுதுவதுபோல் எழுதிப் பார்த்திருக்கிறான் ! டேய் ! இந்த விஸ்வத்தின் கண் அவள் மேல் விழுந்து விட்டது! அந்த அப்ஸரசை இந்த இளிச்ச வாய்ச் சந்திரன் மணக்க, நான் பார்த்துக் கொண்டிருப்பேனு என்ன ? இந்த விஸ்வம் ஏமாறமாட்டான் ! வனஜா இவருக்காகப் பிறந்தவள் ! சந்திரன் முதலில் பெண் பிடிக்கவில்லை என்று எழுத வேண்டியதுதான் ! பிறகு நம் வலையை விரித்து விவாகம் நடத்திக் கொள்ள வேண்டும். இந்த விஸ்வம் மனது வைத்தால் நடக்காதது வேறுண்டோ ?

(நோட் புத்தகத்தை மூடுகிறான். சந்திரன் வருகிறான்)

சந்திரன் : அவனிடமும் கார்டு தானிருந்தது. கவர் இல்லையாம் !

விஸ்வம் : சரி ! சரி ! எதுவாயிருந்தால் என்ன ? நான் சொல்றபடி எழுது ! உங்க அப்பா கோபித்துக் கொள்ளாத வண்ணம் கடிதத்தின் வாசகம் இருக்க வேண்டும்.

சந்திரன் : சரி, சொல்.

விஸ்வம் : எழுது ! 'அப்பா அவர்களுக்கு நமஸ்காரம். க்ஷேமம். தாங்கள் எழுதியிருந்தபடி ஸ்ரீமான் ராமசாமி இங்கு வந்தார். ரொம்பத் தங்கமான மனிதராகக் காணப்பட்டார். பெண்ணைப் பார்க்க ஊருக்கு அழைத்துப் போயிருந்தார். பெண்ணைப் பார்த்தேன். எல்லாம் திருப்திகரமாக இருந்தது...'

சந்திரன் : ஐயையோ ! இங்கிலீஷ் கவிதை பரீட்சைப் பேப்பர் எழுதும் ஞாபகத்தில் எழுத்துக்களை மொக்கை மொக்கையாக மொச்சைக் கொட்டை போல எழுதி விட்டேன் ! கார்டில் இடமில்லை ! இங்கிலீஷ் புரொபசருக்கு நிறைய பக்கங்கள் எழுதினால்தானே மார்க்குகள் போட மனம் வரும் ?... இப்போ என்ன செய்ய ?

விஸ்வம் : போதுமே உன் சமர்த்து !... ஒரு கார்டை வெட்டியாக்க வேண்டாம் ! இன்னொரு கார்டு உன் கையில் இருக்கிறதல்லவா ? அதில் தொடர்ச்சியாக எழுது ! இரண்டு கார்டுகளும் சேர்ந்துதானே அப்பா கையில் கிடைக்கப் போகிறது ?...

சந்திரன் : சரி, சொல் !

விஸ்வம் : எழுது ! 'எனக்கென்னவோ ஒன்றும் பிடிக்கவில்லை ! எனக்கு எதற்கு இப்போது கல்யாணம்? நானும் உங்களைப்போல் இப்போ சம்சார பந்தத்தில் ஈடுபட வேண்டுமா ? என் மனது குழம்பி விட்டது. எனக்குப் பெண்களைப் பற்றி ஒரு நல்ல முடிவுக்கு வர இயலவில்லை. விபாமாகப் பிறகு எழுதுகிறேன் !'... அவ்வளவுதான். உங்க அப்பாவிற்கும் அவ்வளவாகக் கோபம் வராது ! ராமசாமியைப் பற்றியும் அதிகம் குறைகூறினாப் போலிருக்காது.

சந்திரன் : சரிதான் ! இரண்டு கார்டையும் தபாலில் போட்டுவிட்டு அப்படியே கிளாஸிற்குப் போவோம் !

விஸ்வம் : கல்யாணம் போகிறது! போகட்டும்.

(போகிறார்கள்)

காட்சி 6.

கார்டுகள் கிடைத்தன !

[நரசிம்மய்யர் வீடு. காலை வேளை. நரசிம்மய்யர் போட்டிப் பந்தயங்களுக்கு விடை கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருக்கிறார். அவர் இரண்டாவது பிள்ளை பாலு சற்றுத் தள்ளி உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருக்கிறான். அவர் மனைவி பார்வதி அடுக்களையில் சமையலில் ஈடுபட்டிருக்கிறாள்.]

நரசிம்மய்யர் : (சற்று இரைந்து தனக்குத்தானே) இடமிருந்து வலம் மண்டு. சரியாய்ப் போச்சு ! ஆனால், மேலிருந்து கீழே... சரியாவாலியே ! மண்டு பாங்கர் !... ஸ்திரம் !

பாலு : மண்டுக்கு அடுத்தது மடையன் !... போட்டு வையேன் ! குருட்டாம் போக்கிலே ஒரு இருபதினாயிரம் விழுந்து வைக்கட்டுமே !

நரசிம்மய்யர் : போடா முட்டாள் ! மடையன் என்பதற்கு எழுத்து சரியில்லையே !

பாலு : அதென்னவோ எனக்குத் தெரியாது ! எங்க கணக்கு வாத்தியாருக்கு மண்டு என்ற வார்த்தைக்கு அடுத்தாற்போல் டாண் என்று மடையன் என்றுதான் சொல்லவரும் !

[தபால்காரன் வந்து ஒரு கடிதத்தைப் போட்டுவிட்டுப் போகிறான்.]

நரசிம்மய்யர் : அடேடே! சந்திரன்தான் எழுதியிருக்கான் போலிருக்கு ! எய் பார்வதி ! இங்கே வா !

பார்வதி : (அடுக்களையிலிருந்து) இதோ வரேன் ! கூப்பிடுவதைப் பார்த்தால் தலைபோற அவசரமாயிருக்கே ? ஏதும் ஒண்ணே அரைக்கால் ரூபாய் முதல் பரிசாக விழுந்திருக்கிறதா ?

நரசிம்மய்யர் : சந்திரன் கல்யாண விஷயமாக எழுதியிருக்கிறான். நீ இங்கு வந்த பிறகுதான் வாசிக்கப் போகிறேன் ! வா !

[பார்வதி வருகிறாள்.]

பார்வதி : ராமசாமி ஐயர்கூடப் போயிருந்தானுமா ? பெண் எப்படி இருக்கிறாளாம் ? கறுப்பா ? சிவப்பா ?

நரசிம்மய்யர் : நாட்டுப் பெண் வரவேண்டுமென்கிற அவசரத்தைப் பார்க்கவில்லையா ? என் ? இப்போதே முதற்கொண்டு அவளை எந்தெந்த வகைகளில் அதிகாரம் செய்வது என்று தீர்மானித்து விட்டாயோ ?

பார்வதி : போதுமே ! போட்டிப் பந்தயத்திற்கு வார்த்தைகளை ஸ்திரமாக்க ஆராய்ச்சியிலீடுபடுவது போலல்லவா பேசுகிறீர்கள் ! என்னதான் எழுதியிருக்கிறான் ?

நரசிம்மய்யர் : கேள் ! (கடிதத்தை வாசிக்கிறார்) 'எனக்கு என்னவோ ஒன்றும் பிடிக்கவில்லை. எனக்கு எதற்கு இப்போது கல்யாணம்? நானும் உங்களைப்போல் இப்போதே சம்சார பந்தத்தில் ஈடுபட வேண்டுமா ? என் மனது குழம்பிவிட்டது. எனக்குப் பெண்ணைப் பற்றி ஒரு நல்ல முடிவிற்கு வர இயலவில்லை. விபரமாகப் பிறகு எழுதுகிறேன்...'

பார்வதி : அசட்டுப் பிள்ளை ! என்னவோ தத்துப்பித்துன்னு எழுதியிருக்கானே !

நரசிம்மய்யர் : (தலையிலடித்துக் கொண்டு) உனக்குப் பிறக்கிற பிள்ளை வேறு எப்படி இருப்பான்? நாம் சொல்ற வார்த்தையைக் கேட்காத பிள்ளை இருந்தென்ன போயென்ன ?

பார்வதி : அந்த இடம் நல்ல இடம் ! தங்கமான மனுஷ்யாள். சீர் செனத்திகளெல்லாம் நிறையச் செய்யக்கூடியவர்கள்! இந்தப் பயித்தியக்காரப் பிள்ளைக்கு என்ன தோன்றிற்றோ ?

நரசிம்மய்யர் : நான் அந்த ராமசாமிக்கு வாக்குக் கொடுத்து விட்டேன் !... இப்போ முடியாது என்றால் என் மானமல்லவா போய்விடும் ? நம் இஷ்டப்படி நடக்காத பிள்ளையைத் தொலைத்துத் தலைமுழுக வேண்டியது தான் !... இனி நமக்கும் அவனுக்கும் ஸ்நானப்ராப்திகூடக் கிடையாது !... பாலு !... போடா, கடையிலே போய்ப் புது எள் வாங்கிண்டு வாடா !

பார்வதி : ஐயையோ ! என்னத்தையாவது கன்னுபின்னுன்னு உளறுதீங்கோ !... என்னடா பாலு ! அவர் சொல்றார்னு நீயும் கிளம்புகிறாய்?

பாலு : பயப்படாதே அம்மா ! தர்ப்பணம் பண்ணற எள் இல்லே ! போட்டிப் பந்தய விடைகளை விமர்சனம் பண்ற புஸ்தகம்.

[பாலு கிளம்புகிறான். தபால்காரன் வருகிறான்.]

தபால்காரன் : சார் ! இன்னொரு கார்டு இருக்குதுங்க சார் ! நான் கவனிக்காமல் போயிட்டேன் ! இந்தாருங்க !

[கார்டைக் கொடுத்துவிட்டுப் போகிறான்.]

பாலு : இதுவும் அண்ணாவோடதுதான் போலிருக்கு !

பார்வதி : என்ன எழுதியிருக்கிறான் ?

நரசிம்மய்யர் : என்னத்தை எழுதிக் கிழித்திருக்கப் போகிறான் ? யாராவது ஊர்வசியைக் கந்தர்வ விவாகம் பண்ணிக்கத் தீர்மானித்துவிட்டேன் என்று எழுதியிருக்கப் போகிறான். அதுதானே அடுத்தபடி செய்யவேண்டிய விஷயம். (படிக்கிறார்) 'அப்பா அவர்களுக்கு நமஸ்காரம். க்ஷேமம். தாங்கள் எழுதியிருந்தபடி ஸ்ரீமான் ராமசாமி இங்கு வந்தார். ரொம்பத் தங்கமான மனிதராகக் காணப்பட்டார். பெண்ணைப் பார்க்க ஊருக்கு அழைத்துப் போயிருந்தார். எல்லாம் திருப்திகரமாக இருந்தது.'

பார்வதி . பார்த்தீர்களா? என்னவோ சொன்னீர்களே ! சமர்த்தாக, கொஞ்சம் புத்தி நிதானமான பிறகு எழுதியிருக்கிறான் ! கல்யாணம்னா யாருக்கும் தூக்கிவாரித்தானே போடும்?

நரசிம்மய்யர் : உன் பிள்ளை தானே ? முதலில் உளறிவிட்டு அப்புறம் யோக்கியமாக எழுதியிருக்கானுக்கும் ?

பார்வதி : அவன்தான் முதல் கார்டில் 'மனசு குழம்பியிருக்கு. பிறகு எழுதுகிறேன்' என்று எழுதியிருக்கானே ! அந்த அவசரத்தில் தான் க்ஷேமம், நமஸ்காரம் என்ற வார்த்தைகளைக்கூட எழுத விட்டுட்டான் !

நரசிம்மய்யர் : இந்தமட்டிலே குழப்பம் தீர்ந்து உடனே புத்தி வந்ததே ! நல்லகாலம்தான்போ ! ராமசாமிக்கு இப்போதே கடிதம் எழுதிடறேன். பரீட்சை முடிந்ததும் முகூர்த்தத்தை வைத்துக் கொள்ளும்படி எழுதிவிடுகிறேன்.

பார்வதி : சரி ! சீக்கிரம் எழுதுங்கோ.

(போகிறாள்)

பாலு : அப்பா எள்ளு வேணுமா வேண்டாமா ?

நரசிம்மய்யர் : என்னடா ! எள்ளுன்னு தடிச் செக்காக நிற்கிறவன் இன்னிக்கு என்னவோ எண்ணெயா இருக்கிறாயே! நான் போஸ்டாபீஸுக்குப் போகும்போது வாங்கிக் கொள்கிறேன். சந்திரனுக்கு வேறு கடிதம் எழுத ணும்.

காட்சி 7.

கிளியும் கழுகும்

[கோபாலய்யர் வீடு. கோபாலய்யர் கூடத்து நாற்காலியில் கன்னத்தில் கை வைத்தவாறு உட்கார்ந்திருக்கிறார். அவர் மனைவி பர்வதம் சற்றுத் தள்ளி நிற்கிறாள்.]

பர்வதம் : செட்டியார் காலையிலே இரண்டு தடவை வந்து விட்டார். பணம் உடனே வேண்டுமாம் !

கோபாலய்யர் : வட்டிக்கு ஆசைப்பட்டுப் பணத்தைக் கொடுத்து விட்டு அப்புறம் கிட்டி போட்டு நெருக்குவானேன் ? வட்டி வேணும்னால் கொஞ்சம் எட்டித்தான் இருக்க வேண்டும் !

பர்வதம் : வட்டிக்கு ஆசைப்பட்டு முதலை இழக்க யார் விரும்புவார்கள்? உங்களோட கொள்கை கடன் வாங்கறது! செட்டியார் லக்ஷியம் கடன் கொடுப்பது ! இரண்டிற்கும் ஒத்துப்போக வேண்டாமா ?

கோபாலய்யர் : (கோபத்துடன்) எல்லாம் உன் அயோக்கிய புத்திர சிகாமணிக்காகத்தான் மானம், ரோசம் எல்லாவற்றையும் விட்டுவிட்டுக் கடன் வாங்கிக் கழுத்தறு படவேண்டியிருக்கிறது. இந்தத் துரை காலேஜில் படிக்கவில்லை என்றுதான் குறையாக இருந்தது. சுத்தக் காலாடிப் பயல் !

பர்வதம் : அவனுக்குக் காலும் ஆடவில்லை ! கையும் ஆடவில்லை ! உங்களுக்குத்தான் நாக்கு அதிகமாக ஆடுகிறது !... நாளைக்கு அவன் பி. எ. பாஸ் பண்ணிட்டு வந்துட்டான்னு,... 'என் பிள்ளை பி. எ. பாஸ் பண்ணிட்டான், என் பையன் கிராஜுவேட் சார்' என்று தம்பட்டமடிக்காமலிருப்பீர்களாக்கும் ?

கோபாலய்யர் : அவன் கிராஜுவேட் ஆவதற்கு முன்னாலேதான் நம்ப பணம், பொறுமை, நம்பிக்கை எல்லாவற்றிற்கும் அதிர்வேட்டு வைத்துத் தகர்த்துவிடுகிறானே ?... எவ்வளவு கடன் வாங்கி அனுப்பினாலும் பெரிய ஜமீந்தார் மகன் மாதிரி காற்றிலே தூற்றிவிடுகிறானே ? அவன் காலேஜிலேயிருந்து வெளியே வரவும் நான் காஷாயம் வாங்கிக்கொண்டு கிளம்பவும் சரியாக இருக்கும் !

[கையில் ஸூட்கேஸுடன் விஸ்வம் வருகிறான்.]

பர்வதம் : வாடா அப்பா ! ஒரு கடுதாசிகூடப் போடாமல் புறப்பட்டு வந்துட்டியே ? ஏதும் லீவா ?

கோபாலய்யர் : கையிலிருக்கிற பணம் லீவு வாங்கிண்டு போயிருக்கும். ஒரு தாவுலே அப்பாவை மொட்டையடிக்க ஓடிவந்திருப்பான் !

விஸ்வம் : அப்பா ! நீங்க அனுப்பிக்கிற பிச்சாத் அரைக்கால் ரூபாயிலேயா இந்த விஸ்வம் காலேஜ் வாழ்க்கையைக் கனகுஷியாக நடத்துகிறான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ? இந்த விஸ்வத்திற்கு ஆயுட்காலம் வரை பாத காணிக்கை வைத்துப் பூஜிக்கும் நண்பர்கள் இருக்கிறார்கள் ! உங்கள் பணம் ஒரு பைசா இனிமேல் வேண்டாம் !

கோபாலய்யர் : சொல்லமாட்டாயா ? இன்னும் இரண்டு மாசம் தானே இருக்கு. என் தலையைத் தடவின மாதிரி ஏதாவது பிரண்டுகள் தலையைத் தடவி விடுவாய் ! அப்புறம் அவன்கள் உனக்குக் கொடுத்த பணத்திற்காக எனக்கு வாரண்டு கொண்டு வருவார்கள்.

பர்வதம் : வந்த குழந்தையை 'வா' என்காமல் யுத்தத்திற்குக் கச்சை கட்டிக்கொண்டு கிளம்புகிறீர்களே ? இருந்தாலும் வயசான உங்களுக்கு...

கோபாலய்யர் : '...சித்தம் சரியாக இல்லே, பித்தம் முத்திப்போச்சு' என்கிறாயா ? உன் பிள்ளை என்ன, மாமனாரகத்திற்கு வந்திருக்கிறானே ? அபசாரம் ஏற்படாமல் உபசாரம் பண்ணி வாசலில் போய் வாவென்று அழைக்க ?

விஸ்வம் : அப்பா ! உங்க கோபதாபத்தைக் கொஞ்சம் கட்டி வைத்து விட்டு நான் சொல்றதைக் கொஞ்சம் கவனித்துக் கேளுங்கள். ஒரு முக்கியமான விஷயம் சொல்லப் போறேன்.

கோபாலய்யர் : சரி! அப்படீன்னா இன்னும் யாரிடம் போய்க் கடன் வாங்குவது என்று யோசிக்கிறேன். உன்னைப் பொறுத்தவரை முக்கிய விஷயம் என்றால் பணம் கேட்பதுதானே ?

விஸ்வம் : சிவ சிவ !...அம்மா ! நீதான் கேளு ! நான் சொல்றது கொஞ்சம் உங்களுக்கு விசித்திரமாக இருக்கும். ஆனால் அதை நான் ரொம்ப யோசித்துச் சொல்லுகிறேன்...கீழப்பாளையம் ராமசாமி ஐயர்னு கேள்விப் பட்டிருக்கியா ?

கோபாலய்யர் : கீழப்பாளையம் ராமசாமியா ? யாரது ?

விஸ்வம் : பெரிய மிராசுதார் ! அவர் தம்பிகூட டில்லியிலே பெரிய வேலையிலே இருக்கார். அவருக்குக் கிளிபோல ஒரு பெண் இருக்கு.

கோபாலய்யர் : அந்தக் கிளிக்கு எந்தக் கழுகு பிறந்திருக்கோ ?

விஸ்வம் : நான்தான் அந்தக் கழுகு !...அப்பா ! அந்த இடம் ரொம்ப நல்ல இடம். அவர் இந்த வருஷம் பெண்ணுக்குக் கல்யாணம் நடத்த முயற்சி பண்ணிக்கொண்டிருக்கிறார். நீங்கள் எப்படியும் அந்தப் பெண்ணை எனக்கு மணம் முடித்து வைக்க வேண்டும். வரதக்ஷிணையே வேண்டாம் என்று வேண்டுமானாலும் சொல்லி விடுங்கள்!

கோபாலய்யர் : அழகுடாப்பா அழகு! சீ! வெட்கமாயில்லே! பெற்ற தகப்பனார் முன்னாலே வந்து நின்று கொண்டு, காராபூந்தி வாங்கிக் கொடு ஓமப்பொடி வாங்கிக்கொடு என்று குழந்தைகள் கேட்கும் தோரணையில் கல்யாணம் பண்ணிவை என்கிறாயே ? இந்தப் பாடம் படிக்கத்தான் காலேஜுக்குப் போகிறாயோ ?

விஸ்வம் : ஓஹோ! அப்பா, இந்தக் காலத்திலே உண்மைக்கும் யோக்கியதைக்கும் மதிப்பு இல்லே! ஏதோ உங்களுக்கும் கண்யமாக இருக்கும், எனக்கும் பிற்காலத்திலே உதவக்கூடிய சம்பந்தமாக இருக்கும் என்று ஏற்பாடு பண்ணச் சொன்னேன். உங்களுக்கு இஷ்டமில்லையல்லவா?...... விட்டுத்தள்ளுங்கள்! அப்புறம் நான் யாரையாவது ஸ்டெல்லாமேரியையோ பீகம் பிரோஸ்கான் அகமதையோ கல்யாணம் பண்ணிக்கொண்டு வந்து நின்றால் ஆக்ஷேபணை சொல்லமாட்டீர்களல்லவா? நான் வருகிறேன்.

(கிளம்புகிறான்)

பர்வதம் : விஸ்வம்! நில்லுடா! நில்லுடா!...என்ன! சின்னக் குழந்தை மாதிரிப் பேசுகிறீர்களே?...அந்த இடம் பெரிய பணக்கார இடம் என்றால், நமக்கு நல்லதுதானே? நாளைக்கு நம்ப விஸ்வம் ஆப்பிரிக்கா, அமெரிக்கா, போகணும்னுக்கூட அனுப்பி வைப்பாரே! எனக்கும் ஒரு வைர நெக்லேஸ் போட்டுண்ட நாட்டுப் பெண் வந்தால் பெருமையாயிருக்காதா?

கோபாலய்யர் : இப்போ என்னை என்ன பண்ணச் சொல்லுகிறாய்?

விஸ்வம் : நான் சொல்லுகிறேன் கேளுங்கள்! இதோ அந்தப் பெண்ணின் ஜாதகம். இதற்கு வெகு பொருத்தமாக என்னுடைய ஜாதகத்தைத் தயார் செய்துகொண்டு கீழப்பாளையத்திற்குப் போகவேண்டும். அங்கு எப்படியாவது ராமசாமியைச் சந்தித்து விவாகத்தை நிச்சயித்துவிட வேண்டும்.

கோபாலய்யர் : நீ எனக்குப் பிள்ளையடா! பெண் இல்லே! பெண்ணோட ஜாதகத்தையல்லவா இப்படித் தூக்கிக் கொண்டு அலைவார்கள்?

விஸ்வம் : நமக்கு ஆத்திரமாக இருந்தால் பிள்ளை ஜாதகத்தையும் தூக்கிக்கொண்டுதான் போகவேண்டும்!

கோபாலய்யர் : நீ பெண்ணைப் பார்க்கவேண்டாமா?

விஸ்வம் : அவசியமில்லே! நீங்கள் நடந்துகொள்ளும் தோரணையில் ராமசாமி ஐயர், வேறு இடத்தில் நிச்சயித்திருந்தால்கூட அதைக் கான்ஸல் செய்துவிட்டு உங்களைச் சம்பந்தியாக ஏற்றுக்கொள்ளவேண்டும்!

கோபாலய்யர் : அவர்கள் வேறு எங்கும் பார்த்துக்கொண்டிருக்கிறார்களோ?

விஸ்வம் : ஆமாம்! சமீபத்திலேகூட என் சிநேகிதப் பையன் ஒருவனுக்காகப் பார்த்தார்கள். அந்தப் பையன் தனக்குப் பெண் பிடிக்கவில்லே என்று சொல்லிவிட்டான்...இதையெல்லாம் நீங்கள் ரகசியமாக மனத்திற்குள் வைத்துக்கொள்ளவேண்டும். என்னத்தையாவது உளறிவைக்கக்கூடாது... நான் ஒரு பெரிய திட்டம்போட்டு வைத்திருக்கிறேன்.

கோபாலய்யர் : 'இப்போ கல்யாணம் பண்ணி வை, இல்லாத போனால் மானத்தை வாங்கிவிடுவேன்' என்கிறாய்! அவ்வளவுதானே?

விஸ்வம் : நீங்க அப்படிச் செய்யவில்லேயென்றால் உங்களுக்கு அமெரிக்க நாட்டுப் பெண்ணோ, ஐரிஷ் தேசத்து நாட்டுப் பெண்ணோதான் வருவாள்!

பர்வதம் : என்னத்தையாவது உளறுதேடா! உங்க அப்பா உன் இஷ்டம்போலே செய்வார்! உனக்குக் கல்யாணம் பண்ணிவைக்க எங்களுக்கு ஆசையிருக்காதா ?

விஸ்வம் : ஆசை இருக்கும்! ஆனால், எந்த சோளக்கொல்லை பொம்மையையாவது, கோவில் மூலஸ்தான விக்கிரகத்தையாவது என் கழுத்திலே காசுக்கு ஆசைப்பட்டுக்கொண்டு கட்டிவிடப்படாதல்லவா ?

கோபாலய்யர் : உன் திட்டத்தையெல்லாம் கொட்டிவிட்டாய்! ஆனால் சவுடாலாய் ஜரிகை வேஷ்டி சகிதமாய்ப் போயிறங்க என்னிடம் ரூபாய் கொட்டிக் கிடக்கவில்லையே!

பர்வதம் : இதோ பாருங்கோ! அச்சானியம் மாதிரி உளறுதே யுங்கோ! இதோ என் சங்கிலியை விற்று வேண்டுமானாலும் பணம் எடுத்துக் கொள்ளுங்கள்.

விஸ்வம் : ரொம்பத் தாங்க்ஸ் அம்மா! உனக்கு சீக்கிரமே காசு மாலை பண்ணிப் போடுகிறேன்.

[போகிறார்கள்]

காட்சி 8.

வஞ்சகன் விரித்த வலை

[ஹாஸ்டலில் விஸ்வத்தின் அறை. காலை வேளை. விஸ்வம் தனியாக உட்கார்ந்திருக்கிறான். அப்பு வருகிறான்.]

அப்பு : (மெதுவாகப் பாடுகிறான்) கண்டதுண்டோ கலியுகத்தில் காணப்போறோமோ, கட்டழகி கருப்பாயிபோல் கண்டிருப்போமோ?

விஸ்வம் : அது யாருடா கருப்பாயி? உன் கற்பனையை ரொம்ப இளக்கிவிட்டிருப்பாள் போலிருக்கே?

அப்பு : என் கற்பனையை மாத்திரமா சார்? கோடிக்கணக்கான தமிழ்நாட்டு ரசிகர்கள் உள்ளத்தையே குழப்பிவிட்டாளே!

விஸ்வம் : விஸ்தரிக்காமல் விஷயத்தைச் சொல்லுடா? சகதியிலே விழுந்த எருமை மாட்டை வருணிக்கிறாப்போலப் பேசுகிறாயே?

அப்பு : அவதான் சார்! கல்பனா தேவி! லட்ச ரூபாய் சார்! 'பத்தினிப் பெண்' என்கிற படத்தில் தோன்றி எல்லோரையும் பைத்தியமாகச் செய்தாளே?...ஆஹா! ஆஹா! அதிலேதான் அவளுக்கு என்ன பிரமாதமான டிரஸ்! படத்தைப் பார்த்து ஜனங்களுக்குக் கண் விழி சுளுக்கிக் கொண்டுவிட்டது!......அப்படி நடிக்கணும் சார்! இந்த அப்புவும் ஒரு காலத்திலே அப்படிப் புகழடையாமலா போயிடப் போறான்?

விஸ்வம் : அதுக்குப் புடவை ஜம்பரோடே பிறக்கணும்டா! நீ புடலங்காய் கத்தரிக்காய் நறுக்குகிறவனாய்ப் பிறந்திருக்கிறாயே! உன் பிரதாபம் இருக்கட்டும்டா!......கருப்பாயி என்கிறாய்! கல்பனாதேவி என்கிறாய்! உன்கூட ஹோட்டலிலே மாவு அரைத்துக் கொடுத்தவள்போல் சகஜமாகப் பேசுகிறாயே! அவள் தரிசனத்திற்கு மகாராஜாக்களும் ஜமீந்தார்களும் க்யூவிலே நிற்கிறார்களேடா!

அப்பு : அதெல்லாம் இப்போ வந்த வாழ்வு சார்! அவ பழைய கருப்பாயிதான் சார்! கணேச பவான் ஹோட்டலிலே தேங்காய் துருவிக் கொண்டிருந்தாள்! நான் காப்பி ஆற்றிக் கொடுத்துக்கொண்டிருந்தேன்! காற்று வாக்கிலே யோகம் அடிச்சது! கல்பனாதேவியாகி ககனத்திலே மின்னும் நட்சத்திரம்போல் சினிமா நட்சத்திரமாகிவிட்டாள்! அடியேன் அன்றிருந்த ஸ்திதிக்கு அரைமாற்றுக்கூடக் குறையாமல் இருக்கிறேன்!...... நான் பொறாமைப்பட்டுச் சொல்லலே சார்! அவ்வளவு புகழுக்கும் கருப்பாயி தகுந்தவள்தான் சார்!

விஸ்வம் : நீ அவளோட விசிறின்னு சொல்லு!

அப்பு : அவ வீட்டு விளக்குமாறாகக்கூட இருக்கத் தயார் சார்! அவள் மாத்திரம் என்னை எடுத்துப் பெருக்கணும்!

விஸ்வம் : முதலிலே உன் மண்டையிலே சேர்ந்திருக்கிற குப்பை களைத்தான், விளக்குமாறாலே பெருக்கணும்!......போடா பைத்தியம்! இன்னிக்கு என்னடா டிபன்?

அப்பு : அண்ணா!......லக்ஷியத்திலே வேணுமானால் ஒருத்தருக் கொருத்தர் வித்தியாசமிருக்கலாம்! நீங்க அரவிந்தர் படத்தை வைத்து இன்ஸ்பிரேஷன் அடைந்தீர்களானால், நான் ரமணர் படத்தை வைத்து சாந்தி பெறுகிறேன். ஆனால், லட்சண ரசிப்பிலே நீங்களும், நானும், மற்ற எல்லோருமே கல்பனாதேவி படத்தைத்தான் பூஜை பண்ணுகிறோம்!...... அதோ உங்கள் ரூமிலே அவள் படம்! இதோ என் பர்சிலே அவள் படம்! இதிலே பணம் இல்லாதபோனால் கூடக் கவலைப்படமாட்டேன். அவள் படம் இல்லையோ எனக்கு ஒன்றும் ஓடாது!......இதை யாரும் ஆட்சேபணை செய்தால் நான் காதை அறுத்துக்கொள்கிறேன்!

விஸ்வம் : ஐயையோ! அதை மாத்திரம் செய்துவிடாதே! ஏற் கெனவே உனக்கு எலிக் காது! அதையும் அறுத்து எறிந்துவிடாதே!... எனக்குக் கல்யாணம் வரப்போகிறது! அந்தச் சமயத்தில் நீ காதறுந்த மாப் பிள்ளைத் தோழனாகவல்லவா காட்சி யளிப்பாய்?

அப்பு : (ஆச்சர்யத்துடன்) என் அண்ணா, கல்யாணம் எப்போ? எங்கே? யார் பெண்? என்னிடம் சொல்லவேயில்லையே.

விஸ்வம் : அவசரப்படாதே! எல்லாவற்றையும் சொல்லுவேன்! நிச்சயமாய் நீ இல்லாமல் கல்யாணம் நடக்காது!

அப்பு : அது சரியான வார்த்தை! கல்யாணம் டிம்பக்டோவிலே நடந்தாலும் சரி தென்னம்பட்டியிலே நடந்தாலும் சரி! முகூர்த்த வேளையிலே அலறிப்புடைத்துக்கொண்டு பந்தலில் வந்து விழுந்துவிடமாட்டேனா?... பெண் யார் அண்ணா?

விஸ்வம் : (தணிந்த குரலில்) டேய் மண்டு! ரகசியமாய் வைத்துக் கொள்ளவேண்டும்! தெரிகிறதா?...அன்றைக்கு நானும் சந்திரனும் கீழப் பாளையத்திற்குப் போயிருந்தோமே?...

அப்பு : ஆமாம் அண்ணா! சந்திரனுக்குப் பெண் பார்க்கவல்லவா போனீர்கள்?

விஸ்வம் : பெண்ணைப் பார்த்தவன் அவன்! பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறவர் இவர்!...இந்த விஸ்வம்! அதெல்லாம் தந்திரமா முடித்துவிட்டேன்! சந்திரனைக்கொண்டே பெண் 'பிடிக்கவில்லை என்று எழுதச் சொல்லிவிட்டேன்.

அப்பு : கொளுத்துங்கோ! பெண் எப்படி இருப்பா? கல்பனா தேவியோட பேஸ் கட்டும், குஞ்சரிபாயோட குழிவிழும் கன்னங்களும், ராணி தேவியோட மூக்கும் சேர்ந்து தயாரான 'பிகரா' இருந்தால் ரொம்பப் பிரமாதமாக இருக்கும்! உங்களுக்கும் ரொம்பப் பொருத்தமாக இருக்கும்!

விஸ்வம் : என்னோடே வனஜா கிட்டே அவர்கள் எல்லாம் பிச்சை வாங்கணும்! அவளோட கால் கட்டை விரல் அழகிற்குக் காணுவாளா உன் கல்பனா தேவி?

[சந்திரன் கையில் ஒரு கடிதத்துடன் வருகிறான்]

சந்திரன் : என்ன? அழகு ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறாப் போலிருக்கிறது?

[விஸ்வம் அப்புவிற்குக் கண்ணைக் காட்டுகிறான்]

விஸ்வம் : ஒண்ணுமில்லை அப்பா! அப்பு வந்தால் எதைப் பற்றிப் பேசுவான், தெரியாதா?...டேய் அப்பு! நாயர் கடையிலே போய் ஒரு சிகரெட் பாக்கெட் வாங்கிக் கொடுத்துவிட்டு மெஸ்ஸுக்குப் போடா!

[அப்பு போகிறான்]

சந்திரன் : என்ன விஸ்வம்! அப்பா காகிதம் எழுதியிருக்கிறார்! விஷயம் 'ராபணா' என்று ஆகிவிட்டது! முகூர்த்தம் வைகாசியிலாம்!

விஸ்வம் : (திடுக்கிட்டு) யாருக்கு?

சந்திரன் : எனக்குத்தான்! வனஜாவை என் காலில் கட்டித்தான் விடுவார்கள் போலிருக்கு! நீ சொல்லியபடி எழுதிய கடிதங்களை அப்பா தவறுதலாகப் புரிந்துகொண்டார் போலிருக்கு! 'உன்னுடைய இரண்டாவது கார்டைப் பார்த்த பிறகுதான் எனக்குத் திருப்தி ஏற்பட்டது. ராமசாமி ஐயருக்கு எல்லா ஏற்பாட்டையும் செய்யும்படி எழுதிவிட்டேன்' என்று எழுதியிருக்கிறார்.

விஸ்வம் : நீ இரண்டு கார்டுகளைத் தொடர்ந்து எழுதும்போதே நினைத்தேன், ஏதாவது கோளாறு ஆகும் என்று! அந்தக் கடிதங்களை இரண்டு தனிக் கார்டுகள் என்று நினைத்துவிட்டார் போலிருக்கு உங்க அப்பா!...

சந்திரன் : இனிமேல் என்ன செய்வது? பேசாமல் காசியாத்திரை போகக் கண்ணாடி முன்னாலே ரிஹர்சல் பண்ணிக்கொள்ள வேண்டியதுதான்......பெண் கொஞ்சம் லக்ஷணமாய் இருக்கிறாளென்று திருப்திப்பட்டுக் கொள்ளவேண்டியதுதான்!

விஸ்வம் : நல்ல பாம்பு ஜோராய் மினு மினுவென்று கண்ணைக் கவரும்படியாகத்தானிருக்கிறது! அதற்காக அதை எடுத்து கண்ணே முத்தே என்று கொஞ்சி விளையாடலாமா?

சந்திரன் : பல்லே எடுத்துவிட்டால் பயமில்லேயல்லவா? மனேவி என்று ஆய்விட்டால் கணவனுடைய லக்ஷியங்களுக்கு அனுசரணேயாக இல்லாமலா நடந்து கொள்வாள்?

விஸ்வம் : சந்திரா! இனிமேல் நான் என்ன சொன்னுலும் உன் காதிலே விழாது! சொல்லியும் பிரயோஜனமில்லே! இப்போ ஊருக்குப் போயிட்டு வந்தபோதுகூட சில விஷயங்கள் காதில் விழுந்தன!

சந்திரன் : (வியப்புடன்) என்ன விஷயம்?

விஸ்வம் : உங்கிட்டே இனிமே சொல்லிப் பிரயோஜனமென்னப்பா? உங்கிட்டே இனிமேல் சொல்லவேண்டியது, 'சீக்கிரம் வனஜாவைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு குழந்தை குட்டிகளேப் பெற்றுக்கொண்டு சுகமாக இரு' என்பதுதான்!

சந்திரன் : சும்மா சொல்லப்பா!

விஸ்வம் : அவள் தன்னுடைய காதலனுக்கு எழுதிய கடிதங்களேயெல்லாம் கொண்டுவந்து காண்பித்தால் சும்மா இருப்பாயா? அப்போதாவது இந்தச் சம்பந்தத்தைப்பற்றிய ஆசையை விடுவாயா?

சந்திரன் : காதல் கடிதமா?...அவ்வளவுதூரம் முற்றிப் போன பொண்ணு? அந்தமாதிரி நபரெல்லாம் நமக்கு வேண்டாம்!...இப்போ அப்பா மனதை எப்படி மாற்ற முடியும்? நீ தான் ஒரு யோசனே சொல்லவேண்டும்!

விஸ்வம் : நான் சொன்னுல் கேட்பாயா?

சந்திரன் : நிச்சயமாய்! [விஸ்வம் சந்திரன் காதில் ஏதோ சொல்லுகிருன்.]

விஸ்வம் : நான் சொன்னது நன்ருய் நினேவிருக்க வேண்டும். கடைசிவரை உன் மனசு திடமாக இருக்க வேண்டும்! அவ்வளவுதான்!

சந்திரன் : அவர்கள் காசு பணத்தைச் செலவழித்து ஏற்பாடுகளேயெல்லாம் செய்து, கடைசியில் நான் அப்படிச் செய்தால் நம்பிக்கைத் துரோகம் செய்வதாகவல்லவா ஏற்படும்?

விஸ்வம் : அப்பா சந்திரா! உன் இஷ்டப்பிரகாரம் செய்! உனக்கு ஒரு பெரிய நமஸ்காரம்! இனிமே எந்த விஷயத்திலும் இந்த விஸ்வம் உனக்கு யோசனே சொல்ல வரமாட்டான்!

சந்திரன் : கோபித்துக்கொள்ளாதே! விஸ்வம்! நீ சொல்லுகிறபடியே செய்கிறேன். உன் வார்த்தைகளில் எனக்கு நம்பிக்கை உண்டு!...ஆனுல் ஒரு விஷயம் அவ்வளவு குற்றமாகப் படவில்லே. அவள் இதற்கு முன் ஒருவரைக் காதலித்தாள் என்பதில் குற்றம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லே!

(போகிருன்)

விஸ்வம் : (தனக்குள் இரைந்து) அடேடே! சமாச்சாரம் ஒருபுது வழியிலல்லவா திரும்பிவிட்டது! எப்போது நரசிம்மையர், கல்யாண ஏற்பாடுகளேச் செய்யச் சொல்லி எழுதிவிட்டாரோ, இனிமேல் அப்பாவால், வெற்றிகரமாகக் காரியத்தை முடிக்க முடியாது! அதனுல், நாம் இப்போது போட்ட திட்டப்படிதான் நடக்க வேண்டும்!......எல்லாம் ஒழுங்காக நடக்கட்டும்! அப்பாவிற்கும் ஒன்றும் கடிதம் எழுத வேண்டாம்.

அவர் ராமசாமியைப் பார்த்துப் பேசினாலும் சரி! பேசாவிட்டாலும் சரி! முகூர்த்த நேரத்திலே சந்திரன், பைத்தியம் போல் நடித்துவிடுவான்! அந்தச் சந்தர்ப்பத்தை லாகவமாகப் பயன்படுத்திக்கொண்டு, நான் தாலிகட்ட முன் வருவதுபோல் வந்தால், அவமானத்தைத் தவிர்க்க எண்ணும் ராமசாமி ஐயர் சரி என்று சொல்லிவிடுவார்! அப்புறம் யார் இந்தப் பித்துக்குள்ளி சந்திரனை மதிக்கப் போகிறார்கள்? அப்புறம் அவன் நிஜத்தைச் சொன்னால்கூட, பைத்தியம் உளறுகிறது என்றுதான் எல்லாரும் சொல்வார்கள்!... சரியான யோசனை! சபாஷ் விஸ்வம்! [அப்பு வருகிறான்]

அப்பு: இந்தாங்க சார்! சிகரெட் பாக்கெட்!...என் சார் சந்திரன் வந்தவுடன் கண்ணைக் காண்பித்தீர்கள்?

விஸ்வம்: என் கல்யாண விஷயம் அவனுக்குத் தெரியக்கூடாது! நீ அதைப்பற்றி மூச்சுவிடக்கூடாது!

அப்பு: ரொம்ப சரி அண்ணா! நான் வரட்டுமா?

விஸ்வம்: இரண்டு மூணு பிளேட் குலாப்ஜானை ரகசியமாக இப்படித் தள்ளிவிட்டுப்போ!...டேய். இன்னொரு விஷயம்! அடிக்கடி சந்திரன் ரூமிற்குப் போய்க் கவனித்துக்கொள்! வனஜா ஞாபகம் அவனுக்கு எந்த மட்டிற்கு இருக்கிறதென்று தெரிய வேண்டும்!......(காதோடு அப்புவிடம் ஏதோ சொல்கிறான்)

அப்பு: அண்ணா! உங்க யோசனை பிரமாதம் அண்ணா! பிரமாதம்! நீங்க மாத்திரம், அமெரிக்காவிலோ, இங்கிலாந்திலோ பிறந்திருந்தீர்களோ உங்கள் மூளையை அப்படியே அலாக்காக எடுத்து எக்ஸிபிஷனிலே வைத்துவிடுவார்கள்!...இப்போ நினைச்சுப் பார்த்தாலே ஆனந்தமாயிருக்கு! சந்திரன் ஏற்கனவே அரைப் பயித்தியம்தான்! அவன் முழுப்பைத்தியமா முகூர்த்தத்திலே நடிச்சு, நீங்க அதே சமயத்திலே தாலி முடிச்சை வனஜா கழுத்திலே போடறதை அடியேன் கண்டு ஆனந்தப்படணும்!

விஸ்வம்: அவனுக்கு வனஜா நினைவை வரவொட்டாமல் செய்ய மண்டையோட்டு மந்திரத்தை வேறு கையாளணும். லாபரட்டரி முனிசாமியை வரச்சொல்லிவிட்டுப்போ!

காட்சி 9.

சிங்கப்பூர் கோடீஸ்வரர்

[மணிபுரம் பஸ் ஸ்டாண்டு. கீழப்பாளையம் போகும் பஸ்ஸிற்காக கோபாலய்யர் காத்துக்கொண்டிருக்கிறார். ஜரிகை வேஷ்டி, அங்கவஸ்திரம் எல்லாம் தடபுடலாய் இருக்கிறது. அவர் பக்கத்தில் சுந்தரம் நிற்கிறார்.]

கோபாலய்யர்: (சுந்தரத்தைப் பார்த்து) என் சார்! கீழப்பாளையம் போகும் பஸ் எத்தனை மணிக்கு வருகிறது தெரியுமா?

சுந்தரம்: பத்தேமுக்காலுக்குக் கரெக்டா வந்துடும்!...உங்களுக்குக் கீழப்பாளையம்தானே?

கோபாலய்யர்: இல்லே! இல்லே!...மதுரை.

சுந்தரம் : அப்படிச் சொல்லுங்கோ! எங்கோ பார்த்த முகமா இருக்கேன்னு பார்த்தேன்...நீங்கதான் அந்த ரிட்டயர்டு டிப்டி கலெக்டர்...

கோபாலய்யர் : இல்லே! இல்லே!... நான் ஒண்ணும் உத்தியோகம் பார்க்கலே. ஏதோ கொஞ்சம் சாப்பாட்டுக்கு இருக்கு. பையன் காலேஜிலே பி. ஏ. வாசித்துக்கொண்டு இருக்கான். அவனுக்குப் பெண் பேசி முடிக்கத்தான் கீழப்பாளையம் போகிறேன்.

சுந்தரம் : (சற்று யோசித்தவாறு) கீழப்பாளையத்தில் எந்த இடமோ?

கோபாலய்யர் : மிராசுதார் ராமசாமின்னு கூடக் கேள்விப்பட்டிருப்பீர்களே!...அவர் பெண்ணைத்தான் பேசி முடிக்கப்போகிறேன்!

சுந்தரம் : அடேடே! ரொம்ப நல்ல இடம். உங்க பையன் அதிருஷ்டக்காரப் பையன்தான்! [ஏதோ யோசிப்பதுபோல் பாவனை செய்கிறார்.]

கோபாலய்யர் : என்ன யோசனை பண்ணுகிறீர்கள்?

சுந்தரம் : ஒன்றுமில்லே......வரதட்சிணை எவ்வளவு எதிர்பார்க்கிறீர்கள்?

கோபாலய்யர் : வரதட்சிணையைப் பிரமாதமாக நினைக்கவில்லே. ஏதோ அவர்கள் ஐயாயிரம் ரூபாய் கொடுக்கலாம்! பையனுக்கு அந்த இடத்து சம்பந்தத்திலே ஆசை!

சுந்தரம் : (தயங்கியவாறு) நல்ல இடம்தான்!...ஆனல்...

கோபாலய்யர் : என்ன 'ஆனல்' போடுகிறீர்கள்?

சுந்தரம் : நீங்கள் இவ்வளவு தூரம் முன்னேறிய பிறகு விஷயத்தைச் சொல்லவும் தயக்கமாக இருக்கிறது...சொல்லாமலிருக்கவும் மனம் இடம் கொடுக்கமாட்டேனென்கிறது!...வேண்டாம் சார்! என்னத்திற்கு? ஆயிரம் காலத்துப் பயிர்!

கோபாலய்யர் : சும்மா சொல்லுங்கோ சார்! சின்னப் பையன் அவன் ஆசைப்படுகிறான் என்பதற்காக ஆழம் தெரியாமல் காலைவிட்டுவிடக் கூடாதல்லவா?

சுந்தரம் : சொல்லிடறேனே! நீங்க அப்புறம் உசிதம்போலே செய்யுங்கோ...கீழப்பாளையம் ராமசாமி ஐயர் குடும்பத்திலேயே ஐந்தாறு தலைமுறையாக, கொஞ்சம் சித்தஸ்வாதீனமின்மை தலைகாட்டிவருகிறது. ராமசாமி ஐயரோட பாட்டனர் பைத்தியத்தினலே மாடிப்படியிலிருந்து விழுந்து செத்தார்! ராமசாமி ஐயரோட தகப்பனருக்கும் பைத்தியம்தான். ஆனல் பட்சவாதம் என்று வெளிக்குச் சொல்லி அவரைக்கடைசிவரை மாடி அறையில் கட்டியே போட்டிருந்தார்கள். ராமசாமியின் தமக்கைக்குக்கூட......

கோபாலய்யர் : என்ன? குடும்பத்திலே பெண்களுக்குக்கூட்....

சுந்தரம் : பெண்களுக்குக்கூட என்ன?......பெண்களுக்குத்தான் ஜாஸ்தியாக வருகிறது!

கோபாலய்யர் : (சுந்தரத்தின் கைகளைப் பிடித்துக்கொண்டு) நீர் மகானுபாவனையா! சமயத்தில் வந்து என் கண்களைத் திறந்தீர். உம் உத

வியை ஒரு நாளும் மறந்துவிடமாட்டேன் ! என்ன வைத்தியம் செய்தும் நீங் காத பைத்தியக் குடும்பத்தினிடம் மாட்டிக்கொள்ளாமல் தடுத்து ஆட் கொண்ட புண்ணியம் உமக்கு உண்டு. என்னுடைய கண்யத்தையும் காப் பாற்றினீர்...எனக்கு இன்னமே கீழப்பாளையம் போகவேண்டிய அவசியமே யில்லே !

சுந்தரம் : இந்த உலகத்திலே நீர் யாரைப்போய் விசாரித்தாலும் உமக்கு இந்தக் குட்டு தெரிந்திருக்காது. ராமசாமி அப்படிப்பட்ட எத்தன்! தன் குடும்பத்திலே இந்தக் கோளாறு இருக்குன்னு வெளியே தெரியாமல் நடந்துகொண்டிருக்கிறார். என் அத்தான் ஒருவன் சிலகாலம் அவரிடம் அந் தரங்கக் காரியஸ்தராக இருந்ததால் விஷயம் தெரிந்தது !...அதுசரி, உம்மிடம் பையனின் புகைப் படம் இருக்கிறதா?

கோபாலய்யர் : ஏன் ?...இருக்கு ! எடுத்துத் தருகிறேன் !... பையன் மன்மதன்னு மன்மதன் சார் ! ரொம்ப ஷோக்காக இருப்பான் எங்க விஸ்வம் சாதாரணமாக சைக்கிள்ளே ஏறிக்கொண்டு வந்தாக்கூட அஸ்வ சாரத்தியம் பண்ணிக்கொண்டுவர ராஜா போலிருப்பான் !

சுந்தரம் : ரொம்ப லக்ஷணவான் போலிருக்கு !

கோபாலய்யர் : என்னைப் பார்த்தால் அவனைப் பார்க்கவேண்டா மையா !

சுந்தரம் : (சிரித்துக்கொண்டே) அவனுக்கும் ஐம்பது வயது ஆய் விட்டதா ? கல்யாணம் அவனுக்கா உமக்கா என்ற சந்தேகத்தைக் கிளப்பிவிட்டுட்டீரே ?

கோபாலய்யர் : (அசட்டுச் சிரிப்புடன்) அடாடா ! வாட்ட சாட்டத்திற்குச் சொன்னேன் ஐயா !...என் ஐயா ! இந்த ஊரிலே உமக்குத் தெரிஞ்ச இடமா நல்ல பெண் ஏதும் இருக்கோ ?

[பையிலிருந்து விஸ்வத்தின் போட்டோவை எடுத்துக் கொடுக்கிறார்]

சுந்தரம் : (படத்தைப் பார்த்துவிட்டு) அடேடே ! ரொம்ப நல்ல பொருத்தமாயிருக்கும் போலிருக்கே ?...ஐயர்வாள் ! உம்ம பையன் யோக வான் !...அந்த சிங்கப்பூர் நடராஜய்யர் பார்த்தாரானு அப்படியே உம்ம பையன் நிறைக்குத் தங்கத்தைக் கொடுத்துக் கல்யாணம் பண்ணிடுவார் !

கோபாலய்யர் : பலே ! பலே ! பையன் இதற்காகவாவது கன மாக இல்லாமலிருக்கிறானே என்றல்லவா மனக்குறையாக இருக்கிறது !

சுந்தரம் : அட ! கேலிக்குச் சொல்லலே ஐயா ! நிஜமாகத்தான் சொல்லுகிறேன் ! சிங்கப்பூர் நடராஜய்யர்னு சொன்னால் காதிலே பண சப்தம் கல கலன்னு ஒலிக்குங்காணும் ! ஒரே பெண்; தங்கக் கிளிபோல லட்ச ரூபாய்க்கு நகை போட்டிருக்கார் ! யுத்தத்தினாலே, சிங்கப்பூர் ரப்பர் வியாபாரத்தை விட்டுட்டு தாய்நாட்டிற்குத் திரும்பிய கோடீஸ்வரர்களில் அவர் ஒருவர். உம் அதிருஷ்டம் அவர் இந்த நிமிஷத்தில் இந்த ஊரில் யாத்திரா மார்க்கமாகக் குடும்பத்துடன் வந்திருக்கிறார். சத்திரத்தில் தங்கியிருக்கிறார். நீர் மாத்திரம் சரியென்றால் ஐம்பதினாயிரம்வரை செலவழித்துக் கல்யாணம் நடத்துவார் !...என்ன சொல்கிறீர் ?

கோபாலய்யர் : சொல்வதற்கென்ன இருக்கிறது? வெல்லம் பிடிக்காத கட்டெறும்பும் இருக்குமா?...மணிபுரம் பஸ் ஸ்டாண்டிலே மணியான அதிருஷ்டம்தான் என்னைத் தேடிவந்திருக்கு!...வாரும் இப்போதே போய் நடராஜய்யரைப் பார்ப்போம்! இறக்கு சம்பந்தத்திற்குப் பதில் முறுக்கான சம்பந்தம் கிடைத்தது என்று பையனுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

சுந்தரம் : ஒருவேளை நடராஜய்யா இந்தச் சமயம் கோவிலுக்குப் போயிருந்தாலும் போயிருப்பார்! நீர் இங்கேயே இரும். நான் போய் அவர் சத்திரத்திற்கு வந்துவிட்டாரா என்று பார்த்துவிட்டு வருகிறேன்! அப்புறம் இருவரும் போவோம்!

கோபாலய்யர் : அப்படியானால் சீக்கிரம் வாரும்!

காட்சி 10.

கோபாலய்யர் பணம் கோவிந்தா!

[மணிபுரம் சத்திரம். சுந்தரம், நடராஜய்யர், கோபாலய்யர் எல்லோரும் உட்கார்ந்திருக்கிறார்கள். உள்பக்கம் கதவருகில் பாதி இருட்டில் நடராஜய்யர் பெண் எச்சுமி உட்கார்ந்திருக்கிறாள்.]

சுந்தரம் : நடராஜய்யர்னா சிங்கப்பூர் பூராவும் தெரியும்! பணக்காரர் மாத்திரமில்லே! ரொம்ப தர்மசிந்தனையுள்ளவர்! கோடிக் கணக்கிலே பணம் மாத்திரம் இருந்தால் போதுமா? அதைத் தாராளமாகச் செலவழிக்க மனம் வேண்டாமா?...ஒரே பெண்! குழந்தை மகா கெட்டிக்காரி! சமையலிலோ, சாதுர்யத்திலோ அவளை மிஞ்சிக்கொள்ள முடியாது!

நடராஜய்யர் : அதெல்லாம் அவர்கள் நாளடைவில் தெரிந்துகொள்கிறார்கள்!

சுந்தரம் : கோபாலய்யர்வாள்! நீங்க என்ன வரதக்ஷிணை சீர் எல்லாம் எதிர்பார்க்கிறீர்கள்?

நடராஜய்யர் : அவர் எதிர்பார்க்கவேண்டாம்! கொள்ளிடம்படுகையிலுள்ள நூற்றிருபது ஏக்கர் நஞ்சையும் எச்சுமிக்கு வரும் புருஷனுக்குத்தான்!

கோபாலய்யர் : (ஆச்சர்யத்துடன்) நூற்றிருபது ஏக்கரா?

சுந்தரம் : இதென்ன பிரமாதம்! முத்துப்பேட்டையிலிருக்கிற இருநூற்றி எழுபது ஏக்கர் எங்கே போச்சு?

கோபாலய்யர் : நடராஜய்யர்வாள்! நமக்குள் லௌகீகமெல்லாம் எதற்கு? எனக்கு இந்த இடம் பிடித்துப்போச்சு. நீங்க செய்யறது எனக்குத் திருப்தி!

நடராஜய்யர் : எச்சுமி! வந்து இவரை நமஸ்காரம் பண்ணம்மா!

கோபாலய்யர் : வேண்டாம்னா! குழந்தைக்கு சிரமம்!...முகூர்த்தத்தை எப்போ வைத்துக் கொள்ளலாம்?

[சுந்தரம் வாசல் பக்கம் போய் வருகிறார்.]

சுந்தரம் : சாயங்காலம் கோவில் அர்ச்சனை அலங்கார வகைக்குப் பணம் வேண்டி பூக்காரன் வந்திருக்கான்! லக்ஷார்ச்சனைக்குச் சொல்லியிருந்ததல்லவா!

நடராஜய்யர் : அடடா! மறந்து போயிட்டேன்! 'செக்'கான்னு இருக்கு! இந்த பாங்கிலே மாற்ற முடியாது. டவுனுக்குப் போகணும்.

சுந்தரம் : அதற்கென்ன? செக்கை கோபாலய்யர் கிட்டே கொடுத்துட்டு அவர் கிட்டே நூறு ரூபாய் வாங்கிக்கொண்டால் போச்சு !

நடராஜய்யர் : அது ஐந்நூறு ரூபாய் செக்கல்லவா ?

கோபாலய்யர் : செக் உங்களிடமே இருக்கட்டும்! இதோ நூறு ரூபாய்! பூக்காரனை அனுப்புங்கள். நல்லசகுனம்! இனிமேல் உங்க பணம் வேறு, என் பணம் வேறா ?

[சுந்தரம் பணத்தை வாங்கிக் கொண்டு வாசலுக்குப் போய் விட்டுத் திரும்புகிறார்.]

சுந்தரம் : அப்புறம் ?

கோபாலய்யர் : முகூர்த்தத்தை வைக்க வேண்டியதுதான் !

சுந்தரம் : இன்னொரு விஷயம்! நடராஜய்யருக்கும் உங்களைப் பிடித்துப் போய் விட்டது. இனிமேல் அவரும் வேறு இடத்தில் வரன் தேட அவசியமேற்படாது. நீங்களும் உங்கள் வாக்கைக் காப்பாற்ற வேண்டும்.

கோபாலய்யர் : என் வார்த்தையிலே உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?...உங்களுக்கு என் சம்மதத்தை எழுதி வேண்டுமானாலும் தருகிறேன்!

சுந்தரம் : அதுவும் நல்ல யோசனைதான்! 'ஸ்ரீமான் சிங்கப்பூர் நடராஜய்யர் புத்திரி எச்சுமியையே நான் என் புத்திரன் விஸ்வத்திற்கு மணம் முடிக்க வாக்களிக்கிறேன். இதுவே நிச்சயதார்த்தம்' என்று எழுதும்!... நடராஜய்யருக்கும் அப்புறம் மனசு மாறக்கூடாதல்லவா ?

(சுந்தரம் சொல்லியபடி கோபாலய்யர் எழுதுகிறார். நடராஜய்யர் வாங்கிக் கொள்கிறார்.)

கோபாலய்யர் : நீங்கள் எப்போது சிதம்பரத்திற்குத் திரும்புவீர்கள்? முகூர்த்தத்தை வைகாசியில் வைத்துக்கொள்ளலாம். அதற்குள் விஸ்வம் பரீட்சையும் எழுதிவிடுவான்.

நடராஜய்யர் : நாங்க இந்த மாதக் கடைசியில் ஊர் திரும்பிவிடுவோம். உடனே நான் வருகிறேன்.

கோபாலய்யர் : சரி! ரொம்ப சந்தோஷம்! நான் இரண்டு மணி பஸ்ஸிலே ஊருக்குத் திரும்புகிறேன்!

நடராஜய்யர் : ரொம்ப சந்தோஷம். சுந்தரம்! அண்ணாவை பஸ்ஸில் ஏற்றி அனுப்பிவிட்டு வா!

[சுந்தரமும் கோபாலய்யரும் போகிறார்கள். சில வினாடிகளில் சுந்தரம் திரும்பி வருகிறார்]

சுந்தரம் : பஸ் வழியிலேயே வந்துவிட்டது. அந்தப் பித்துக்குள்ளியை அதிலே தூக்கிப்போட்டு அனுப்பிச்சுட்டேன்!

நடராஜய்யர் : சரியான பித்துக்குள்ளி! இல்லாதபோனல் இது பிள்ளைக்குக் பெண்தேடிக்கொண்டு அலையுமா? நம்மிடம்தான் வந்து சிக்குமா?

சுந்தரம் : பஸ் ஸ்டாண்டிலே கவனிச்சபோதே புரிந்துகொண்டுட்டேன்! அவன் வாயிலேயிருந்து வந்த வார்த்தைகளைக் கொண்டே ராமசாமியைப் பற்றி கப்ஸாவிட்டேன்! உன்னை ஒரு கோடீஸ்வரனுக்கினேன்!

நடராஜய்யர் : அந்தக் காலத்திலே டிராமாவிலே நடிச்ச அனுபவம் இப்பவும் உபயோகப்படுகிறது! சமையல்காரப் பிழைப்பைக் கைக் கொண்டாலும் பழைய சாமர்த்தியம் இருக்கு!

சுந்தரம் : எங்கே உன் செவிட்டுப் புத்திரிகாமேஷ்டி நமஸ்காரம் பண்ண வந்துவிடுமோ வென்று பயந்தேன். அப்படி வந்து தொலைத்தால், கழுத்திலே தொங்கும் முத்து மாலையும் காதிலே கிடக்கும் கண்ணடித் தோடும் நம் திட்டத்தைக் காலை வாரி விட்டிருக்கும்!

நடராஜய்யர் : நான்தான் அவளை இடி விழுந்தாக்கூட அந்த இடத்தை விட்டு ஒரு அடி நகரப்படாது என்று சொல்லி வைத்திருக்கிறேனே? வருவாளா?

சுந்தரம் : இப்போ சிரத்தையா அந்தப் பைத்தியம் நூறு ரூபாய் கொடுத்தது! கொள்ளிடம் படுகையைப் பற்றியும் முத்துப்பேட்டை வயலைப் பற்றியும் சொப்பனம் காணும்!

நடராஜய்யர் : சந்தர்ப்பம் கிடைத்தால் அவன் எழுதிக் கொடுத்ததை வைத்துக்கொண்டே, அவனைப் பயமுறுத்தி செவிட்டு எச்சுமியை அவனுக்கு நாட்டுப் பெண் ஆக்கிவிடலாம்! அந்தக் கடிதத்தையும் போட்டோவையும் பத்திரமாய் எடுத்து வை!

சுந்தரம் போ! போ! சீக்கிரம் இந்த தடபுடல் ராஜாபார்ட் டிரஸ்ஸைக் கழட்டிட்டு, ரசத்திற்குப் பொடியைக் கரை! அப்புறம் சத்திரத்து மணியகாரன் சண்டைக்கு வரப்போகிறான்!

காட்சி 11.

சதி வளர்கிறது!

[ஹாஸ்டலில் விஸ்வத்தின் அறை. விஸ்வம் கையில் ஒரு கடிதத்தை வைத்துக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருக்கிறான்.]

விஸ்வம் : (தனக்குள் இரைந்து) நல்ல அப்பா! எங்கிருந்து வந்து வாய்த்தார்! சுத்தப் பட்டிக்காடு. ராமாசாமி ஐயரைவிடப் பலமடங்கு உயர்ந்த இடத்தைக் கண்டு பிடிச்சு நிச்சயம் பண்ணிவிட்டாராமே! சம்பந்தி வீடு உயரமான தளம் போட்டுக் கட்டியிருக்கிறதோ என்னவோ?...வெறும் அசடு!... சரி சரி! அவர் ராமசாமியைப் பார்க்காமலிருந்ததும் ஒரு விஷயத்தில் நல்லது தான்!...முகூர்த்த சமயத்தில் சந்திரன் பைத்தியமாக நடிக்கும்போது நான்

திடீரென்று கல்யாணத்திற்குத் தயார் என்று வந்தால் ஒருவரும் சந்தேகப்பட மாட்டார்களல்லவா?...அப்பா பார்த்திருக்கும் பெண் ரொம்ப அழகி என்றால் அவரே வேண்டுமானாலும் அம்மாவை டைவோர்ஸ் பண்ணிவிட்டு அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளட்டும்!

[அப்பு வருகிறான்]

அப்பு : என்ன அண்ணா? ஏதும் பரீட்சைக்காகப் பாடம் பண்ணுகிறீர்களோ?...பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கிறாப்போலிருக்கே?

விஸ்வம் : வெறும் புஸ்தகப் பரீட்சை இல்லையடா! வாழ்க்கைப் பரீட்சை! அதிலும் முக்கியமாய் கல்யாணப் பரீட்சை!

அப்பு : அதற்கெல்லாம்தான் நீங்கள் தயார் பண்ணி விட்டீர்களே! பரீட்சையில் பஸ்டுகிளாஸ்தான்!...அடேடே! மறந்தே போயிட்டேன்!... இதோ கொஞ்சம் பாதாம் ஹல்வா! இதை விழுங்கிவிட்டு அடுத்த காரியத்தைப் பாருங்கள். அந்த சாரங்கபாணி கழுகு மாதிரிப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்படியிருந்தும் அவன் கண்ணிலே மண்ணைத் தூவிட்டு வந்துட்டேன்!...இப்போதெல்லாம் அவன் ரொம்ப சந்தேகப்படுகிறான் அண்ணா.

விஸ்வம் : கிடக்கிறான் பிச்சைக்காரப் பயல்! இந்த ஹாஸ்டல் இல்லையென்றால் உலகமே அஸ்தமித்தா போய்விடும்?...இந்த நிமிஷத்திலே வேண்டுமானாலும் மாருதி பவானிலே உனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்து விடுவேன்!

அப்பு : மாருதி பவானிலா அண்ணா? பஸ்டு கிளாஸ் ஹோட்டல்!... அண்ணா, இப்போ வேண்டாம்! விடுமுறைக்கு ஹாஸ்டல் சாத்தி நீங்கள் ஊருக்குப் போகும் போது என்னை அங்கே நுழைத்து விட்டுப் போங்கள்! காலேஜ் விடுமுறை நாட்களில் உதவியாக இருக்கும்!

விஸ்வம் : காலேஜ் சாத்தின பிறகுதான் நான் ஊருக்குப் போகவில்லை. மாருதி பவானிலேயே ஒரு ரூம் எடுத்துக் கொண்டு தங்கப் போகிறேன். சந்திரனும் என்கூடத்தான் இருப்பான்! இந்தக் கல்யாண நாள் வரை அவனை என் கண்காணிப்பிலேயே வைத்திருக்க வேண்டும்! ஊருக்குக் கீருக்குக் போனானோ அப்புறம் அவன் மனம் மாறினால்கூட மாறிவிடும்! இந்த விஸ்வம் அப்படி எல்லாம் ஏமாறத் தயாரில்லை! ஏதாவது ஒரு டிப்ளோமா பரீட்சைக்காக இங்கிருந்தே ஒரு மாதம் படிக்க வேண்டும் என்று சந்திரன் அப்பாவிற்கு எழுதியிருக்கிறான். நான்தான் சொன்னேன்.

அப்பு : நல்ல ஐடியா அண்ணா!...ஆனாலும் நான் கவனித்த மட்டில் நீங்கள் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்! சந்திரனுக்கு ஸ்திர புத்தியில்லை! நேற்று திடீரென்று அவன் ரூமிற்குப் போனேன். ஒரு நோட்டுப் புஸ்தகத்தில் வனஜா வனஜாவென்று மள மளவென்று ராமஜெயம் எழுதுகிற மாதிரி எழுதிக்கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் டக்கென்று மூடிவிட்டான்!

விஸ்வம் : குடி கெட்டது போ! இதை ஏண்டா அப்பவே என்னிடம் சொல்லவில்லை?

அப்பு : இது மாத்திரமா அண்ணா? முந்தா நாள் ராத்திரி அவருக்குப் பால் கொண்டுபோகும்போது நேரமாகிவிட்டது, தூங்கிவிட்டார்.

நான் கதவைத் திறந்தேன். தூக்கத்திலே "வனஜா! வந்துட்டியா! வந்துட்டியா!" என்று கைகளைக் காற்றிலே வீசுகிறார்!

விஸ்வம் : நாசமாய்ப் போச்சு! இனிமேல் சும்மாயிருந்தால் முதலிற்கே மோசம் வந்துவிடும்! அப்புறம் அந்தப் பயல் இந்த விஸ்வத்தை நிஜப் பைத்தியமாக்கிவிடுவான்!......அப்பு! லாபராட்டரி முனிசாமி கிட்டே எல்லாம் சொல்லி வைத்திருக்கிறேன்.

அப்பு : அண்ணா! அவன் நம்பிக்கையான ஆள்தானா?

விஸ்வம் : உன்னை எவ்வளவு தூரம் நம்புகிறேனோ அவ்வளவு தூரம் அவனையும் நம்புகிறேன்!......நல்ல ஆசாமி! பரிசோதனைச் சாலையிலிருந்து ஒரு மண்டையோடு, சில எலும்புகள் எல்லாவற்றையும் அமுக்கிக்கொண்டு வரச் சொல்லவேண்டும். நீயும் அவனும் இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்தாற்போல் நடு நிசியில், பிசாசுகள் போலக் கறுப்புத் துணியில் வேஷம் போட்டுக் கொண்டு அவன் ரூமிலே போய், 'வனஜா எங்க வனஜா! நீ அவளைப் பற்றி நினைத்தாயோ உன்னை ரத்தம் கக்க சாகடித்துவிடுவோம்' என்று பயமுறுத்த வேண்டும்!

அப்பு : ரூம் கதவைச் சாத்தி உள்ளே தாழ்ப்பாள் போட்டிருப்பாரே?

விஸ்வம் : அதற்கெல்லாம் முன் ஏற்பாடாக நான் சாவி தயார் பண்ணி வைத்திருக்கிறேன்! அவன் பயத்தில் சத்தம் போடமாட்டான். அப்படிப் போட்டாலும் லபக்கென்று இந்தக் கடற்பஞ்சு உருண்டையை அவன் வாயில் அடைத்துவிடு. யாராவது விழித்துக்கொண்டதுபோல் தெரிந்தால் இரண்டே எட்டில் என் ரூமிற்குள் வந்து பதுங்கிக்கொள்ளுங்கள்!

அப்பு : ரைட் அண்ணா! நாங்கள் ஜமாய்த்துவிடுகிறோம். 'தீவட்டிக் கொள்ளைக்காரன்' என்னும் படத்தை நான் முப்பது தடவை பார்த்திருக்கிறேன்! அதிலே அந்தக் கதா நாயகன் இப்படித்தான் பிசாசுபோலே...

விஸ்வம் : சரி சரி! நீ மெஸ்ஸிற்குப் போ! அப்புறம் அந்த சாரங்கபாணி பிசாசுபோல கூப்பாடு போடப்போகிறான்!

அப்பு : போறேன் அண்ணா! ஒரு...ஒரு ரூபாய் இருந்தால் கொடுங்களேன்! இன்றைக்கு செகண்டு ஷோவிற்கு......

விஸ்வம் : மடப் பயலே! இன்னும் நாலைந்து நாட்களுக்கு உனக்கு செகண்டு ஷோ...சந்திரன் ரூமிலேதான்...அப்புறம்தான் வெளியே சினிமா! இந்தா, ஒரு ரூபாயா, இல்லை. இரண்டு ரூபாய்களாகத்தான் இருக்கு! போ! கொண்டுபோ!

[அப்பு ரூபாயை வாங்கிக்கொண்டு போகிறான்]

காட்சி 12

சிங்கப்பூரான் கடிதம் வருமா?

[கோபாலய்யர் வீடு. காலை வேளை. கோபாலய்யர் வாசலுக்கும் உள்ளிற்குமாக நடந்துகொண்டிருக்கிறார்.]

பர்வதம் : குட்டி போட்ட பூனை மாதிரி எதற்காகக் குறுக்கேயும் நெடுக்கேயும் அலைகிறீர்கள்? தொட்டி நிறையக் கிணற்றிலிருந்து ஜலம் நிரப்பினாலும் பிரயோஜனமுண்டு!

கோபாலய்யர் : என்னை ஒரு மட்டின்னு நினைச்சுட்டே போலி ருக்கு! நீ அடுத்த வீட்டுக் கல்யாணியுடன் வெட்டி வம்படிக்கும் நேரத்தில் ஜலத்தை ரொப்பு! நான் தபால்காரனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்! இன்றைக்காவது அந்த சிங்கப்பூர் நடராஜய்யரிடமிருந்து கடிதம் வருகிறதா என்று பார்ப்போம்! நாட்களும் ஓடிக்கொண்டிருக்கு. வைகாசியும் போய் விட்டதுன்னா...

பர்வதம் : முன்பின் தெரியாதவனை நம்பி நூறு ரூபாயையும் இழந்து விட்டு வந்திருக்கிறீர்கள்! உங்களை ஏமாற்றிப் பட்டை நாமம் சாத்தி அனுப்பியிருக்கிறான்! இன்னமும் காகிதம் போடப் பைத்தியமா அவனுக்கு? அவன் விலாசத்தைக் கூட நீங்கள் கேட்டுக்கொண்டுவரவில்லை!

கோபாலய்யர் : இந்தப் பெண் பிள்ளைகளுக்கே அவநம்பிக்கை ஜாஸ்தி! அந்த நடராஜய்யரோடே தேஜஸையும் கம்பீரத்தையும் பார்த்தால் யாரும் லட்ச ரூபாய் ஜாமீன் கொடுப்பானே?...விலாசத்தை விசாரிக்காமல் வருவேனா?...சிதம்பரம்கோவில்தெரு! நடராஜய்யர்!

பர்வதம் : சிதம்பரத்தில் நடராஜர் இல்லேன்னு யார் சொல்கிறார்கள்? அதுவும் கோவில் தெரு! பேஷ்! பேஷ்! உங்க உருட்டல்களெல்லாம் என்னிடம்தான்!

கோபாலய்யர் : கொள்ளிடம் படுகையிலே இருக்கிற நூற்றிருபது ஏக்கர் நிலமும் உன் பிள்ளைக்குக் கிடைக்கிறபோது நீ வேண்டாம் என்று சொல்லிவிடுவாயாக்கும்?...போடி அசடே! வாயை மூடிக்கொண்டு இரு! சிங்கப்பூரான் சொத்து நம்மை வந்து சேரணும் என்று அதிருஷ்டம் இருக்கும்போது அது வராமல் போகுமா?

பர்வதம் : கொள்ளிடம் படுகையிலே நிலமிருக்குன்னா? இல்லாத போனால் மணல் இருக்குன்னா?

கோபாலய்யர் : ஏய் அபத்தம்! வாயை மூடிக்கொண்டு இரு! அதோ தபால்காரன் ஏதோ கடிதம் கொண்டு வருகிறான்.

[தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போகிறான்.]

பர்வதம் : யார் போட்டிருக்கா? சிங்கப் பூரானா? சிங்கப் பல்லியா?

கோபாலய்யர் : (கடிதத்தைப் பிரித்துப் பார்த்துக்கொண்டே)... உன் அருமைப் பிள்ளைதான் எழுதியிருக்கான்! பரீட்சை முடிந்த பிறகும் அங்கே ஒரு மாதம் தங்கிவிட்டுத்தான் வருவானாம்! அவன் சினேகிதன் ஒரு வனுக்குக் கல்யாணத்தை நடத்தி வைக்கும் பொறுப்பு அவன் தலையிலே விழுந்திருக்காம்! அந்தக் கல்யாணத்திற்கு நாமும் அவசியம் வந்து சேரணு மாம்!

பர்வதம் : எனக்குக் கூடத்தான் நாலு நாள் நிம்மதியாய்க் கல்யாணச் சாப்பாடு சாப்பிடவேண்டும் போலிருக்கிறது! கல்யாணம் எங்கேயாம்?

என்றேன்! இப்போதாவது என் வார்த்தைகளில் நம்பிக்கை விழுகிறதா? இனிமேலாவது நான் சொல்லிக்கொடுத்த நாடகத்தைத் தைரியமாய் முகூர்த்த நேரத்தில் நடிப்பாயா? அப்போதுதான் இந்த இக்கட்டிலிருந்து தப்பிக்கலாம். அசடு வழிந்து ஏதாவது செய்தாயோ, அவளைப் பிடித்திருக்கும் பிசாசு உன்னைக் க்ளோஸ் பண்ணிவிடும்.

சந்திரன் : விஸ்வம்! இந்த விஷயத்தில் என் உயிரைக் காப்பாற்றிய நண்பன் நீதான்! உன் வார்த்தைக்கு மறு வார்த்தை சொல்லுவேனா?... நான் அப்போது பைத்தியமாக நடிக்கப்போவதைக் கண்டு, நிஜப் பைத்தியங்கள் வெட்கித் தலை குனியும்படி இருக்கும்!

விஸ்வம் : எங்கே ஒரு வேளை நீ பரீட்சை முடிந்த பிறகு ஊருக்குப் போனால் உன் அப்பா உன் மனத்தை மாற்றிவிடுவாரோ என்றுதான் உன்னை இங்கேயே இருக்கச் சொன்னேன்! ஒருவேளை அவர் நீ சொல்வதை நம்பாவிடில் ஆபத்தல்லவா விளையும்?

சந்திரன் : அதுதான் நான் அவருக்கு எழுதிவிட்டேனே! 'முகூர்த்த தினத்திற்கு முதல்நாள் நான் நேரே அங்கு வந்து சேருவேன்! வேண்டிய துணிமணிகள் இங்கேயே வாங்கிக்கொள்ளப் பணம் அனுப்பி வையுங்கள்! ஜர்னலிசத்தில் டிப்ளோமா வாங்குவதற்காகப் படித்துக்கொண்டிருக்கிறேன்!' என்று கயிறு திரித்திருக்கிறேன்!

விஸ்வம் : சபாஷ்! சபாஷ்!...நானும் மாருதி பவான் மாடியிலே ரூமிற்கு ஏற்பாடு பண்ணிவிட்டேன்!...அது சரி! இதோ என்னிடம் ஒரு சக்திவாய்ந்த சாமியாரின் விபூதி இருக்கிறது! படுக்கப் போகும்போது அதைத் தடவிக்கொண்டு தூங்கினால் பயம் ஏற்படாது!...வார்டனிடத்தில் போய் எதையாவது சொன்னால், அது அனாவசிய விளம்பரத்திற்கு இடம் கொடுக்கும்! [புஸ்தகத்திலிருந்து ஒரு பொடியை எடுத்துத் தருகிறான்.]

சந்திரன் : இங்கேயே பூசிக்கொள்கிறேன். வரட்டுமா?

[போகிறான்]

விஸ்வம் : (தனக்குள் இரைந்து) விஸ்வம்! நீ ஒரு ஜீனியஸ்! உனக்கு ஜெயம் கிடைக்காத விஷயம் எது? சந்திரனைப் பற்றி நீ கவலைப்படவேண்டிய அவசியமே இனி இல்லை! பலே! இனி நீ வனஜாவிற்குத் தாலி கட்ட வேண்டியதுதான் பாக்கி! போரிக் பவுடரை விபூதி என்று நினைத்துப் போகிறான். [அப்பு வருகிறான்.]

அப்பு: என்ன அண்ணா ரிஹர்சல் நடக்கிறது? கடைசி நிமிஷத்துலே பைத்தியக்காரச் சந்திரனை ஒதுக்கிவிட்டு எப்படி ஜம் என்று மண மேடையில் ஏறி நிற்பது என்று யோசித்துப் பார்க்கிறீர்களோ?

விஸ்வம் : அதெல்லாம் அப்போதே மனப் பாடம் ஆய்விட்டது!... அடேடே! முக்கிய விஷயம்! இனிமே நீயும் முனுசாமியும் ராத்திரி பேய் வேஷம் போடவேண்டாம்!

அப்பு : வெளியே யாருக்கும் தெரிஞ்சுபோய்விட்டதா அண்ணா?

விஸ்வம் : இல்லை! இல்லை! பையன் வழிக்கு வந்துட்டான்! இனிமேல் லட்ச ரூபாய் கொடுக்கிறேன்னாக்கூட வனஜா என்று வாய் திறந்து சொல்ல மாட்டான். [முனுசாமி வருகிறான்.]

முனுசாமி : சாமி நமஸ்காரமுங்க !

விஸ்வம் : வாப்பா, முனுசாமி! நீங்க ரெண்டுபேரும் படே வேலை செஞ்சிருக்கீங்க ! பிள்ளையாண்டான் வழிக்கு வந்துட்டான் !

முனுசாமி : இந்த முனிசாமிக்குத்தான் தோல்வி என்பதே தெரியாதுங்களே!...அது சரி சாமி! இப்போ ஏதோ லக்ஷம் கிக்ஷம்னு பேசிக்கிட்டு இருந்திங்களே, நமக்கு அவ்வளவு வேண்டாம். ஒரு ஐம்பது ரூபாய் அவசரமா தேவையா யிருக்குதுங்க! பொஞ்சாதிக்கு உடம்பு சரியாக இல்லை!

விஸ்வம் : எண்பது ரூபாயா? ஆத்தாடியோ! ரூபாய் முளைக்குதுன்னு நினைச்சுக்கிட்டு இருக்கியா? அன்னிக்குத்தான் சுளையாக முப்பது ரூபாய் கொடுத்தேனே !

முனுசாமி : (அலக்ஷியமாய்) அந்த முப்பது ரூபாய்தான் மூணு நிமிஷத் துக்குக்கூட வரலீங்களே! லாபரட்டரியிலே யிருந்து சில சாமான்களைக் காணோம்னு இருபது ரூபாய் அபராதம் போட்டுட்டாங்க! அந்தச் சாமான் களெல்லாம் உங்களுக்காக அமுக்கிட்டு வந்ததுதானுங்க! மீதி பத்து ரூபாய் ஐந்தாறு நாட்களுக்குக் காப்பி சாப்பிடத்தானுங்க கண்டது.

விஸ்வம் : உன்னை யாரு அப்படிக் காப்பி குடிக்கச் சொன்னார்கள் ?

முனுசாமி : சாமி ! எனக்கு அதெல்லாம் தெரியாதுங்க! இப்போ ஐம்பது ரூபாய் வேணுங்க! இல்லேன்னா நான் அப்புறம் பார்த்துக்கிறே னுங்க !

விஸ்வம் : என்னத்தைப் பார்ப்பாய் ?

முனிசாமி : அந்தச் சந்திரன் ஐயா கிட்டேயும், ஹாஸ்டல் வார்டன் கிட் டேயும் சொல்விடறேனுங்க! நடந்ததை ரூபிக்க, அப்பு பெட்டியிலே இருக் கிற மண்டையோட்டைக் காமிச்சாப் போச்சு!

விஸ்வம் : நீ இவ்வளவு தூரம் வந்துட்டியா? உன்னை நம்பினது மோசமாகவல்லவா போய் விட்டது ?

முனுசாமி : நீங்களும் ஒருத்தரை மோசம் பண்ணுவதற்காகத்தானே என் உதவியைத் தேடினீங்க ?

விஸ்வம் : நான்சென்ஸ்! சும்மா இரு! இப்போ ஐம்பது ரூபாய் கொடுத்தால் மறுபடியும் ருசி கண்ட பூனை போல நாளைக்கு நூறு ரூபாய் கேட்டு வருவாய் !

முனுசாமி : சத்தியமாய்ச் சொல்றேனுங்க! நீங்க இப்போ ஐம்பது ரூபாய் கொடுத்தால் அப்புறம் இந்த திசைப் பக்கம் தலை வைத்துப் படுக்க மாட்டேனுங்க!

விஸ்வம் : உன்னை நம்பறேன்! ஆனால் பணம் இப்போ இல்லை! நாளைக்கு ராத்திரி இதே வேளைக்கு வா. [முனுசாமி போகிறான்].

அப்பு : (தலையிலடித்துக் கொண்டு) நான் அப்பவே சொன்னேனே அண்ணா? இந்தக் காலிப் பயல் இப்போது காலை வாரிவிடத் தயாராயிட் டானே ?

விஸ்வம் : எனக்கும் ஒண்ணும் புரியவில்லை! சிகரெட் வாங்கக் கையிலே இப்போது சிரத்தையாக ஐந்தணா இல்லை! இந்த மடையன் ஐம்பது

ரூபாய்க்குக் கழுத்திலே கத்தி வைக்கிறான்...சரி! தாவர சாஸ்திர புரொபசருக்கும் இவனுக்கும் ஆகாது! அவரிடம் இவனைப் பற்றி வத்தி வைத்து இந்த வாரமே டிஸ்மிஸ் பண்ண ஏற்பாடு செய்கிறேன். அதற்கு நான்தான் காரணம் என்று அவன் தெரிந்து கொள்ள மாட்டான். அவன் இனிமேல் காலேஜில் வேலை பார்த்தால் ஆபத்து.

அப்பு : நாளை அவனுக்குப் பணம் கொடுக்க வேண்டுமே?

விஸ்வம் : அதுதான் எனக்கும் கவலையா இருக்கு.

அப்பு : எனக்கும்தான் கொஞ்சம் பணம் வேண்டும். உங்க கல்யாணத்திற்கு வரணும்னு கொஞ்சம் டீக்காக வர வேண்டாமா?

விஸ்வம் : சரி! நீயும் முனுசாமி கோஷ்டியிலே சேர்ந்துட்டே போலிருக்கு!

அப்பு : என்ன அண்ணு! என்னையும் அப்படி நினைச்சுட்டீங்களே? இப்போ உங்களுக்கும் எனக்கும் சேர்த்துப் பணம் கிடைக்க ஒரு வழி சொல்லவல்லவா நான் வந்திருக்கிறேன்!

விஸ்வம் : நிஜமாகவா? அப்பு! நீ என் ஆப்த நண்பன்! காலேஜ் மூடினதும், உன்னை எப்படியும் ஒரு சினிமா ஸ்டுடியோவில் சேர்த்து விட்டுத்தான் மறு ஜோலி!

அப்பு : அப்போதுதான் அண்ணு என் ஜன்மம் சாபல்யமாகும்! உங்க கல்யாணம் ஆனதும் முதல் காரியமாக அதைப் பாருங்கள். அதுவரை நான் உங்கள் கூட இருக்கவேண்டாமா?

விஸ்வம் : பணத்திற்கு ஏதோ வழி சொல்கிறேனென்றாயே?

[அப்பு விஸ்வத்தின் காதில் ரகசியமாய் ஏதோ சொல்லுகிறான்.]

அப்பு : ஒரு நல்ல அரமும் ஒரு சாவிக் கொத்தும் வேண்டும். இருந்தால் நூறு ரூபாய் நம்மோடதுதான்! மனது தயங்குகிறதோ?

விஸ்வம் : இப்போது தயக்கத்திற்கு இடமே இல்லை! சந்திரன் கிட்டே காலையிலே ஒரு ரூபாய் வாங்கித் தருகிறேன். சாவிக் கொத்தும் தருகிறேன். விஷயத்தைச் சாமர்த்தியமாய் முடிப்பது உன் பொறுப்பு. அகப்பட்டுக்கொண்டாயோ ஆபத்து!

அப்பு : அப்புவிற்கும் ஆபத்திற்கும் ரொம்ப தூரம்! நீங்கள் படியுங்கள். நாளை பார்க்கிறேன். அடிக்கடி இங்கே வருவதைப் பற்றி அந்த சாரங்கபாணி சந்தேகப்படுகிறான்! அவன் தலையைத்தான் இப்போது தடவியாகவேண்டும்!

காட்சி 15.

முதற் பரிசு!

[நரசிம்மையர் வீடு. காலை வேளை. நரசிம்மையர் போட்டிப் பந்தயக் குறிப்புகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர் மனைவி பார்வதி உள்ளிருந்து வருகிறாள்.]

பார்வதி : என்ன, தபால்காரன் வந்துவிட்டுப் போயிட்டானா? ஏதாவது கடிதம் உண்டா?

நரசிம்மையர் : ஓ! இரண்டு மூணு கடிதாசு வந்திருக்கு. முக்கியமாக, கோணமாணப் போட்டியிலே எனக்கு முதல் பரிசு கிடைச்சிருக்கு

பார்வதி : முதல் பரிசா? ஏதோ ஆயிரம் ரூபாய் அல்லவா பரிசுத் தொகை என்று சொன்னீர்கள்? நல்ல சமயத்திற்கு வந்தது! கல்யாணத்துக்குப் போய்வரும் செலவுகளுக்கு உதவும்.

நரசிம்மையர் : (ஒரு சிட்டிக்கை மூக்குப் பொடியை உறிஞ்சிய வாறே) அவசரப்படாதே! முதல் பரிசு ஆயிரம் ரூபாய்தான்! ஆனால் அதற்கு என்னோடு பந்து போட ஐயாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேர்கள் வந்துவிட்டார்கள். ஆகவே முதல் பரிசு இரண்டணா எட்டு தம்பிடி!

பார்வதி : இல்லாதபோனால் உங்க சமர்த்துக்கு லக்ஷ ரூபாயா பரிசு கிடைக்கும்?...இந்த முதல் பரிசு ரூபாய்க்கு இரண்டு வேளை மூக்குப் பொடி வாங்கி இழுங்கள்.

நரசிம்மையர் : உன் பேச்சிலே என் மிளகாய்ப்பொடி கலந்திருக்கு? ...இது சகஜம்!...அப்புறம் சம்பந்திப் பிராமணன் எழுதியிருக்கார், எல்லா ஏற்பாடுகளும் அநேகமாகப் பூர்த்தியாகிவிட்டதாம்.

பார்வதி : ஆமாம். இன்று திங்கட்கிழமையாகிவிட்டது. அடுத்த திங்கட்கிழமை இந்த வேளையில் தாலி கட்டியாகியிருக்குமே!

நரசிம்மையர் : சந்திரனும் கடிதம் எழுதியிருக்கான். அடுத்த வெள்ளிக்கிழமை சாயங்காலம் அவனும் அவன் நண்பன் ஒருவனும் இங்கு வந்து சேருவார்களாம். எல்லோரும் சேர்ந்து இங்கிருந்து ஞாயிற்றுக் கிழமை புறப்படவேண்டும்.

பார்வதி : அதெல்லாம் சரிதான். உங்க பாட்டிக்குத் துணையாய் யாரை விட்டுச் செல்வது? அந்தக் கிழம் ஒவ்வொரு நிமிஷமும் நம்மைப் பயமுறுத்திக்கொண்டிருக்கு. ஸ்வாமி பகவானே! இந்தக் கல்யாணம் முடியற வரை அவள் சுகமாயிருக்கவேண்டுமே என்று பயந்து நடுங்குகிறேன்.

நரசிம்மையர் : அடுத்த வீட்டு வெங்கடாசலத்தையும், அவர் மனைவியையும் இரண்டு நாட்கள் இங்கேயே இருந்து கவனித்துக்கொள்ளச் சொல்லப்போகிறேன். அவர்கள்தான் நமக்கு உதவி செய்யக்கூடியவர்கள்.

பார்வதி : நானும் வெங்கடாசலத்தின் மனைவி காமாட்சியிடம் ஒரு வார்த்தை சொல்லுகிறேன்.

நரசிம்மையர் : ஒரு முக்கிய விஷயம்; சொல்லிவிட்டுப்போயேன் !

பார்வதி : என்ன ?

நரசிம்மையர் : 'இதனால் சிலருக்கு மனது குதூகலிக்கிறது': திருமணமா ? நறுமணமா ?

பார்வதி : எங்கேயோ எலி அம்மணமாய் ஓடுகிறதாம். போய்க் கேளுங்கள்.

காட்சி 16

மணத்திற்கு மாலை

[மாருதி பவான் ஹோட்டல் மாடி அறை. விஸ்வம் உட்கார்ந்திருக்கிறான். அப்பு கையில் டிபனுடன் வருகிறான்.]

அப்பு : அண்ணா! இந்த ஹோட்டல் புரொப்ரைட்டர் சுத்தத் திராபைப் பயல் அண்ணா, சும்மா அதைச் செய் இதைச் செய் என்று கழுத்தை அறுக்கிறான்.

விஸ்வம் : எல்லோரும் சாரங்கபாணி மாதிரி சும்மா இருப்பான்களா ?

அப்பு : அவர் பாவம் நூறு ரூபாயை இழந்துட்டுக்கூட வாயைத் திறக்கவில்லை. அவர் பெட்டியை உடைத்துத்தானே அன்று நூறு ரூபாய் கொண்டு வந்தேன் !

விஸ்வம் : உஷ் ! இரையாதேடா ! அன்னிக்கு மாத்திரம் ரூபாய் கிடைக்கவில்லையோ, அந்த முனிசாமி ராஸ்கல் நம்ப ரகஸ்யங்களை அம்பலப் படுத்தியிருப்பானே ?

அப்பு : அவனைத்தான் சாமர்த்தியமாய் வேலையை விட்டே துலைத்து விட்டீர்களே ?...சந்திரன் எங்கே ? நீங்க எப்போ கிளம்பப் போகிறீர்கள் !

விஸ்வம் : அதெல்லாம் விபரமாக உன்னிடம் சொல்லத்தான் டிபன் கொண்டுவரச் சொன்னேன். அதற்காகவேதான் சில சாமான்கள் வாங்கிவர வேண்டுமென்ற சாக்கில் சந்திரனை வெளியே அனுப்பியிருக்கிறேன்.

அப்பு : இன்றைக்கு வியாழக்கிழமையாய் விட்டதே! நீங்கள் என்றைக்குக் கிளம்பப் போகிறீர்கள்?

விஸ்வம் : நாளைக்குச் சாயங்காலம் நானும் சந்திரனும் அவனுடைய ஊருக்குப் போகப்போகிறோம். அங்கிருந்து ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் கீழப்பாளையம் போகிறோம். என் தகப்பனார் தாயாரையும் அவசியம் கல்யாணத்திற்கு வந்தாக வேண்டும் என்று சொல்லி எழுதியிருக்கிறேன். அவர்களும் வந்துவிடுவார்கள். நீ ஞாயிற்றுக்கிழமையும் திங்கட்கிழமையும் ஹோட்டலில் லீவு வாங்கிக் கொண்டு ஞாயிற்றுக்கிழமை இரவு வந்து சேரவேண்டும். வரும் போது நிறைய ரோஜாப்பூ மாலைகள் வாங்கிக் கொண்டு வா ! எனக்குக் கல்யாண வேளையில் ரோஜாப்பூ மாலைகள் போட்டுக் கொள்ள மிகவும் ஆசை! விஷயங்களெல்லாம் ரொம்ப ரகசியமாக இருக்கட்டும் !

அப்பு: நீங்க சொல்லியா இதெல்லாம் எனக்குத் தெரிய வேண்டும்? நீங்க ஞாயிற்றுக்கிழமை என்னை அவசியம் எதிர்பாருங்கள். இன்றைக்கே உங்களுடன் வந்துவிடுவேன். ஆனால் தையல்காரன் ஜிப்பா தைத்துக் கொடுக்கவில்லை. சனிக்கிழமைதான் தருவானும்!

விஸ்வம்: உஷ்! சந்திரன் வரான். நீ போ. மேலும் கல்யாணத்திற்கு நீ எங்கள் கூடவே வந்தால் சந்தேகத்திற்கு இடமாகும்...ரோஜாப்பூ மாலை நினைவிருக்கட்டும்!

காட்சி 17.

அது என்ன தந்தி?

[கீழப்பாளையம் ராமசாமி ஐயரின் வீடு. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல். கல்யாணப் பந்தலில் பூர்வாங்க அலங்காரங்களை. ராமசாமி ஐயரின் பிள்ளையும் வனஜாவின் மூத்த சகோதரனுமான விஸ்வநாதன் காலைந்து சிப்பந்திகளுடன் மேல் பார்வை பார்த்துக்கொண்டு வருகிறான்.]

விஸ்வநாதன்: ஏய், சின்னத்தம்பி! அந்தத் தோரணங்களைத் தொய்ந்து போகவிடாமல் இழுத்துக் கட்டு!...ஏண்டா ராஜு, இன்னும் கொஞ்சம் பெரிய வாழை மரங்களாகப் பார்த்து வாசலில் கட்டக்கூடாது?

ராஜு: ஆகட்டுங்க எஜமான்!

சின்னத்தம்பி: சம்பந்தி வீட்டுப்பேரெல்லாம் வந்துட்டாங்க எஜமான்! மேலைத்தெரு பங்களா வீட்டிலேதான் இறக்கியிருக்கு!

விஸ்வநாதன்: அடேடே! நான் போய் விஜாரிச்சுட்டு வந்துடறேன் ராஜு, நான் திரும்பறதுக்குள்ளே பந்தல் ஜோடனைகளையெல்லாம் முடித்து வைக்கவேண்டும்!

[தந்திச் சேவகன் ஒரு எக்ஸ்பிரஸ் டெலிவரி கடிதத்துடன் வருகிறான்.]

தந்திச் சேவகன்: சார்! 'விஸ்வம் கல்யாண வீடு' என்று ஒரு கவர் இருக்குதுங்க.

விஸ்வநாதன்: நான்தான் விஸ்வநாதன். அவசரத்தில் என் பேரைத்தான் சுருக்கி எழுதியிருப்பாங்க யாரும். கொண்டா. இப்படி!

[கையெழுத்துப் போட்டுக் கடிதத்தை வாங்குகிறான். தந்திச் சேவகன் போகிறான்.]

விஸ்வநாதன்: ஒரு வேளை சுப்பாமணிதான் கொடைக் கானலிலிருந்து அனுப்பியிருப்பான்! இங்கிலீஷ் வெஜிடபிள்ஸ் வாங்கி புக் பண்ணச் சொல்லியிருந்தேன் ரயிலிலே புக்பண்ணிட்டுப் பாசை அனுப்பியிருப்பான்.

[கடிதத்தைப் பிரித்து வாசிக்கிறான். அவன் முகம் திகைப்புக் குறிகளைக் காண்பிக்கின்றது.]

ராஜு: என்னங்க எஜமான்? காயிதத்தைப் பார்த்த உடனே உங்க முகம் ஒரு மாதிரியாப் போயிருச்சுங்களே! ஏன்? பாசு இல்லீங்களா?

விஸ்வநாதன் : இது பாசு காயிதம் இல்லேப்பா! ஆனால் ஒரு பிசாசுக் காயிதமாப் போச்சு! உடனேபோய் உக்கிராணத்திலே இருக்கிற மாமா கங்காதரனைக் கூப்பிட்டுக் கொண்டு வா!

[ராஜு போய் சில விநாடிகளில் கங்காதரனை அழைத்து வருகிறான். விஸ்வநாதனும், கங்காதரனும் திண்ணை ஓரமாக உட்காருகிறார்கள்.]

கங்காதரன் : என்னடா விசு! ரொம்ப அவசரமாய்க் கூப்பிட்டாயாமே! செய்டின்னைத் திறந்துபோட்டுட்டு வந்திருக்கேன். என்ன விஷயம்?

விஸ்வநாதன் : உன் செய்டின் கிடக்கட்டும்! இங்கே ஒரு திருட்டுப் பயல் கையோடு அகப்பட்டிருக்கிறான்!

கங்காதரன் : யாருடா? என்னத்தைத் திருடினான்? கல்யாணச் சந்தடிக்கு முன்னாலேயே கையை நீட்டிட்டானா?

விஸ்வநாதன் : 'விஸ்வம் கல்யாண வீடு' என்று விலாசமிட்டு ஒரு எக்ஸ்பிரஸ் டெலிவரி கடிதம் வந்தது. எனக்குத்தானாக்கும் என்று நினைத்து அதை வாங்கிப் பிரித்து வாசித்தேன். அதற்குள்ளேயிருந்து ஒரு மகத்தான அயோக்கியத்தனம் விஸ்வரூபமெடுத்து விட்டது! இதை வாசித்துப் பார்!

[கங்காதரன் வாசிக்கிறார். பல்லைக் கடிக்கிறார்]

கங்காதரன் : அயோக்கிய நாய்! அவனை இப்போதே கட்டி வைத்துத் தோலை உரிக்க வேண்டும்! கிளம்பு! இந்தக் காகிதம் எழுதின ராஸ்கலையும் குடுமியைப் பிடித்து இழுத்துவந்து தலை கீழாய்க் கட்டி வைத்து உதைக்க வேண்டும்!

விஸ்வநாதன் : அவனை உதைச்சுட்டு அவனுக்கு வந்தனமும் செலுத்த வேண்டும்! அவன் கடிதம் எழுதவில்லையென்றால் இந்த விஷயங்களெல்லாம் நமக்குத் தெரியாமல் ஏமாந்து போயிருப்போம்!

கங்காதரன் : அதுவும் சரிதான். கிளம்பு. இப்போதே போய்ச் சிண்டைப் பிய்த்து எறிந்துவிட்டு வருவோம்!

விஸ்வநாதன் : இப்படித்தான் அவசரப்படக்கூடாது! இப்போதுபோய் குட்டையைக் கிளப்பினால் ஆசாமி தப்பித்துக்கொண்டு விடுவான்! 'எனக்கு விஷயம் ஒன்றுமே தெரியாது' என்று சாதித்துக்கூட விடுவான்! ஆகையால் இந்தக் காகிதம் வந்ததாக மூச்சே விடக்கூடாது! ஆசாமி மேலே ஒரு கண் வைத்துக் கொள்ளவேண்டும். நாளைக் காலையில் அந்த நாடகத்தை நடத்தவிட வேண்டும். சரியான சமயத்தில் ஆளைப் பிடித்து அமுக்க வேண்டும்! தெரிந்ததா? அது அப்பாவிற்குக்கூடத் தெரியக்கூடாது? அவர் எதையும் உளறி விடுவார். இதை ரூபிக்க இன்னும் ஒன்றிரண்டு நபர்களை இப்போதே வரவழைக்க வேண்டும்! நீ, உக்கிராணப் பொறுப்பை சங்கரனிடம் ஒப்படைத்து விட்டு, இந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டும்.

கங்காதரன் : ரைட்டோ! அப்படியானால் நீ இப்போதே சம்பந்திகள் இறங்கி இருக்கும் இடத்திற்குப் போய்ப் பார்த்துவிட்டு ஆசாமிமேல் ஒரு கண்ணையும் வைத்துவிட்டு வா!

காட்சி 18.

மாப்பிள்ளைக்குப் பைத்தியம்!

[மணப்பந்தல். முகூர்த்த வேளை நெருங்கிக் கொண்டிருக்கிறது. நரசிம்மையர், கோபாலய்யர், விஸ்வம் எல்லோரும் ஒரு பக்கமாக உட்கார்ந்திருக்கிறார்கள். விஸ்வநாதன், கங்காதரன் முதலியோர் சற்றுத் தள்ளி நின்று கொண்டிருக்கிறார்கள். சந்திரன் காசி யாத்திரை போகத் தயாராய் ராமசாமி ஐயருடன் வருகிறான். மேளம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. தந்திச் சேவகன் சில தந்திகளுடன் வருகிறான்.]

தந்திச் சேவகன் : சார், சந்திரன் கேர் ஆப் ராமசாமி என்பது யார்?

விஸ்வம் : சாக்ஷாத் மாப்பிள்ளைதான்! எல்லாம் கல்யாண வாழ்த்துத் தந்திகள் தானே?

தந்திச் சேவகன் : கிரீட்டிங்ஸ் தந்திகளையெல்லாம் பின்னாலே கொண்டு வராங்க சார்! அது நிறைய வந்து குவிஞ்சு கிடக்குங்க!

சந்திரன் : ஒருவேளை ரிசல்ட் தந்தியாக இருக்கும்! பட்டணத்திலே இருக்கும் பாலுவை, உனக்கும் எனக்கும் தந்தி அடிக்கச் சொல்லியிருந்தேன்!

[கையெழுத்தைப் போட்டுத் தந்தியை வாங்கிப் பார்க்காமல் மடியில் சொருகிக் கொள்கிறான்.]

விஸ்வம் : தந்தியை இப்போ பார்க்கப் பயமாயிருக்காக்கும்! சரிதான்! இந்தாப்பா! அவர் பார்த்த பிறகு நீ இனிமேல் வரவேண்டாம். இந்தா எட்டணா.

தந்திச் சேவகன் : விஸ்வம் என்பவருக்கு ஒரு தந்தியும் நரசிம்மையர் என்பவருக்கு ஒரு தந்தியும் இருக்கு.

விஸ்வம் : நான்தான் விஸ்வம்! அவர்தான் நரசிம்மையர்!

[கையெழுத்துப் போட்டு இரண்டு தந்திகளையும் வாங்குகிறான். நரசிம்மையர் தந்தியை அவரிடம் சேர்க்கிறான். அவர் அதை வாங்கி, பிரிக்காமல் மடியில் சொருகிக் கொள்கிறார்.]

கோபாலய்யர் : தந்தி என்னவென்று பார்க்கவில்லையா?

நரசிம்மையர் : வேண்டாம்! வேண்டாம்! ஊரிலே ஒரு கிழவியை விட்டு விட்டு வந்திருக்கிறேன். அவளைப் பற்றியதாக இருக்கக் கூடாதென்று பயப்படுகிறேன். முகூர்த்தம் கழிந்தவுடன்தான் பார்க்க வேண்டும்!

விஸ்வம் : நீங்கள் எல்லோரும் பார்க்காதபோனால் நான் பார்க்கிறேன்! பரீட்சை நிச்சயமாய்ப் பாஸாகியிருக்கும்!

[தந்தியைப் பார்க்கிறான்]

கோபாலய்யர் : என்னடா! மூஞ்சி சுருங்குகிறது?

விஸ்வம் : ஒன்றுமில்லையப்பா! இரண்டு பார்ட்டுகளில் போச்சு!

கோபாலய்யர்: நீ ராஜபார்ட்டுக்காரன் மாதிரி திரியற போதே தெரியும்!

[சந்திரன்: காசியாத்திரை கிளம்புகிறான். காசியாத்திரை முடிந்து மேடையை நெருங்கும்போது திடீரென்று நிற்கிறான். தலையைக் கலைத்துக் கொள்கிறான்.]

சந்திரன்: [இரைந்து பாடுகிறான்]

சிங்காரி ஒய்யாரி
இந்த ஜகத்தை மயக்க வந்த சிங்காரி

ஹா! ஹா! என்ன அழகு! என்ன வசீகரம்! எனக்கென்றே இப் பூதலத்தில் பிறந்திருக்கும் ஏந்திழையாளே! இதோ இந்த அரக்கர்களிடமிருந்து உன்னை மீட்டு என் சாம்ராஜ்யத்திற்குத் தூக்கிச் செல்கிறேன்.

[மண மேடையை நோக்கிப் பாய்கிறான். புரோகிதர் பிடித்துக் கொள்கிறார். 'பைத்தியம்! பைத்தியம்!' என்ற கூக்குரல்கள் எழுகின்றன.]

சந்திரன்: யாருக்குப் பைத்தியம்? நீங்கள்தான் பைத்தியங்கள்! உங்கள் தாத்தாக்கள் பைத்தியங்கள்! எந்த ராவணன்டா என்னைத் தடுப்பது! இதோ வில்லை முறித்து என் ஜானகியை நான் அடைவேன்! (பாடுகிறான்)

காம சுந்தராங்கி உனது
காதலால் ஏங்கி மனது
காற்றாய்ப் பறக்குதடி!... இதோ வில்லை முறித்தேன்

(புத்தம் புது அங்கவஸ்திரத்தைக் கிழிக்கிறான்)

விஸ்வம் : அடடா! இவனுக்குக் கொஞ்ச நாளாவே சித்தப் பிரமை உண்டு! இன்றைக்குப் பார்த்துத் திடீரென்று ஜாஸ்தியாய் விட்டது!

ராமசாமி : (நரசிம்மையரைப் பார்த்து) நல்ல ஆள் ஐயா, நீர்! பைத்தியத்தைத் தலையில் வைத்துக் கட்டலாமென்று பார்த்தீரோ? கடவுள் காப்பாற்றினாரய்யா! மோசக்கார ஆசாமி!

நரசிம்மையர் : ஐயையோ! அவனுக்கு இத்தகைய கோளாறே கிடையாதே! என்ன எழவோ, புதிதாக இருக்கே! ஒன்றும் புரியவில்லையே!

ராமசாமி : உமக்கேனய்யா புரியும்? நீர் காரியப் பைத்தியம்! உம்ம பிள்ளை நிஜப் பைத்தியம்! நல்லவேளை என் பெண் தப்பினாள்!

[நரசிம்மையர் அவமானத்துடன் சந்திரனை இழுத்துக் கொண்டு தான் தங்கியிருக்குமிடம் போகிறார்.]

விஸ்வநாதன் : அடாடா! எவ்வளவு பணம் செலவழித்து என்னென்ன ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கிறோம்? கடைசியில் கல்யாணம் இல்லாமல் போய்விட்டதே! அவ்வளவும் வேஸ்ட்!

[விஸ்வம் முன்னால் வருகிறான்.]

விஸ்வம் : (ராமசாமியைப் பார்த்து) சார்! நான் ஒரு விஷயம் சொல்லுகிறேன், கேட்கிறீர்களா? உங்களுக்கும் இந்த ஏற்பாடுகளெல்லாம் வெட்டியாகாமலிருக்கும்!

ராமசாமி : என்ன? எப்படி?

விஸ்வம் : நான்தான் சந்திரனுடைய நண்பன் என்று உங்களுக்குத் தெரியுமே! என் தாயார் தகப்பனார் எல்லோரும் இந்தக் கல்யாணத்திற்கு வந்திருக்கிறார்கள். இதே முகூர்த்தத்தில் நான் உங்கள் பெண்ணை மணக்கத் தயாராக இருக்கிறேன்! உங்களுக்கும் எத்தகைய அவமானமும் ஏற்பட இடமில்லாமல் போய்விடும்.

ராமசாமி : (விஸ்வநாதனைப் பார்த்து) விசு! என்ன சொல்கிறாய்?

விஸ்வநாதன் : இதோ சொல்கிறேன். (பின் பக்கம் திரும்பிக் கண்ணைக் காட்டுகிறான். நான்கு பேர்கள் ஓடிவந்து விஸ்வத்தைப் பிடித்துக் கொள்கிறார்கள்.)

விஸ்வம் : ஐயையோ! ஐயையோ! என்னை எதற்குப் பிடித்துக் கட்டுகிறீர்கள்? அப்பா! இங்கே வாங்களேன்!

கங்காதரன் : அயோக்கிய ராஸ்கல்! என்னடா அப்பாவும் அம்மாவும்?

ராமசாமி : கங்காதரா! விசு! இதென்னடா நாடகம்? நம்ப வீட்டிற்கு வந்திருக்கிற மனுஷ்யர்களை ஏண்டா அவமானப்படுத்துகிறீர்கள்?

விஸ்வநாதன் : அப்பா, இந்த நாடகம் சிறிது நேரத்தில் புரியும் உங்களுக்கு! மாப்பிள்ளை சந்திரனுக்குப் பைத்தியமுமில்லை ஒன்றுமில்லை! பாவம்! இந்த அயோக்கியன் சொன்னபடி ஆடியிருக்கிறான்! அவ்வளவுதான்!

ராமசாமி : என்ன, நிஜமாகவா? உனக்கு எப்படித் தெரியும்?

கோபாலய்யர் : என்னடா விஸ்வம்? எனக்கு உன்னாலே மானமே போய்விட்டதடா! இதெல்லாம் என்ன கூத்தடா?

விஸ்வநாதன் : அப்பா! நேற்று சாயந்திரம், இவனுக்கு வந்த கடிதம் தவறுதலாக என் கையிலே கிடைத்தது. அதைப் பார்த்த பிறகுதான் எனக்கு இவனுடைய சூழ்ச்சிகள் புரிந்தன. அந்தக் காகிதத்தை வாசிக்கிறேன் கேளுங்கள்!

(பையிலிருந்த காகிதத்தை எடுக்கிறான்.)

ராமசாமி : யார் எழுதியிருக்கிறார்கள்?

கங்காதரன் : இவனோட சிநேகிதன் இன்னொரு கேடிப் பயல்! யாரோ அப்புவாம்!

விஸ்வநாதன் : படிக்கிறேன் கேளுங்கள்......அண்ணா அவர்கள் பாத கமலங்களில் அடியேன் அப்பு அனேக தண்டனிட்டு எழுதுவது:— மாருதி பவான் ஹோட்டல் முதலாளி ஆஞ்சனேயராவ் மகா அயோக்கியன்! கடைசி நிமிஷத்தில் எனக்கு லீவு தரமுடியாது என்று சொல்லிவிட்டான்! ஆகையால் உங்கள் விமரிசையான திருமணத்திற்கு விஜயம் செய்ய இயலாது என்று நினைக்கும்போது விசனமாக இருக்கிறது. உங்கள் திருமணம் என்ன சாதாரணத் திருமணமா? அதில்தான் எத்தனை தந்திரம், எத்தனை சூழ்ச்சிகள் அடங்கியிருக்கின்றன? முகூர்த்தத்தின்போது; சந்திரன் எப்படியும் பைத்தியம்போல் நடித்து உங்களுக்குக் கல்யாண சான்ஸை அளித்துவிடுவான் என்பது நிச்சயம்! பாவம் பயந்தாங்குள்ளி! அவனைத்தான் பிசாசு வேஷம் போட்டு நானும் முனிசாமியும் ஐந்து நாள் இரவுகள் சேர்ந்தாற்போல் பயமுறுத்தியிருக்கிறோமே? நீங்கள் பெரிய ஹீரோ மாதிரி வனஜாவிற்குத் தாலி கட்டப்போகிறீர்கள்! சாரங்கபாணியின் நூறு ரூபாயை நாம்தானே கள்ளச் சாவி போட்டு எடுத்திருக்கிறோம்? பாவம், அவன் பரிசகாரக் குப்புசாமி மேல் சந்தேகப்பட்டுப் போலீஸில் ரிப்போர்ட் பண்ணியிருக்கிறானும். போகட்டும். முனிசாமியை டிஸ்மிஸ் செய்ய வைத்தீர்களே? அதுவே உங்கள் பிரமாத வேலை! உங்கள் விருப்பம்போல் நிறைய ரோஜாப்பூ மாலைகள் வாங்கி வந்து உங்களுக்குப் போட்டு அழகு பார்க்க முடியவில்லை. உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். நீங்கள் கல்யாணக் குஷியில் என்னை ஸ்டுடியோவில் சேர்த்துவிடும் விஷயத்தை மறந்திருக்கமாட்டீர்களல்லவா? தங்களுக்கும் ஸ்ரீமதி வனஜாவிற்கும் வாழ்த்துக்கள்.

தங்கள், அப்பு.

ராமசாமி : அட அயோக்கிய நாயே! சந்திரனை ஏமாற்றியா வனஜாவைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளத் திட்டமிட்டாய்? நாங்களெல்லாம் அப்படி ஏமாந்தவர்களென்று நினைத்தாய்?

கங்காதரன் : இந்தக் கடிதம் மாத்திரம் வராமலிருந்தால் நாம் நிச்சயமாய் ஏமாந்து போயிருப்போம்! அவமானத்தைத் தவிர்க்க இந்தக் கழுதைக்குக் கல்யாணத்தை நடத்தியே தீர்த்திருப்போம்!

விஸ்வ. : இதெல்லாம் பொய்! அபாண்டம்! கட்டுக் கதை!

விஸ்வநாதன் : ஓஹோ...ஏய் முனிசாமி! இங்கே வா!

[மறைவிலிருந்து முனிசாமி வருகிறான்]

முனிசாமி: (விஸ்வத்தைப் பார்த்து) என் சாமி இன்னும் மறைக்கப்பார்க்கிறே? நான் உனக்கு மண்டையோடு கொடுத்த சமாசாரமெல்லாம் இவங்க கிட்டே சொல்லிட்டேன்! ஒரு ஏழையை வேலையிலிருந்து போகவச்சியில்ல? படு அவஸ்தை இப்போ!

கங்காதரன்: ஓய், சாரங்கபாணி! இங்கே வாரும்!

[சாரங்கபாணி வருகிறார்.]

சாரங்கபாணி: இவனை நன்றாகத் தெரியுமே! இவன் ஒரு பெரிய கேடியல்லவா? மெஸ்ஸிலே வேலை பார்த்த அப்பு என்கிற பையனைக் கைக்குள்ளே போட்டுக்கொண்டு அல்வாவாய் முழுங்கினான்! திருட்டுப் பயல்! என் கைப்பெட்டியிலிருந்து நூறு ரூபாயைத் திருடியிருக்கிறானே!

கோபாலய்யர்: அட பாவி! இப்படி மானம் கெடவா என் வயிற்றில் பிறந்தாய்?

[மயக்கமாய்க் கீழே விழுகிறார்.]

கங்காதரன்: அடேடே! உள்ளே யாரப்பா! ஏய் சுந்தரம், கொஞ்சம் காப்பி கொண்டா! சீக்கிரம்.

[சிங்கப்பூர் நடராஜய்யரின் நண்பர் சுந்தரம் ஒரு தம்ளரில் காப்பி கொண்டு வருகிறார். கோபாலய்யரைப் பார்த்தவுடன் அவர் திடுக்கிடுகிறார். காப்பித் தம்ளரைக் கீழே வைத்துவிட்டுப் போகிறார். ராமசாமி, கங்காதரன் இருவரும் கோபாலய்யரை மூர்ச்சை தெளிவிக்கிறார்கள். இந்தச் சமயத்தில் பூமாலைகளுடன் அப்பு வருகிறான். விஸ்வம் கட்டப்பட்டு நிற்பதைக் கவனியாமல் மாலைகளைக் கழுத்தில் போடுகிறான்.]

அப்பு: அண்ணா! கங்ராசுலேஷன்ஸ். முகூர்த்தம் ஆயிட்டாப் போலிருக்கு! பறந்துதான் ஓடிவந்தேன்! ஆனால் பஸ் பஞ்சர் ஆயிடுத்து! நேற்றுப் போட்ட காயிதம் கிடைத்ததா? கடைசியில் ராயர் லீவு கொடுத்துட்டார்!

விஸ்வம்: உன் காயிதம்தான் என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கியது!

[அப்பு திடுக்கிடுகிறான். முனுசாமி அவனையும் பிடித்துக்கட்டுகிறான்.]

கங்காதரன்: இரண்டு திருட்டுப் பயல்களும் அகப்பட்டுட்டான்கள்! ராமசாமி! சீக்கிரம் போய் விஷயத்தைச் சொல்லி நரசிம்மையரையும் சந்திரனையும் அழைத்து வா! முகூர்த்த நேரம் கழிவதற்குள் தாலி கட்டிவிடலாம். அப்புறம் இந்த அயோக்யன்களைப் போலீஸ்லே ஒப்படைக்கலாம்!

[சிங்கப்பூர் நடராஜய்யரும் சுந்தரமும் வருகிறார்கள்.]

ராமசாமி: என்ன நடராஜா! பால் வேணுமா? காய்கறி வேணுமா?

நடராஜன்: இல்லே! வேறு விஷயம்! இதோ மயக்கம் தெளிந்து நிற்கிறாரே இவர்தானே கோபாலய்யர்?

விஸ்வநாதன்: ஆமாம்!

சுந்தரம் : அதோ நிற்கிறானே, அவன்தானே கோபாலய்யர் பையன் விஸ்வம் ?

கங்காதரன் : ஆமாம் ! உங்க ரெண்டு பேரையும் வேறு ஏமாற்றி இருக்கார்களா ?

நடராஜய்யர் : அதை ஏன் கேட்கிறீர்கள் வயிற்றெரிச்சலை! இரண்டு மாதங்களுக்கு முன்னாலே, மணி புரத்திலே வந்து, இரண்டாயிரம் ரூபாயையும் வாங்கிக் கொண்டு என் பெண் எச்சுமியைத் தன் பிள்ளைக்குக் கல்யாணம் செய்து கொள்வதாயும் சொல்லிவிட்டுப் போனார். இப்போது நம்பிக்கைத் துரோகம் பண்ணும் முறையில் உங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்து வைக்க நினைக்கிறார்.

சுந்தரம் : எச்சுமியைத் தன் பிள்ளைக்குக் கலியாணம் பண்ணிக்கிறேன் என்று எழுதிக் கூடக் கொடுத்திருக்கிறார். இதோ அந்தக் கடிதம். அவர் கொடுத்த புகைப் படம் எல்லாம்!

[சுந்தரம் நடராஜய்யரிடம் கண்ணைக் காட்டுகிறார்.]

கோபாலய்யர் : ஐயையோ ! மோசம் ! இவரல்லவா, தான் சமையல் காரன் என்பதை மறைத்து, பெரிய கோடீஸ்வரர் என்று சொல்லிக் கொண்டார்? நானல்லவா நூறு ரூபாயைக் கொடுத்துவிட்டு வந்தேன் !

சுந்தரம் : ஏன் ? லக்ஷ ரூபாயைக் கொடுத்தேன்னு சொல்லக்கூடாது? உம்ம பிள்ளையைப் போலேதானே ஐயா நீரும் புளுகுவீர் ? இப்போ இந்த முகூர்த்தத்திலே எங்க எச்சுமிக்கு உங்க பிள்ளையாண்டான் தாலிகட்ட வேண்டும். இல்லையோ, இந்த க்ஷணத்திலேயே இரண்டாயிரம் ரூபாயைக் கீழே வைக்க வேண்டும் !

விஸ்வநாதன் : கோபாலய்யர்வாள்! என்ன சொல்கிறீர்கள்? போனால் போகிறது ! கல்யாணத்திற்கு ஒப்புக்கொண்டால், சாரங்கபாணியிடம் சொல்லிப் போலீஸுக்குக் கம்ப்ளெயிண்டு பண்ணச் சொல்லாமல் இருக்கிறேன். என்ன விஸ்வம், சரிதானா?

விஸ்வம் : என்ன பண்ணினாலும் சரி ! என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பாமலிருந்தால் சரி !

கங்காதரன் : அப்படியானால் இரண்டு முகூர்த்தமும் இப்போதே நடக்கட்டும் ! நடராஜய்யர் ! போய் தூக்குச் சட்டியைத் தூர எறிஞ்சுட்டு வாரும் சம்பந்தி மாதிரி!

நடராஜய்யர் : இதோ! ஒரு நிமிஷத்தில் பெண்ணை அழைத்துக் கொண்டு வரேன்.

[நடராஜய்யரும் சுந்தரமும் போகிறார்கள். நரசிம்மையரும் சந்திரனும் வருகிறார்கள்.]

விஸ்வம் : சந்திரா! என்னை மன்னித்து விடு! உன்னை ஏமாற்ற நினைத்தேன்! நான் ஏமாந்தேன்!

(தடாலென்று கீழே விழுகிறான். நரசிம்மையரும் சந்திரனும் அவனைத் தூக்குகிறார்கள். அவர்கள் இருவர் மடியிலிருந்தும் தந்திக் கவர்கள் விழுகின்றன. கங்காதரன் பிரித்து வாசிக்கிறார்.)

கங்காதரன் : (ஆச்சரியத்துடன்) அடேடே! சந்திரன் மூனு பார்ட்டிலேயும் ஸெகண்டு க்ளாஸ் வாங்கிப் பாஸ் பண்ணி யிருக்கான்!... அடேடே! நரசிம்மையருக்குப் போட்டியிலே முதல் பிரைஸ் பத்தாயிரம் விழுந் திருக்காம். வெங்கடாசலம் என்பவர் தந்தி அடித்திருக்கிறார்!

நரசிம்மையர் : இந்தத் தந்தியைத்தானு என்ன வோ என்று நினைத்துப் பயந்தேன்!... ராமசாமி ஐயர்வாள்! இந்தப் போக்கிரி விஸ்வம் சந் திரனை ஏமாற்றி இருக்கிறான்! விஷயத்தை எல்லாம் இப்போதுதான் கேட் டேன்.

கங்காதரன் : அதற்குச் சரியான தண்டனை இப்போ நடக்கப் போகி றது! நடராஜய்யருக்கு மாப்பிள்ளையாகப் போறான்!

விஸ்வநாதன் : சிநேகிதர்களுக்குள்ளே இப்படி யல்லவா ஒற்றுமை யிருக்க வேண்டும்! ஒரே முகூர்த்தத்தில் கல்யாணம்!

கங்காதரன் : இதைப் பெரிய கலாட்டாக் கல்யாணமாக வல்லவா பண்ணி விட்டார்கள்?

புரோகிதர் : சீக்கிரம் மணையில் வந்து உட்காருங்கள்!... மேளம், மேளம்!

சுந்தரம் : (ரகசியமான குரலில் நடராஜய்யரிடம்) நான் தான் அப் போதே சொன்னேனே, இந்தப் பித்துக் குள்ளி நம்மிடம் வந்து சிக்குமென்று! இரண்டாயிரம் ரூபாய் என்று ஒரு வேட்டுப் போட்டதிலே நடுங்கிட்டான்.

[மேளம் ஒலிக்க ஆரம்பிக்கிறது. மணமேடையில், சந்திரன்—வனஜா ஜோடியும், விஸ்வம்—எச்சுமி ஜோடியும் அமருகிறார்கள்.]

காட்சி 19.

இட்டார்க்கு இட்ட பலன்!

[மாலை நான்கு மணி. நலங்கிற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன.]

விஸ்வநாதன் : நலங்கு இல்லாத கல்யாணமா? ஏய் எச்சுமி! நீ தான் ஒரு பாட்டுப் பாடேன்!

[எச்சுமி தலையைக் குனிந்து கொள்கிறாள்.]

கங்காதரன் : ஏன் அப்பா, விஸ்வம்! நீ தான் ஒரு பாட்டுப் பாடேன்! நலங்கிட வரும் நாயகியேன்னு பாடேன்!

விஸ்வம் : (பெரு மூச்சுடன்) நான் பிழைத்த பிழைப்பே பாட்டாகத் தான் போச்சு!

விஸ்வநாதன் : நீ எவ்வளவு வேண்டுமானாலும் இரைந்து எச்சுமியைத் திட்டலாம்! அவள் கோபித்துக் கொள்ள மாட்டாள்!

கங்காதரன் : இவள் சாது இல்லே! அவள் காதுதான் டமாரச் செவிடு! அப்பு கிட்டே பேசின மாதிரி ரகசியமெல்லாம் பேச முடியாது!

விஸ்வம் : ஐயையோ! நிஜமாகவா?

கங்காதரன் : நீ இன்னும் அவள் காலுக்கு கலங்கிடவில்லையோ?...

விஸ்வம் : ஏன்?

விஸ்வநாதன் : அவள் வலது கால் ரப்பர் கால்!

விஸ்வம் : ஐயையோ! என்னை ஏமாற்றி விட்டார்களே!

கங்காதரன் : நீ மாத்திரம் சந்திரனை ஏமாற்றுமல் என்ன செய்தாயாம்! உனக்கு இதுதான் சரியான தண்டனை! ஏதாவது கூச்சல் போட்டாயோ, சாரங்கபாணி நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிடுவார்!

விஸ்வம் : வேண்டாம்! வேண்டாம்! எனக்கு இந்தத் தண்டனை போதும்! நான் இனி மேல் ஒரு துரும்பிற்கும் வஞ்சகம் நினைக்க மாட்டேன்!

கங்காதரன் : (பாடுகிறான்)

கலாட்டா முடிஞ்சு போச்சு!
கல்யாணம் ஆயிப் போச்சு!
காலிப் பயல் விஸ்வம் திருந்தலாச்சு!
காலில்லாத எச்சுமி களிப் படையலாச்சு!

[மேளக்காரன் இந்தப் பாட்டைத் திரும்ப வாசிக்கிறான்]

[முற்றும்]

★